இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 8 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 32 – வியாழக்கிழமை 17 ஆகஸ்ட் 2023 – சென்னை 16 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 8 : Thiruvalluvar Year - 2054 - Aadi 32 - Thursday 17 August 2023 - Chennai 16+8 Pages ₹ 5.00





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.8.2023) தலைமைச் செயலகத்தில், கனடா நாட்டின் வின்னிபெக்கு நகரில் நடைபெற்ற “காவல் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் – 2023” போட்டியில் கலந்துகொண்டு பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு காவல் துறை வீரர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். இந்த நிகழ்வின்போது, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல் துறை கூடுதல் இயக்குநர் (ஆயுதப்படை) எச்.எம்.ஜெயராம் ஆகியோர் உடனிருந்தனர்.

## ‘நீட்’டை திணிக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து

# ஆக. 20ல் மாபெரும் உண்ணாவிரத அறப்போர்!

## கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி கூட்டறிக்கை !

**சென்னை, ஆக. 17-**

**‘நீட்’டை திணிக்கும் ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து ஆக. 20ல் மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெறும் என்று கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

‘நீட்’டை திணிக்கும் ஒன்றிய, அரசு ஆளுநரைக் கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போர் குறித்து கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி வெளியிட்டுள்ள கூட்டறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து - அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது.

மாணவர்களை மட்டுமன்றி, பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து, கழகத் தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி சார்பில், தமிழ்நாடு முழுவதும், வரும் ஆகஸ்ட் 20 அன்று அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் உண்ணாவிரத அறப்போரை நடத்தவுள்ளோம்.

**‘நீட்’ மரணங்களுக்கு ஒன்றிய அரசும் ‘நீட்’ காவலர் ஆளுநருமே காரணம்!**

அரியலூர் அனிதாவில் ஆரம்பித்த நீட் மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது. செல்வசேகர் அவர்களின் திருவுடலுக்கு மரியாதை செய்யச் சென்றபோது, யாரை தேற்றுவது - யாருக்கு ஆறுதல் சொல்வதென்று கேட்கும் அளவுக்கு அங்கு எல்லோரும் சோகத்தில் உறைந்திருந்தார்கள். நமக்கே அங்கு ஆறுதல் தேவை என்ற நிலைதான் இருந்தது.

இந்த மரணங்கள் அனைத்திற்கும், ஒன்றிய பா.ஜ.க. அரசும் - அவர்களுக்கு அடிமைச்சேவகம் செய்யும் அ.தி.மு.க.வினரும் - நீட் பாதுகாவலர் ஆளுநர் ரவியுமே காரணம்.

ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு எல்லாம் ஆளுநர் ரவி முட்டுக்கட்டை போட்டு வருகிறார்.

> **கல்வி என்பது பொதுப்பட்டியலில் உள்ளது. ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும், முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்!**

நம் மாணவச் செல்வங்களின் மரணம், ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்கவில்லை.

**‘நீட்’ தேர்வுக்கு பல லட்சம் செலவு செய்தவர்களும் அதை எதிர்க்கிறார்கள்!**

“நீட் மசோதாவில் கையெழுத்துப் போட மாட்டேன்” என்று கூறிய ஆளுநரிடம், சேலத்தைச் சேர்ந்த அம்மாசியப்பன் ராமசாமி நேருக்கு நேர் கேள்வி எழுப்பியபோது, அதற்குப் பதில் அளிக்க முடியாத ஆளுநர் அவரிடம் இருந்த மைக்கை பிடுங்கி உட்காரச் சொல்கிறார்.

இத்தனைக்கும் ஆளுநரிடம் கேள்வி எழுப்பிய அம்மாசியப்பன் ராமசாமி அவர்களின் மகள் நீட் தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். நீட் தேர்வில் வெற்றிபெற்றவர்கள், பயிற்சி மையம் சென்று லட்சங்கள் செலவு செய்து தேர்வில் வென்றவர்கள்கூட நீட்டை எதிர்க்கிறார்கள்.

நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு அனுப்பி வைத்த பிறகு, ஆளுநர் எப்படி அதில் கையெழுத்திட முடியும்?

**பழனிசாமி அடிமை ஆட்சியில் தமிழ்நாட்டுக்கு வந்த ‘நீட்’ தேர்வு!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியின் போது அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது வராத நீட், எடப்பாடி பழனிச்சாமியின் அடிமை ஆட்சியின்போது தமிழ்நாட்டுக்குள் வந்தது.

நீட் விலக்கிற்காக 2017-ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாவை, குடியரசுத்தலைவர் நிராகரித்ததை, 21 மாதங்கள் வரை, தமிழ்நாடு சட்டப்பேரவைக்குத் தெரிவிக்காமல் அ.தி.மு.க. அடிமைகள் மறைத்தனர். ஒன்றிய உள்துறை அமைச்சகம், சென்னை உயர்நீதிமன்றத்தில் கூறியபோதுதான், அது தமிழ்நாட்டுக்கே தெரியவந்தது.

இப்படிப்பட்ட துரோக வரலாற்றைக் கொண்ட எடப்பாடி பழனிசாமிக்கோ, பிற அ.தி.மு.க. அடிமைகளுக்கோ நம்மை விமர்சிக்க எந்த அருகதையும் இல்லை.

**‘நீட்’ தேர்வை தொடர்ந்து எதிர்க்கும் தி.மு.கழகம்!**

நீட் தேர்வுக்கு எதிராக, தமிழ்நாட்டில் தொடர்ச்சியாகக் குரல் எழுப்புகிற இயக்கமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் நலன் சார்ந்த அனைத்து

# திட்டங்களையும் தாமதமின்றி செயல்படுத்த வேண்டும்!

## மாநில அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு - கண்காணிப்புக் குழு கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, ஆக. 17-**

**“திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் நலன் சார்ந்த அனைத்து திட்டங்களையும் தாமதமின்றி செயல்படுத்த வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநில அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அறிவுறுத்தினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (16.8.2023) தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான மூன்றாவது மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (DISHA) கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (DISHA) மாநில அளவிலான மூன்றாவது ஆய்வுக் கூட்டம் இன்றைய தினம் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு நம் மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக வருகை புரிந்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் நன்றியை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை ரெவ்யூ மீட்டிங்குகளாக அமைந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். எந்த திட்டமாக இருந்தாலும், அதனைக் கண்காணித்துக் கொண்டே இருந்தால்தான் அது தொய்வில்லாமல் தொடரும். அந்த வகையில், மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் பங்கை மிகமிக முக்கியமானதாகக் கருதுகிறேன்.

**அரசின் சார்பில் ஆலோசனைப் பெற அமைக்கப்பட்ட குழுக்கள்!**

நமது அரசின் சார்பில் ஆலோசனைகளைப் பெற பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு, இந்த அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில்தான், இந்தக் குழுவும் சிறப்பான பணிகளை செய்து வருகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மற்றும் வேளாண்மை உழவர் நலத் துறை ஆகிய நான்கு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து இன்று ஆய்வு செய்ய இருக்கிறோம்.

உங்களிடம் முழுமையான புள்ளிவிபரங்கள் இருக்கும். இருப்பினும், சில முக்கியத் தகவல்களை மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

- தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்புக்காக 2023–2024ஆம் ஆண்டில் புதியதாக 10 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்குச் சுழல் நிதியாக வழங்க 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10 ஆயிரம் சுய உதவிக்குழுக்களுக்கு நிதி உதவியும் - பயிற்சிகளும்!**

5 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக 75 கோடி ரூபாயும், 3 ஆயிரம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு வறுமை நிலை குறைப்பு நிதியாக 7.50 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 10 ஆயிரம் புதிய சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்கவும், ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்க 3.30 கோடி ரூபாய், 12,287 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் 388 வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் அலுவலக நிர்வாகிகளுக்கு ஆளுமை மற்றும் நிதிமேலாண்மை குறித்த புத்தாக்கப் பயிற்சி வழங்க

தொடர்ச்சி 3ஆம் பக்கம்


இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 17-08-2023


# பலி வாங்கும் 'நீட்' 2

பயிற்சி மையங்கள் பிழைக்கவே இந்த நீட் தேர்வு நடத்தப்படுகிறது என்பதை ஆளுநரிடம் கேள்வி எழுப்பிய சேலம் மாணவியின் தந்தை அம்மாசியப்பன் ராமசாமியே விளக்கிவிட்டார். "நான் சேலம் இரும்பாலையில் பணியாற்றுகிறேன். என்னுடைய மகள் மாநில அளவில் நீட் தேர்வில் 878-வது இடத்தில் உள்ளார். முதல்முறை தேர்வெழுதி 623 மதிப்பெண் பெற்றுள்ளார். செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் எனது மகள் நேற்று சேர்க்கைப் பெற்றுள்ளார்.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக, தமிழகத்தில் நீட் தேர்வு தேவையில்லை என்று கூறி வருகிறோம். ஆனால், அந்த தேர்வை எப்படி அணுகுவது என்று தெரியாமல்தான், தமிழக மாணவர்கள் திணறிக் கொண்டிருந்தனர். இன்றைக்கும் பள்ளிக்கூடங்களில் சொல்லித் தரப்படும் பாடங்களின் அடிப்படையில், நீட் தேர்வில் மாணவர்கள் தேர்ச்சிப் பெறவே இல்லை. அதன் பின்னணியில் ஒரு சதி இருக்கிறது.

**நீட்தேர்வுக்குப்பின்னால், ஒவ்வொருபள்ளியும், தனியார்நிறுவனங்களுடன் இணைந்துதான், நீட் தேர்வுக்கும் மாணவர்களை தயார் செய்து வருகின்றனர். இப்படி நடப்பதால், மாணவர்கள் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். காரணம், இந்தத் தேர்வில் எந்தப் பாடத்தில் இருந்து என்ன கேள்வி கேட்கப்படும் என்பது தெரியாமல், குழந்தைகள் சிரமத்தை சந்திக்கின்றனர். நீட் தேர்வால், தமிழகத்தில் இதுவரை 15 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.**

இந்த ஆண்டு நீட் தேர்வில் அதிக மதிப்பெண் என்று பார்த்தால், 720 மதிப்பெண் தமிழக மாணவர் பிரபஞ்சன்தான் பெற்றுள்ளார். 715 மதிப்பெண் எனது மகள் படித்த பள்ளியைச் சேர்ந்த மாணவி பெற்றுள்ளார். எனது மகள் சைதன்யா பள்ளியில்தான் படித்தார். அந்தப் பள்ளியில் இருந்து 35 மாணவர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். பள்ளியில் நிறைய உதவிகள் செய்தனர். ஆனால், இவ்வளவு கஷ்டப்பட்டு படிக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஒரு மாணவர் தான் நீட் தேர்வுக்காக 15 மணி நேரமாக படித்ததாகக் கூறினார். 12-ம் வகுப்பு படித்தாலும் அவன் குழந்தைதான். 15 மணி நேரம் படித்துத்தான் இந்த நீட் தேர்வில் தேர்ச்சிப் பெற வேண்டுமா? கடந்த 1965-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, அத்தனை உள்கட்டமைப்பு வசதிகள் அங்கு உள்ளது. இன்று அந்தக் கல்லூரி தரமாக பராமரிக்கப்படுகிறது. இந்திய அளவில் முதல் 5 இடங்களில் இருக்கிறது. இதையெல்லாம் உருவாக்கியவர்கள், அவர்களுக்கு கற்றுத் தந்தவர்கள் எல்லாம் எந்த நீட் தேர்வை படித்தனர்.

**என் மகள் ஜெயித்துவிட்டார். அதேபோல் ஜெயித்த நூறு பேரை அழைத்து இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வோர் பெற்றோரிடமும் எவ்வளவு செலவு செய்துள்ளனர் என்று கேளுங்கள். அந்தச் செலவு யாருக்கு செய்யப்பட்டது என்று கேளுங்கள். அரசுப் பள்ளி மாணவர்கள் 652 பேர் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்துவிட்டதாக ஆளுநர் கூறுகிறார். அவர்கள் எப்படி சேர்க்கைப் பெற்றனர். 7.5 சதவீத இடஒதுக்கீட்டால்தான் சேர்ந்தார்களே தவிர நீட் தேர்வால் சேர்க்கை பெறவில்லை" என்று அவர் கூறினார். இந்த ஒவ்வொரு சொல்லும் 100 விழுக்காடு உண்மையானது ஆகும். இதனைப் புரிந்துகொள்ள முடியாமல், 'நான் கையெழுத்துப் போட மாட்டேன்' என்று சிலுப்புவது என்ன நியாயம்?**

**ஓராண்டு படிக்க 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்.**

**இரண்டு ஆண்டுகள் படிக்க மூன்று லட்சம் ரூபாய்.**

**மூன்று ஆண்டுகள் படிக்க 4 லட்சம் ரூபாய் - என்று இந்த பயிற்சி மையங்கள் வசூல் செய்கின்றன. இதில் படிக்கிறவர்களுக்கே பெரும்பாலும் இடம் கிடைக்கிறது.**

முதல் முறை தேர்வு எழுதியவர்களுக்கு இடம் கிடைப்பது இல்லை. தொடர்ச்சியாக தேர்வு எழுதுபவர்களுக்கே கிடைக்கிறது. மருத்துவக் கலந்தாய்வில் பங்கேற்பதற்காக தகுதி பெற்றுள்ள 28,849 பேரில் வெறும் 31 விழுக்காட்டினர், அதாவது 9,056 பேர் மட்டும்தான் முதல் முயற்சியில் வெற்றி பெற்றவர்கள் ஆவர். மீதமுள்ள 19,793 (69%) இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான முயற்சியில் வெற்றி பெற்றவர்கள் - என்கிறது புள்ளி விபரம். இங்கேதான் பயிற்சி மையங்களின் வருமானம் இருக்கிறது.

2019 ஆம் ஆண்டு அக்டோபர் 11 ஆம் தேதி தமிழ்நாட்டில் நீட் கோச்சிங் சென்டர்களில் வருமான வரித் துறையினர் சோதனை நடத்தியதை ஆளுநருக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக் கிறோம். நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு கல்விக் குழுமத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் இந்த ரெய்டு நடந்தது. இந்தப் பள்ளியில் இயக்குநர்கள், பணியாளர்களிடம் விசாரணை நடத்தியும், பள்ளியின் வங்கிக் கணக்குகள் உள்ள வங்கிகளுக்கு நேரில் சென்றும் விசாரணை நடத்தினார்கள்.

இந்தத் தனியார் பள்ளியில், ஆசிரியர்களை வெளியே விடாமல், இரண்டு நாள்களாகத் தீவிர விசாரணை நடத்தினார்கள். பள்ளி மாணவர்கள் வெளியே வந்து சொன்ன பிறகுதான் ரெய்டு விஷயமே வெளியே தெரிய வந்தது. நீட் பயிற்சிக்காக எத்தனை மாணவர்கள் சேர்ந்தனர்? எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது? அதற்கான கணக்குகள் எனப் பலவற்றையும் வருமான வரித்துறையினர் அலசினார்கள். இந்த கோச்சிங் சென்டரின் சென்னை, நாமக்கல், ஈரோடு, கரூர் ஆகிய கிளைகளில் ஒவ்வொரு வருடமும் சுமார் 1500 மாணவர்கள் நீட் பயிற்சி பெற்றிருக்கின்றனர். ஒரு மாணவருக்கு ரூ.1,50,000 வரை கட்டணமாக வசூலித்ததாகச் சொல்லப்பட்டது.

தோராயமாக கணக்கிட்டாலே 22 கோடி ரூபாய் ஓராண்டுக்கு ஒரே ஒரு பயிற்சி மையத்துக்கு மட்டும் கிடைத்துள்ளது. மற்ற மையங்கள் எவ்வளவு திரட்டி இருக்கும்? இப்படி தமிழ்நாடு முழுவதும் திரட்டப்பட்டது எவ்வளவு? இந்தியா முழுவதும் திரட்டப்பட்டது எவ்வளவு? என்பதை கணக்கிட்டால்தான் இதற்குள் விளையாடும் பணத்தின் மதிப்பு தெரியும்.

நீட் தேர்வு மூலமாக பிழைப்பவர் யார்? அதற்காக பலியாகுபவர்கள் யார் என்பதை இதன் மூலமாக அறியலாம்.

••



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பின்னணிப் பாடகர் "கலைமாமணி டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "கலைமாமணி டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையை நேற்று (16.8.2023) திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி வி.இந்திராணி பொன்வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பூமிநாதன், கோ.தளபதி, துணை மேயர் டி.நாகராஜன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ்.சங்கீதா, டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மதுரையில் பின்னணிப் பாடகர் "ஏழிசை மன்னர்"

# டி.எம்.சௌந்தரராஜன் திருவுருவச்சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

மதுரை, ஆக.17-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பின்னணிப் பாடகர் "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையை நேற்று (16.8.2023) திறந்து வைத்தார்.

தமிழ் திரைப்பட பின்னணிப் பாடகர் "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்கள் 1923-ஆம் ஆண்டு மதுரையில் பிறந்தார்.தனது இளம் வயதிலேயே இசைப் பயிற்சி பெற்று 1950-ஆம் ஆண்டுமுதல் அரை நூற்றாண்டு காலம் தமிழ்த் திரையுலகில் சிறப்புமிக்க பாடகராக மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றுத் திகழ்ந்தார்.10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை பாடி தமிழ்நாட்டு மக்களால் டி.எம்.எஸ். என்று அழைக்கப்பட்டு அனைவரின் உள்ளங்களிலும் நீங்கா இடம் பிடித்தார்.

**கலைஞரால் "ஏழிசை மன்னர்" என்ற பட்டம் பெற்றவர்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "ஏழிசை மன்னர்" என்ற பட்டம் டி.எம்.சௌந்தரராஜன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.மேலும், 1974-75ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருதும், 2003-ஆம் ஆண்டு பத்மஸ்ரீ பட்டமும் பெற்றார்.திரைப் பாடல்கள் மட்டுமின்றி, ஏராளமான பக்திப் பாடல்களையும் பாடி தன் குரல் வளத்தால் உலகமெங்கும் உள்ள தமிழர்களின் வாழ்வோடு கலந்திருந்த டி.எம்.சௌந்தரராஜன் அவர்கள் 25.5.2013 அன்று மறைந்தார்.

பின்னணிப் பாடகர் "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் புகழுக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில், அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மந்தைவெளி மேற்கு வட்டச் சாலைக்கு, "டி.எம்.சௌந்தரராஜன் சாலை" என்று 24.3.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெயரிடப்பட்டது.மேலும், அவர் பாடிய புகழ்பெற்ற பாடல்களை நினைவு கூரும் வகையில் இன்னிசைக் கச்சேரியும் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் அன்றையதினம் நடைபெற்றது.

2023-24 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையில், பிரபல பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி அவரது புகழைச் சிறப்பிக்கும் வகையில் மதுரை மாநகரில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**டி.எம்.எஸ். குடும்பத்தினர் நன்றி!**

அந்த அறிவிப்பிற்கிணங்க, மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின்திருவுருவச்சிலையை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்து, அங்கு வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்தமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி வி.இந்திராணி பொன்வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பூமிநாதன், கோ.தளபதி, துணை மேயர் டி.நாகராஜன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ்.சங்கீதா, டி.எம்.சௌந்தரரராஜன் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கனடா நாட்டில் காவல் மற்றும் தீயணைப்புத் துறைக்கான

# சர்வதேச போட்டியில் பதக்கங்கள் வென்ற வீரர்களுக்கு பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஆக. 17-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.8.2023) தலைமைச் செயலகத்தில், கனடா நாட்டின் வின்னிபெக்கு நகரில் நடைபெற்ற "காவல் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் 2023" போட்டியில் கலந்துகொண்டு பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு காவல்துறை வீரர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

காவல் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள், கனடா நாட்டின் வின்னிபெக்கு நகரில் 27.07.2023 முதல் 6.08.2023 வரை நடைபெற்றது. இப்போட்டிகளில், சுமார் 50 நாடுகளிலிருந்து 8,500க்கும் அதிகமான காவல் மற்றும் தீயணைப்புத் துறை வீரர்கள் கலந்து கொண்டனர்.

இதில், தமிழ்நாடு காவல் துறை தடகள அணியைச் சேர்ந்த காவல் கண்காணிப்பாளர் ஏ.மயில்வாகனன், காவல் ஆய்வாளர்கள் இராஜேஸ்வரி, எஸ்.சரவணப் பிரபு, கே. கலைச்செல்வன், ஆர். சாம் சுந்தர், என். விமல் குமார், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் வி. கிருஷ்ண மூர்த்தி, கே.பாலு, தலைமை காவலர்கள் பி.சந்துரு, எஸ். சுரேஷ் குமார், சி.யுவராஜ், டி.தேவராஜன், மகளிர் தலைமை காவலர்கள் எம். லீலாஸ்ரீ, ஆர். பிரமிளா, டி. தமிழரசி ஆகிய 15 பேர் பல்வேறு போட்டிகளில் பொதுப்பிரிவில் பங்கேற்று, 15 தங்கம், 11 வெள்ளி மற்றும் 15 வெண்கலம், என மொத்தம் 41 பதக்கங்களை வென்றுள்ளனர். இதுவே தமிழ்நாடு காவல்துறை தடகள அணி ஓராண்டில் வென்ற அதிகபட்ச பதக்கங்களாகும். இவ்வீரர்கள், அரசின் அனுமதி பெற்று, தங்கள் சொந்த செலவில் இப்போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். பதக்கங்கள் வென்ற 15 காவல்துறையினர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து நேற்று வாழ்த்துப் பெற்றனர்.

"காவல் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள்2023" போட்டியில், அகில இந்திய காவல்துறை விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய அணி சார்பில் கலந்து கொண்ட எஸ்.சிவா, ஆர்.தினேஷ், வி.தினேஷ், ஜி.எஸ்.ஸ்ரீது ஆகிய 4 காவலர்கள் 5 தங்கம் மற்றும் 7 வெள்ளி, என

12 பதக்கங்களை வென்றுள்ளனர். பதக்கங்கள் வென்ற காவலர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து நேற்று வாழ்த்துப் பெற்றனர்.

இந்த நிகழ்வின்போது, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல் துறை கூடுதல் இயக்குநர் (ஆயுதப்படை) எச்.எம்.ஜெயராம் ஆகியோர் உடனிருந்தனர்.

### டெல்லி முதலமைச்சர்

# அரவிந்த் கெஜ்ரிவால் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஆக. 17 -

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**உங்களின் இந்த ஆண்டு வெற்றி மற்றும் முன்னேற்றம் நிறைந்ததாகத் திகழட்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# புதியதாக 10 ஆயிரம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

24 கோடியே 96 லட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

• 2023-24ஆம் ஆண்டில் பண்ணை வாழ்வாதார நடவடிக்கை பணிகளுக்காக 60.27 கோடி ரூபாயும், பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கை பணிகளுக்காக 18.64 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

• மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக 2022-23 ஆம் ஆண்டில் நடைபெற்ற கண்காட்சிகளில் 3,528 சுய உதவிக் குழுக்கள் 3 கோடியே 75 லட்சம் ரூபாய் அளவில் விற்பனை செய்துள்ளனர். மாநிலம் முழுவதும் உள்ள முக்கிய இடங்களில் 137 விற்பனை அங்காடி (Kiosk) அமைக்கப்பட்டு சுய உதவிக் குழு தயாரிப்புகளை ஒருங்கிணைத்து விற்பனை செய்யப்படுவதுடன், முறையான பேக்கிங் மற்றும் தயாரிப்புகளை தரப்படுத்துவற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டு மதி வணிக முத்திரை வழங்கப்பட்டுள்ளது.

**4,29,209 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.642 கோடி கடன் வழங்கி சாதனை!**

• 2022-2023ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்க 25 ஆயிரம் கோடி ரூபாய் இலக்கு நிர்ண யிக்கப்பட்டு, அதையும் தாண்டி 25 ஆயிரத்து 642 கோடி ரூபாய், 4 லட்சத்து 49 ஆயிரத்து 209 சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி, நமது அரசு சாதனை புரிந்துள்ளது என்பதை இங்கு பெருமிதத்துடன் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

•கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் கடன் இணைப்பு வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 45 ஆயிரம் கோடி ரூபாயினையும் தாண்டி 47 ஆயிரத்து 34 கோடி ரூபாய் வழங்கி சாதனை புரிந்துள்ளோம்.

•2023-2024ஆம் ஆண்டு வங்கிக் கடன் இணைப்பு வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 30 ஆயிரம்கோடிரூபாயில்,30.6.2023 வரை, சுய உதவிக் குழுக்களுக்கு 5,644 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது. இதனை மேலும் வளர்த்தெடுக்க வேண்டும்.

2023-24ஆம் ஆண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, பல்வேறு புதிய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக 'மதி சந்தை' என்ற இணையவழி விற்பனை தளம் உருவாக்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை அவர்களுக்குள்ளாகவும், பிற பெரும் வணிக நிறுவனங்கள் மூலமாகவும் விற்பனை செய்வதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் வாங்குவோர் - விற்போர் சந்திப்பு நடத்தப்படும்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (16.8.2023) தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான மூன்றாவது மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (DISHA) கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. செந்தில்குமார், அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் பிரதான் மந்திரி போஷன் சக்தி நிர்மன் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 2022-23ஆம் ஆண்டில், 46 லட்சத்து 70 ஆயிரத்து 458 மாணவர்கள் பயனடைந்து உள்ளனர்.

**மாற்றுத்திறனாளிகள் துறை மூலம் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது!**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் சுகம்யா பாரத் அபியான் (தடையற்ற சூழலை உருவாக்குவதற்கான இயக்கம்) மாநில அரசு, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மூலம் சமுதாயத்தில் மாற்றுத் திறனாளிகள் அணுகத்தக்க சூழலை ஊக்கப்படுத்துவதற்காகத் தணிக்கை நடவடிக்கையினை மேற்கொள்ள சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**2023-24ஆம் ஆண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, பல்வேறு புதிய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக 'மதி சந்தை' என்ற இணையவழி விற்பனை தளம் உருவாக்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை அவர்களுக்குள்ளாகவும், பிற பெரும் வணிக நிறுவனங்கள் மூலமாகவும் விற்பனை செய்வதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் வாங்குவோர் - விற்போர் சந்திப்பு நடத்தப்படும்.**

...னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டுள்ளன.

"நன்றே செய் அதையும் இன்றே செய்" என்ற வகையில் எல்லாருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் அனைத்து மக்களுக்கும் நன்மை தரும் திட்டங்களை சிறிதும் தாமதமின்றி செயல்படுத்தி, திட்டங்களின் பயன் முழுமையாக மக்களைச் சென்றடைய துறைத் தலைவர்களும், அரசு அலுவலர்களும் முழுமனதுடன் செயல்பட வேண்டும். தங்களுக்குக் கீழ் பணியாற்றுவோரும் அவ்வாறு செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள உறுப்பினர்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் தங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ஆலோசனைகளைப் பெற்று தகுந்த நடவடிக்கை எடுப்பேன்!**

தவிர்க்க முடியாத காரணத்தால், இந்த ஆலோசனைக் கூட்டம் முடியும்வரை உங்களிடம் அமர்ந்து ஆலோசிக்க என்னால் இயலவில்லை. ஆலோசனைக் கூட்டத்தில் இடம் பெற்றுள்ள நீங்கள் அனைவரும் இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் நீங்கள் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை நான் கேட்டு தெரிந்து கொண்டு நிச்சயம் அதற்குரிய நடவடிக்கை எடுப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், ஆ.ராசா, சு. திருநா வுக்கரசர், தொல். திருமாவளவன், கே. நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன், டாக்டர் நா. எழிலன், ஜே. எம்.எச். அசன் மவுலானா, கே.ஏ.செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. செந்தில்குமார், அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதி கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பிரதமரைச் சந்திக்கும்போதெல்லாம் முதல்வர் வைக்கும் கோரிக்கை 'நீட்' விலக்குதான்!

**'மதி அங்காடிகள்' மற்றும் 'மதி எக்ஸ்பிரஸ் வாகனங்கள்'!**

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் முக்கிய சுற்றுலாத் தளங்களில் 'மதி அங்காடிகள்' நிறுவப்படுவதுடன், சிறப்பு சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக 'மதி எக்ஸ்பிரஸ் வாகனங்கள்' வழங்கப்படவுள்ளன. மேலும் சுய உதவிக் குழுக்களால் இயக்கப்படும் 'மதி திணை உணவகங்கள்', ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் செயல்படுத்தப்படவுள்ளன.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நடப்பாண்டில் விரிவாக்கம் செய்யப்பட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன சுய உதவிக் குழு உறுப்பினர்களைப் பயிற்றுவித்து, அவர்களின் பங்கேற்பின் மூலம், தமிழ்நாட்டில் அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும்.

மாநிலம் முழுவதும் 93 கோட்டாட்சியர் அலுவலகங்கள், 312 வட்டாட்சியர் அலுவலகங்கள், 385 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் என மொத்தம் 790 கட்டடங்களில் ரூ.4.74 கோடி செலவிலும், 200 சுற்றுலா தலங்களில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவிலும் தணிக்கை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வேளாண்மை உழவர் நலத் துறையின் மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM) திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை 284. இதில் 2021 வரை முதல் கட்டமாக, 63 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் இணைக்கப்பட்டன.

**அனைத்து மக்களுக்கும் நன்மை தரும் திட்டங்கள்!**

2021-22 ஆம் ஆண்டில், இரண்டாம் கட்டமாக 64 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் மற்றும் 2023ஆம் ஆண்டில், மூன்றாம் கட்டமாக 30 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களும் மின்...

## அண்ணாவின் அசாமான்யத் தம்பி;

# கலைஞரின் மனசாட்சி முரசொலி மாறன்!



**ஆ**கஸ்ட் 17 அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் பிறந்த நன்னாள்!

செக்கச் சிவந்த திருமேனி, அகன்ற நெற்றி, அழகிய நேர்வகிடு, பரபரப்பான கண்கள், பட்டாசு போல் வெடித்துக் கிளம்பும் சொற்கோவை, தீட்சண்யம் செறிந்த அணுகு முறை- இவை அண்ணன் முரசொலி மாறன் அவர்களின் அடையாளங்கள்.

அவருடைய கரங்களில் அப்போது வெளிவந்த ஆங்கில நூல் எப்போதும் தவழும். ஆங்கில நூல்களைக் கற்பதன் வழியாக, மொழி அறிவையும், பொருளறிவையும், வாதத் திறனையும், ஆழமாகவும், விரிவாகவும் வளர்த்துக் கொள்ள இயலும்; அதன் மூலம், தாய் மொழியாம் தமிழுக்கும், தனிப் பெரும் அரசியல் இயக்கமாம் கழகத்திற்கும், பாங்கான பங்களிப்பை நல்கிடக் கூடும் என்ற நம்பிக்கை கொண்டிலங்கியவர் அவர். இந்த நன்னம்பிக்கை, அன்று இளைஞர்களிடையே பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பி விதைத்தது. கழகத்தில் அன்று வீறு நடை போட்ட ஆற்றல்மிகு இளைஞர் படை வரிசையில், முன்னணியில் இருந்து, அறிவொளி வீசியவர் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் என்றால் அது மிகை இல்லை.

**" மாறன் என்றால் என்ன சாமான்யமா - என் தம்பியல்லவோ!" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால், வியப்புடன் அழகுறப் போற்றிப் பாராட்டப் பட்டவர் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள். அத்தகைய பாராட்டைப் பெற்ற போது அவருக்கு இருபத்து மூன்றே வயதுதான். அந்த இளம் வயதிலேயே அவர் எழுதிய " ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?" என்ற அரிய, அழகிய நூலுக்கு, அன்புடன் வழங்கிய அணிந்துரையிலே தான் அண்ணா அவர்கள் அப்படிப் பாராட்டியிருக்கிறார்கள்.**

**அண்ணன் முரசொலி மாறன் அவர்களை, திராவிடப் பரிமேலழகர் அல்லது இளம்பூரணர் என்றழைப்பதற்குத் தேவையான அத்தனை தகுதிகளையும் ஆழமாகப் பெற்றிருந்தவர். திருக்குறளுக்கு உயர்ந்ததோர் உரை எழுதிடப் பரிமேலழகர் தோன்றினார். தொல்காப்பியத்திற்குத் தூயதோர் உரை எழுத வந்தார் இளம்பூரணர். அதைப்போல, கழகம் வகுத்த கொள்கைகளுக்கு - அது 'திராவிட நாடு ' என்றாலும், ' மாநில சுயாட்சி' என்றாலும் அதற்கு வடிவம் கொடுத்து, வாகான விளக்கங்களைத் தொகுத்து, நீடித்து நிலைப்பதற்கு ஏற்றபடி, அச்சியற்றி, ஆய்வறிக்கை வெளியிட்டவர் முரசொலி மாறன் அவர்களே ஆகும்.**

தி.மு.க., தொடக்க காலத்தில் " திராவிட நாடு திராவிடருக்கே !" என்ற பொருள் செறிந்த முழக்கத்தை முன்வைத்துப் பரப்புரை மேற்கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில், " காலந்தான் பல தேசிய இனங்களை அமைத்திருக்கிறது; அந்தக் காலந்தான் திராவிட தேசிய இனத்தை அமைத்து விடுதலை வாங்கித் தரப் போகிறது" என்று, பூகோளம் - சரித்திரம் - புள்ளி விவரம் எனும் மூன்று துறைகளிலும், அப்பழுக்கற்ற ஆதாரங்களைத் திரட்டி, அனைவர்க்கும் விளக்கத்தையும், தெளிவினையும் வழங்கிடவும், மாற்றுக்கருத்து கொண்டோரும் எதிர் கொள்ளத் தயங்கிடவுமான, இணையிலாக் கருத்துப் பெட்டகத்தைத் தமிழ் உலகத்திற்குத் தந்தவர் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள்!

அதைப்போலவே, பேரறிஞர் அண்ணா அவர்களின் காலத்தில் கருப் பெற்று; தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் காலத்தில், 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி ' என வலிமையாக உருப் பெற்று; ' திராவிட மாடல் ' ஆட்சி நடத்திவரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றளவும், இயன்ற வேளையெல்லாம் எடுத்தியம்பிவரும் " மாநில சுயாட்சி " எனும் மகத்தான இலட்சியத்திற்கு, காரண காரிய விளக்கங்களை, கற்றோரும், மற்றோரும், அதற்கான அடிப்படை நியாயங்களை ஏற்றுக் கொள்ளும் வண்ணம், அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் இந்திய அரசியல் உலகுக்கு இயற்றித் தந்த நூல் "மாநில சுயாட்சி " என்பதாகும்.

**அந்த நூல் குறித்து, தலைவர் கலைஞர் அவர்கள், " மாநில சுயாட்சி என்பது இந்தியாவைத் துண்டு துண்டாக வெட்டுவதற்குத் தூக்கப்படும் கொடுவாள் என்றும், ஒருமைப்பாட்டு உணர்வுக்கு எதிராக வைக்கப்படும் வேட்டு என்றும், தங்களைத் தாங்களே குழப்பிக் கொள்வோர் அல்லது பிறரைக் குழப்ப முனைவோர் ஆகிய இரு சாராருக்கும் அளிக்கப்பட்டுள்ள விடைதான் மாறன் எழுதியுள்ள இந்த விளக்க நூல்" என்று எழுதியிருப்பது, மாநில சுயாட்சிக் கோரிக்கை நிலவும் காலம் முழுவதும் நிலைத்திருக்கும் கல்வெட்டாகும்.**

கழகத்தில் வேறு எவருக்கும் இல்லாத பெருமையும் ஈடற்ற அனுபவமும் மாறன் அவர்களுக்கு உண்டு. 36ஆண்டுகள் நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் உறுப்பினராகப் பணியாற்றி இருக்கிறார். அண்ணா நின்று வென்ற தென் சென்னைத் தொகுதியில், அண்ணா அவர்களாலேயே வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர் அண்ணன் மாறன் அவர்கள். சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அமைச்சரவையிலும், தேவே கௌடா - குஜ்ரால் அமைச்சரவைகளிலும், வாஜ்பாய் அமைச்சரவையிலும் மாண்புக்குரிய அமைச்சராகப் பணியாற்றி, கழகத்திற்கும், கலைஞருக்கும், கன்னித்தமிழ் நாட்டுக்கும், இந்தியா எனும் நமது தேசத்திற்கும் அளப்பரிய மதிப்பீடுகளைத் தேடிக் கொணர்ந்து குவித்திருக்கிறார். நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய ஒவ்வொரு உரையையும் நாடும், ஏடும் கூர்ந்து கவனித்தன.

கலைஞர் பள்ளிப்பருவ மாணவராக இருந்தபோது, பள்ளி மாணவர் சங்க ஆண்டு விழாவில் " துருவன் " நாடகம் நடைபெற்றது. அதில் இந்திரனாக நடிக்க இருந்த மாணவருக்கு, நாடகத்தன்று திடீரெனக் கடுமையான காய்ச்சல் ஏற்பட, வேறு வழியின்றி, கலைஞர் அந்தப் பொறுப்பை நிறைவேற்றிட வேண்டிய நிலை நேர்ந்தது. அந்த நாடகத்தில் நடித்த மாறன் அவர்களைப் பற்றி கலைஞர், தமது " நெஞ்சுக்கு நீதி " முதல் பாகத்தில் எழுதியிருப்பது வருமாறு:

**" அந்த நாடகத்தில் துருவனுடைய தம்பியாக நடித்த பால நடிகன் யார் தெரியுமா? என் கண்களின் கருமணியாய் விளங்குகின்ற செல்வ மருமகன் மாறன் தான். துருவனைப் பார்த்து, ' ஏய் துதுவா, நான் யார் தெரியுமா? எங்கப்பா மதியில் நீ உக்காதக் கூதாது! ' என்று பேசிய மழலை மொழியை நான் இன்னும் மறக்கவில்லை. "**

**அப்படி மழலை பேசிய மாறன் அவர்கள்தான், பின்னாளில் 'குல தெய்வம் ' என்ற திரைப்படத்திற்குக் கதை - வசனம் எழுதி, முரசொலி மாறன் என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து, அன்னையின் ஆணை, அன்பு எங்கே , தலை கொடுத்தான் தம்பி, சகோதரி, நல்ல தீர்ப்பு போன்ற திரைப் படங்களை எழுதினார்.**

சின்னஞ் சிறு பிராயத்தில், அப்படி மழலை பேசியவர்தான், பின்னாளில் ஒன்றிய அமைச்சராக, இந்தியாவின் பிரதிநிதியாக, ' தோஹா ' மாநாட்டில் கலந்து கொண்டு, வளர்ந்த நாடுகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, அடுக்கடுக்கான வாதங்களை முன்வைத்து, இந்தியாவின் கோரிக்கையை வென்றெடுத்து, உலக நாடுகளில் வளர்ந்து வரும் நாடுகளின் வர்த்தகத்தைக் காப்பாற்றிக் கொடுத்தார் என்றால்; அந்தப் பெருமை முகட்டின் அருகில் கூட இதுவரை வேறெவரும் அடியெடுத்து வைத்தாரில்லை !

**அதனாலேதான் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் சாமான்யமானவர் இல்லை; கழகத்தின் அசாமான்யமான, அசகாய அறிவுச் சூரர்; இறுதிவரை கலைஞரின் இறவா - மறவா மனசாட்சி ! கலைஞரின் புகழ்ப் பெயர் வாழும் காலம்வரை, அவர் அருகிலேயே அவருடைய மனசாட்சி, உறங்காமல் விழித்திருக்கும்!**

●●●

: கி.இராஜமாணிக்கம் :

## அரசியல் மாமேதை முரசொலிமாறன் பிறந்தநாள் இன்று

# இந்தியாவில் மாநில சுயாட்சி அடைய உறுதியேற்போம்!



பாசமும் அன்பும் பண்பும் நிறைந்த எம்.பி. அண்ணன் முரசொலிமாறன் அவர்களின் பிறந்த நாள் இன்று. தலைவர் கலைஞரின் மனசாட்சி மட்டுமல்ல; மாநில சுயாட்சியின் வழிகாட்டியுமாவார். இந்திய அரசியல் சட்டத்தில் ஒன்றிய அரசு தன்னிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதற்கான நியாயங்களை விளக்கி 'மாநில சுயாட்சி' என்ற பெயரிலேயே ஆராய்ச்சி நூலினை எழுதினார்.

அந்த நூலில் மாநிலங்களுக்கு அதிகாரங்களை மேலும் வழங்குவது இந்தியாவை பலப்படுத்தவே; பலவீனப்படுத்த அல்ல என்பதை ஆதாரங்களோடு விளக்கினார். மாநில சுயாட்சி அறிஞர் அண்ணாவால் பேணி வளர்த்துப் பெற்றுக்கொள்ள விட்டுச் செல்லப்பட்ட 'இலட்சியச் சொத்தாகும்' என்று வலியுறுத்தினார். தலைவர் கலைஞர், நாவலர், பேராசிரியர் மூவரும் எம்.பி. அண்ணன் அவர்களைப் பாராட்டி அணிந்துரை வழங்கினர்.

இன்று இந்தியா முழுவதும் மாநில சுயாட்சி கோரிக்கை எதிரொலிக்கிறது. அதற்கான வழிமுறைகளை வகுக்கும் வகையில் முதல்வர் தலைவர் தளபதி அவர்கள், தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதற்கு நாம் துணை நின்று வெற்றி பெறுவோம்.

மேலும் எம்.பி. அண்ணன் அவர்கள் நீதிமன்றங்களில், கழகத்தின் சார்பாக முக்கிய வழக்குகள் நடக்கும்போது, வழக்கறிஞர்களோடு அமர்ந்து யோசனைகளைக் கூறுவார். சில வழக்குகளின் விசாரணைக்கு உயர் நீதி மன்றத்திற்கு நேரிலும் வந்தார். நான் இளம் வழக்கறிஞராக இருந்தபோது ஒரு நாள் சித்தப்பா மோகன் தாஸ் அவர்கள் தொலைபேசியில் அழைத்து எம்.பி. அண்ணன் வரச்சொல்வதாகக் கூறினார். நான் சென்று சந்தித்தேன். முரசொலி சட்ட ஆலோசகராக என்னை நியமிப்பதாகக் கூறி அரிய வாய்ப்பினை தந்தார். அண்ணன் முரசொலி செல்வம் அவர்களிடம் யோசனைகளைப் பெற்றேன். முரசொலி கணக்காளர் மாணிக்கம் அவர்களின் உதவிகளோடு பொறுப்புடன் பணியாற்றினேன். அதன் பிறகு கழக சட்டத்துறையில் பணியாற்ற வாய்ப்புகளைப் பெற்று, கடமையாற்றி வருகிறேன்.

அண்ணன் எம்.பி. அவர்களின் பிறந்த நாளில் 'மாநில சுயாட்சி' நூலினை வாங்கி மீண்டும் படிப்போம். முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் இந்தியாவில் மாநில சுயாட்சி அடைவோம்!!



**வணக்கம் வெ.ரவி**
தி.மு.க. சொத்துப் பாதுகாப்பு வழக்கறிஞர் பிரிவுத் தலைவர்

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா

# தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாட முடிவு!

**டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. தலைமையில் - டி.செங்குட்டுவன் முன்னிலையில் நடந்த தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!**

*சென்னை, ஆக. 17-*

*முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு முழுவதும் நல உதவிகளுடன் சிறப்புடன் கொண்டாடுவது என தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (16.08.2023) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் மாநிலத்தலைவர்கள் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. தலைமையில் நடைபெற்றது.*

*மாநிலச்செயலாளர் டி. செங்குட்டுவன் எம்.எல்.ஏ. அனைவரையும் வரவேற்று, கூட்டத்தின் நோக்கம் குறித்து எடுத்துரைத்தார்.*

*இதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :*

*திராவிட இயக்க தலைவர், நவீன தமிழ்நாட்டை கட்டமைத்த சிற்பி, அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களை உருவாக்கி, கோடிக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி சமூக பாதுகாப்பை வழங்கிய தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, 2024 ஜூன் மாதம் வரை கொண்டாடப்படவுள்ள நிலையில்,*

*கழகத்தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 05.08.2023 அன்று, நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை நமது அணியின் சார்பில், எவ்வாறு கொண்டாடுவது என அறிவுறுத்தியுள்ளார்.*

*அதனடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் பகுதிகளில் உள்ள அனைத்து வாகன நிறுத்தங்களிலும் (Stand) 'தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணிக்கான" பெயர் பலகைகளை நிறுவி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை நிறுவி மலர் தூவி, ஏழை எளியோருக்கு நல உதவிகள், இனிப்புகள் வழங்கியும், திராவிட மாடல் முதல்வர் தளபதியார் அரசின் அரும் பெரும் சாதனைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க வேண்டும்.*

*மேற்படி நிகழ்வுகள் அனைத்தும், சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர், மாநகரம், பகுதி, நகரம், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற தலைவர்கள், கழக முன்னணியினர் கலந்துகொண்டு பெயர் பலகையை திறந்து வைத்து கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வகையில் சிறப்பாக மாதத்திற்கு 2 நிகழ்ச்சிகளை நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.*

*தீர்மானம் 2: அமைப்பு சாரா ஓட்டுநர் அணியை உருவாக்கித் தந்த தளபதியாருக்கு நன்றி!*

*ஓலா, ஊபர், ஸ்விக்கி, ஸொமாட்டோ வாகன பணியாளர்களுக்கு நலவாரியம் என அறிவித்த முதல்வருக்கு நன்றி!*

*இந்திய திருநாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாக 'தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணியை" உருவாக்கி தந்து அதன் பேரில் சுமார் 30 லட்சத்திற்கு மேற்பட்ட ஓட்டனர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பையும், உருவாக்கி தந்து மேலும் 77வது சுதந்திர தின விழாவின் பேருரை நிகழ்த்திய போது, ஓலா, ஊபர், ஸ்விக்கி, ஸொமாட்டோ ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களின் நலன் கருதி தனி நலவராரியம் அமைத்து தந்த கழகத்தலைவர், தமிழக முதல்வர், தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுமார் 65 தொழில்களில் பணியாற்றுகின்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு அவர்களது எதிர்கால வாழ்வு சிறக்கவும், சமூக பாதுகாப்பு கிடைத்திடவும் பல்வேறு நல காரியங்களை உருவாக்கி தந்தார்கள்.*

*கழகத்தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான 'தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர்கள்" தமிழகத்தில் சுமார் 30 லட்சம் பேர் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கான எதிர்காலம் சிறக்கவும், சமூக பாதுகாப்பு கிடைக்கவும் நலவாரிய உதவிகளை சிரமமின்றி பெற்றிடவும் 'அமைப்பு சாரா ஓட்டுநர்கள் நலவாரியம் ஒன்றை உருவாக்கி உதவிடுமாறு இக்கூட்டம் முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.*

*கழகத்தலைவர், முதல்வர் அவர்களின் சீரிய சிந்தனையால் உருவாக்கப்பட்ட "தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணிக்கான மாநில நிர்வாகிகள், நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். தமிழகத்தில் உள்ள 72 கழக மாவட்டங்கள், 20 மாநகராட்சிகளுக்கான புதிய நிர்வாகிகள், மாவட்ட கழக செயலாளர்கள், பரிந்துரையோடு கழகத்தலைவர் அவர்களல் புதிதாக நியமனம் செய்யப்பட்டு புதிதாக பொறுப்பேற்கவுள்ளார்கள்.*

*புதிய மாவட்ட, மாநகர நிர்வாகிகளின் அறிமுககூட்டம், கழகத்தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் வசதிக்கேற்ப வழங்கும் தேதியில் அறிமுக கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்படுகிறது.*

*கழகத்தலைவர், தமிழக முதல்வர், தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறக்க நடத்திடும் வகையிலும், அறிமுகம் கூட்டம் முடித்தவுடன், பகுதி கழகம், நகர, ஒன்றிய, பேரூர் கழகங்களுக்கான அமைப்பு சாரா ஓட்டுனர் அணிக்கான நிர்வாகி கள் நியமித்தல், உறுப்பினர் சேர்க்கை மற்றும் அணிக்கான வளர்ச்சிப்பணிகள் குறித்து விவாதித்திட, கீழ்க்கண்டவாறு மாவட்டங்கள், மாநகரங்கள் அடங்கிய ஆலோசனைக் கூட்டங்கள் நடத்துவதெனவும், அதில் மாநில நிர்வாகிகள் கலந்து கொள்வதென தீர்மானிக்கப்படுகிறது.*

# உண்ணாவிரத அறப்போர்!...

முதல் பக்கத் தொடர்ச்சி!

இருந்து வருகிறது. கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தி.மு.கழக இளைஞர் அணி - மாணவர் அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கல்வி என்பது பொதுப்பட்டியலில் உள்ளது. ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும், முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

மே 2021-ல் கழக அரசு ஆட்சிக்கு வந்தவுடனே, ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் நீட் பாதகங்கள் குறித்து ஆராயச் சிறப்புக்குழு அமைக்கப்பட்டது.

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா!**

இந்தக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், கடந்த 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கும் மசோதா தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்றப்பட்டது.

மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தி வந்த ஆளுநரிடம், ஒப்புதல் வழங்கும்படி பல்வேறு தருணங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள்.

நீட் தேர்வுக்கு விலக்கு கேட்க வேண்டும் என்றும், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றக்கோரியும் அக்டோபர் 4, 2021 அன்று, 12 மாநில முதலமைச்சர்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

கடந்த 2021-ஆம் ஆண்டு நவம்பர் 27-ஆம் தேதியன்று, முதலமைச்சர் அவர்கள் ஆளுநரை நேரில் சந்தித்து நீட் தேர்வுக்கு விலக்குக் கோரும் சட்டமன்ற மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கும்படி வலியுறுத்தினார்.

**முதல்வர் கொடுத்த அழுத்தத்தால் மசோதாவை திருப்பி அனுப்பிய ஆளுநர்!**

முதலமைச்சர் அவர்களின் தொடர் அழுத்தம் - பிற அரசியல் கட்சிகளின் அழுத்தம் - பொதுமக்கள் - மாணவர் இயக்கங்களின் போராட்டத்தின் காரணமாக 5 மாதங்களுக்குப் பிறகு பிப்ரவரி 2, 2022 அன்று நீட் விலக்கு மசோதாவினை ஆளுநர் ரவி சட்டப் பேரவைக்கே திருப்பி அனுப்பினார்.

மசோதாவை திருப்பி அனுப்பியது குறித்து, ஆலோசிப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் தலைமையில், பிப்ரவரி 5, 2022 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி மீண்டும் நீட் விலக்கு மசோதாவை நிறை வேற்ற முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் பிப்ரவரி 8, 2022 அன்று மீண்டும் நீட் விலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இரண்டாவது முறையாக அனுப்பப்பட்ட நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வலியுறுத்தி, மார்ச் 15, 2022 அன்று முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு ஆளுநரை நேரில் சந்தித்து வலியுறுத்தினார்கள்.

**எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும், நீட் தேர்வு நடக்கும் என்ற எதேச்சதிகாரப் போக்கில் உள்ள ஒன்றிய அரசையும் - இல்லாத அதிகாரம் இருப்பதுபோல் மாளிகையில் கொக்கரிக்கும் ஆளுநரையும் கண்டித்து, இந்த மாபெரும் உண்ணாவிரதம் தமிழ்நாடெங்கும் நடைபெறவுள்ளது.**

**நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய ஆளுநர்!**

மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல், மீண்டும் காலம் தாழ்த்தி வந்த ஆளுநரை ஏப்ரல் 22, 2022 அன்று அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மா.சுப்பிர மணியன் அவர்கள், நேரில் சந்தித்து ஒப்புதல் வழங்க வலியுறுத்தினர். இதையடுத்து, நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு ஆளுநர் ரவி மே 5, 2022 அன்று அனுப்பி வைத்தார்.

இப்படி தமிழ்நாட்டுக்கு நீட் தேர்வில் இருந்து விலக்குப் பெற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கழக அரசு ஒருபுறம் எடுத்து வருவதும், ஆளுநர் அதனைத் தடுத்து நிறுத்துவதும் தொடர்ந்து நடைபெறுகிறது.

நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத் தொடரிலும், நீட் பிரச்சினையை நம் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பி வருகின்றனர்.

பிரதமர் அவர்கள் தமிழ்நாடு வருகிற போதும், முதலமைச்சர் அவர்கள் டெல்லி செல்கிற போதும், பிரதமரிடம் வைக்கப்படும் முதல் கோரிக்கையே நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு கோருவதுதான்.

கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், பிரதமர் மோடி அவர்களை டெல்லியில் பிப்ரவரி 28, 2023 அன்று சந்தித்தார்கள். அப்போதுகூட, பிரதமர் அவர்களிடம், நீட் ஒழிப்பைத்தான் வலியுறுத்தினார்கள்.

இப்படித் தமிழ்நாடு அரசு எத்தனை முறை கோரிக்கை வைத்தாலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு அதனைப் பொருட்படுத்துவதே கிடையாது.

**'நீட்' என்பது நிரந்தரம் அல்ல! முதல்வர் நிச்சயம் அதை ஒழிப்பார்!**

இந்த நேரத்தில் மாணவச் செல்வங்களுக்கு நாங்கள் சொல்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், நீட் தேர்வு என்பது நிரந்தரம் கிடையாது.

முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் நீட் தேர்வை ஒழிப்பார்கள். அதற்கான காலம் வெகுதொலைவில் இல்லை. எனவே, மாணவச் செல்வங்கள் தன்னம்பிக்கையுடனும் - மன உறுதியுடனும் பொறுமை காத்திருக்க வேண்டுகிறோம்.

எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும், நீட் தேர்வு நடக்கும் என்ற எதேச்சதிகாரப் போக்கில் உள்ள ஒன்றிய அரசையும் - இல்லாத அதிகாரம் இருப்பதுபோல் மாளிகையில் கொக்கரிக்கும் ஆளுநரையும் கண்டித்து, இந்த மாபெரும் உண்ணாவிரதம் தமிழ்நாடெங்கும் நடைபெறவுள்ளது.

கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி செயலாளர்கள் சென்னையில் நடக்கின்ற உண்ணாவிரத அறப்போரில் பங்கேற்கவுள்ளனர். அதேபோல, தமிழ்நாட்டில் அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் நடைபெறவுள்ள இந்த உண்ணாவிரத அறப்போரில் அனைத்துத் தரப்பினரும் திரளாகப் பங்கேற்க அழைக்கின்றோம்.

**நீட் தேர்வை ஒழித்திட ஓரணியில் திரண்டு விலைமதிப்பில்லா உயிரைக் காப்போம்!**

நீட் தேர்வை ஒழித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையும் - விலைமதிப்பில்லா உயிரையும் காக்க ஓரணியில் திரள்வோம்!

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்,

கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.,


கழக மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மருத்துவ அணியின் தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு. கழக மாணவர் அணித் தலைவர் ராஜிவ்காந்தி ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஓட்டுனர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் துணை செயலாளர்கள் வி.முத்துராஜன், கே.தினகரன், ஏ.ஆர்.டி.உதயசூரியன், எம்.சிவராஜ், ஏ.கே.பூபதி, எஸ்.செல்லத்துரை, எஸ்.ராம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அணியின் சார்பில் சிறப்பாக கொண்டாட வேண்டும் மற்றும் அணியின் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சி பணிகள், நிர்வாகிகள் நியமனம் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தம்பி ஏ. தேவேந்திரன்
**ஆகஸ்ட் 17 (1995)**



திராவிட இயக்க கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தி.மு.கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து 38 ஆண்டுகளாக நகர்மன்ற உறுப்பினராகவும், மயிலாடுதுறை நகர்மன்றத் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கல்லக்குடி, கருப்புக் கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று 17 முறை சிறை சென்றவர்.

"மதுரைக்கு முத்து, மாயூரத்திற்கு தம்பி தேவேந்திரன்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. ஆனந்தன்
**ஆகஸ்ட் 17 (2010)**



நீதி கட்சித் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் பேச்சாற்றலாலும் இளமை பருவத்தில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.

35 ஆண்டுகாலம் தொடர்ந்து பி.என்.பாளையம் ஊராட்சிச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இரயில் மறியல் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

# தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

## இராமநாதபுரத்தில் இன்று நடைபெறுகிறது! கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 17-**

**முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றும் தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம் இராமநாதபுரத்தில் இன்று (ஆகஸ்ட் 17) நடைபெறுகின்றது என்று கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் அறிவித்துள்ளார்.**



இதுகுறித்து கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 22.3.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர் களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல்" உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச் சாவடி பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சி பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப்பட்டு, முதலாவதாக கடந்த ஜூலை 26 அன்று திருச்சியில் டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து;

தென் மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்" இன்று (17.8.2023 - வியாழக்கிழமை) இராமநாதபுரம், தேவிப்பட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

தென் மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 19 கழக மாவட்டங்களின், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தத்தமது மாவட்டங்களுக்குட்பட்ட 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

1.இராமநாதபுரம், 2. சிவகங்கை, 3. திண்டுக்கல் கிழக்கு, 4. திண்டுக்கல் மேற்கு, 5. தேனி வடக்கு, 6. தேனி தெற்கு, 7. மதுரை மாநகர், 8. மதுரை வடக்கு, 9. மதுரை தெற்கு, 10. விருதுநகர் வடக்கு, 11. விருதுநகர் தெற்கு, 12. திருநெல்வேலி கிழக்கு, 13. திருநெல்வேலி மத்திய, 14. தென்காசி வடக்கு, 15. தென்காசி தெற்கு, 16. தூத்துக்குடி வடக்கு, 17. தூத்துக்குடி தெற்கு, 18. கன்னியாகுமரி கிழக்கு, 19. கன்னியாகுமரி மேற்கு,

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் அறிவித்துள்ளார்.




சென்னை நுங்கம்பாக்கம் அகத்தீஸ்வரர் பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோவிலில் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சமபந்தி விருந்தில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கலந்துகொண்டார். இதில் நுங்கை வி.எஸ்.ராஜ், 113–வது மாமன்ற உறுப்பினர் எஸ்.பிரேமா சுரேஷ், கோவில் அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர்

# இளைஞரணி - மாணவரணி - மருத்துவரணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

சென்னை, ஆக. 17 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி , மாணவரணி, மருத்துவர் அணி ஆலோசனைக் கூட்டம் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது. இது குறித்து மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், எல்.பிரபு, டி.பி.செந்தில்குமார் ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர -பேரூர் கழகங்களின் இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவர் அணிகளைச் சேர்ந்த அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (17. 8- 2023 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையிலும், மாவட்ட இளைஞர் அணி -மாணவர் அணி - மருத்துவர் அணி நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி அமைப்பாளர்கள் மற்றும் மருத்துவர் அணியில் உள்ள மருத்துவர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று அவசியம் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : வருகிற 20.8.2023 அன்று மாவட்ட இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவர் அணி சார்பில் நீட்டை திணிக்கும் ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து செங்கல்பட்டில் நடைபெறும் உண்ணாவிரத அறப்போராட்டம் பற்றி ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு மாவட்ட மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எல்.பிரபு, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டி.பி.செந்தில்குமார் ஆகியோர் தங்களது அணியினரை கேட்டுக்கொண்டுள்ளனர்.

## காஞ்சிபுரம் தெற்கில் கலைஞர் நூற்றாண்டு கொள்கை திருவிழா!

# கலைஞர் திருவுருவச் சிலையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை

*காஞ்சிபுரம், ஆக.17-*

*காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து கழகக் கொடி ஏற்றி நல உதவிகள் வழங்கி சிறப்பிக்கிறார் என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



*இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொள்கை திரு விழாவாக கொண்டா டப்பட்டு வருகிறது.*

*அந்த வகையில் 19.8. 2023-சனிக்கிழமை அன்று பிற்பகல் 1மணி முதல் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்கி றார்.*

*அதன்படி 19ஆம் தேதி அன்று காஞ்சிபுரத்தில் பிற்பகல் 1 மணிக்கு அணிகளின் மாவட்ட நிர்வாகிகளுடன் கலந்துரையாடும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து, குருவி மலையில் மாலை 4 மணிக்கு 100 அடி கொடி கம்பத்தில் கழகக் கொடியை ஏற்றி வைக்கி றார். மதுராந்தகம் நகரில் மாலை 5 மணிக்கு முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவச் சிலையை திறந்து வைத்தும், மதுராந்தகம் கலைஞர் திடலில் மாலை 5.15 மணிக்கு, விளையாட்டு வீரர்களுக்கு உப கரணங்களையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கு கிறார்.*

*அதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்தலில் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பள்ளி மாணவ - மாணவியருக்கு பரிசு மற்றும் கழக மூத்த முன்னோ டிகளுக்கு பொற்கிழி வழங்கி சிறப்பிக் கின்றார்.*

*இந்நிகழ்ச்சிகளுக்கு நான் (மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ) தலைமை வகிக்கிறேன், சி. கே.வி. தமிழ்ச்செல்வன், பி.எம்.பாபு, க.குமணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இந்நிகழ்ச்களில் க. செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ப.அப்துல் மாலிக், மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜி, செம்பருத்தி துர்கேஷ்,*

*ச. இனியரசு, டி.வி. கோகுல கண்ணன், மலர்விழிகுமார், சன் பிராண்ட்*

*கே. ஆறுமுகம், இரா. நாகன், டி.ஆர். நாராயணன், ஆர்.டி. அரசு, எம். எஸ். சுகுமார், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ். சிகாமணி, பி. சசிகுமார், எழிலரசி சுந்தரமூர்த்தி, வெளிக்காடு வே.ஏழுமலை, எஸ்.பி. பிரேம்சந்த், எஸ்.உசேன், எஸ்.கே. ராஜேந்திரன், ஜி. சுகுமாரன், தி.அன்பழகன், ப.சுந்தரவரதன், வி.எஸ். ராம கிருஷ்ணன் உள்பட ஒன்றிய, பகுதி, பேரூர், கழகச் செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர். அ.யுவராஜ் நன்றி கூறினார்.*

*எனவே இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு க. சுந்தர் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.*

## 'நீட்' திணிப்பு : ஒன்றிய அரசு – ஆளுநரைக் கண்டித்து

# கோவையில் உண்ணாவிரத அறப்போர்!

## மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் - தளபதி முருகேசன் - தொ.அ.ரவி வேண்டுகோள்!

*சென்னை, ஆக. 17 -*

*தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து - அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது. அரியலூர் அனிதாவில் ஆரம்பித்த நீட் மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது. இந்த மரணங்கள் அனைத்திற்கும், ஒன்றிய பா.ஜ.க. அரசு, துணை போகும் அ.தி.மு.க. மற்றும் தமிழ்நாடு ஆளுநரே காரணம். ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது*

*ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் ரவி முட்டுக்கட்டை போட்டு வருகிறார். நம் மாணவச்செல்வங்களின் மரணம், ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்கவில்லை. ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது வராத நீட், எடப்பாடி பழனிசாமியின் ஆட்சியின் போது தமிழ்நாட்டுக்குள் வந்தது. நீட் விலக்கிற்காக 2017ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாவை, குடியரசுத்தலைவர் நிராகரித்ததை, 21 மாதங்கள் வரை, தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தெரிவிக்காமல் அ.தி.மு.க.வினர் மறைத்தனர்.*

*ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.*

*கழகத் தலைவர் , தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க.வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையின்படி, இந்த 'நீட்' தேர்வை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க.வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், வருகின்ற 20.08.23 ஞாயிற்றுக்கிழமை அன்று, காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை சிவானந்தா காலனி அருகில் உண்ணாவிரத அறப்போர் நடைபெற உள்ளது*

*இந்த உண்ணாவிரத அறப்போரில் , ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி கழக அமைப்புகளில் நிர்வாகப் பொறுப்புகளில் இருக்கக்கூடிய நிர்வாகிகள், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் , மேயர், துணை மேயர், பொதுக்குழு உறுப்பினர்கள், நகரக் கழக, பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நகராட்சி , பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செய லாளர்கள் , நகரக்கழக, பகுதிக்கழக, ஒன்றியக்கழக, பேரூர்க்கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள் , செயல் வீரர்கள், கழகத் தொண்டர்கள் மற்றும் மாணவர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் , பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்*

*நீட் தேர்வை ஒழித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையும் - விலைமதிப்பில்லா உயிரையும் காக்க ஓரணியில் திரள்வோம்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் நா. கார்த்திக், தளபதி முருகேசன், தொ.அ.ரவி ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.*

## மோடியின் சுதந்திர தின உரை

# வெற்று வாக்குறுதிகளும் பொய்யுரைகளையும் கொண்டுள்ளது!

## காங்கிரஸ் கட்சி விமர்சனம்!

*புதுடெல்லி, ஆக.17-*

*பிரதமர் மோடியின் சுதந்திர தின உரை பொய்கள் மற்றும் வெற்று வாக்குறுதிகள் நிறைந்த தேர்தல் பேச்சு என காங்கிரஸ் விமர்சித்துள்ளது. புதுடெல்லி, சுதந்திர தினவிழா நேற்று நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி டெல்லியில் உள்ள செங்கோட்டையில் மூவர்ண கொடியை ஏற்றிவைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.*

*தனது 90 நிமிட உரையில் நாட்டின் சாதனைகளை பட்டியலிட்ட பிரதமர் மோடி 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த நாடாக உருவெடுக்கும் என உறுதியளித்தார். மேலும் ஊழலுக்கு எதிராக வாழ்நாள் முழுவதும் போராடுவேன் என்றும், சீர்திருத்தம், செயல்பாடு, மாற்றம் ஆகியவையே எனது தாரக மந்திரம் என்றும் அவர் பேசினார்.*

*இந்த நிலையில் பிரதமர் மோடியின் சுதந்திர தின உரை பொய்கள் மற்றும் வெற்று வாக்குறுதிகள் நிறைந்த தேர்தல் பேச்சு என காங்கிரஸ் விமர்சித்துள்ளது.*

*இது குறித்து காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறியதாவது: இன்றைய (நேற்று) சுதந்திர தின உரையில் கடந்த 9 ஆண்டுகளில் தனது அரசு என்ன சாதித்துள்ளது என்பதை மக்களுக்கு தெரிவிப்பதை விட, திரித்து பேசுதல், மிகைப்படுத்துதல், பொய்கள் மற்றும் வெற்று வாக்குறுதிகள் நிறைந்த தேர்தல் உரையை பிரதமர் மோடி வழங்கினார்.*

*நாட்டை ஒன்றிணைப்பதற்கும், இதுவரையிலான நமது பயணத்தை கொண்டாடுவதற்கும், அந்த துன்பங்களின் வலியையும் வேதனையையும் ஒப்புக்கொள்வதற்கும், வரவிருக்கும் சவால்களை ஏற்றுக்கொள்வதற்கும் பதிலாக மோடி தன்னை பற்றியும், தனக்கான மரியாதை குறித்தும் பெருமை பேசினார். மணிப்பூர் விவகாரம் மணிப்பூரில் நடந்த வன்முறையால் ஏற்பட்ட பேரழிவுகளை, நாட்டின் பிற பகுதிகளில் நடந்த சம்பவங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, பிரதமர் உரையாற்றினார். மணிப்பூரை போர்க்களமாக மாற்றுவதற்கு வழிவகுத்த மோசமான தோல்விகள் குறித்து அவர் வருத்தமோ அல்லது ஒப்புக்கொள்ளவோ இல்லை. மணிப்பூரில் பெண்கள் கொடூரமான முறையில் அத்துமீறலுக்கு ஆளான கதியை முழு தேசமும் பார்த்தபோது, அவர் 'பாரத மாதா' புத்துயிர் பெறுவதாக துணிச்சலாக கூறுகிறார். கொரோனா தொற்று நோயின் போது இந்தியாவின் திறனை உலகம் வியந்து பார்த்ததாக பிரதமர் கூறினார்.*

*ஆனால் தொற்றுநோயின் பேரழிவுகரமான இரண்டாவது அலையின் போது ஆஸ்பத்திரிகளுக்கு வெளியே உடல்கள் குவிக்கப்பட்டதையும் கங்கையில் பாய்ந்ததையும் உலகம் மறக்கவில்லை என்று ஜெய்ராம் ரமேஷ் கூறினார். பிரதமர் உரையை புறக்கணித்த கார்கே முன்னதாக சுதந்திர தினத்தில் டெல்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி தேசிய கொடியை ஏற்றிவைத்து, உரையாற்றியபோது காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கலந்து கொள்ளவில்லை. அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த இருக்கை காலியாக இருந்தது. பிரதமரின் சுதந்திர தின உரை நிகழ்வை எதிர்க்கட்சித் தலைவர் புறக்கணித்தது புதிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. அதே சமயம் கார்கே தனது இல்லத்திலும், பின்னர் காங்கிரஸ் தலைமையகத்திலும் தேசிய கொடியை ஏற்றினார்.*

*அதை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த கார்கே டெல்லி செங்கோட்டையில் நடந்த நிகழ்ச்சியில் ஏன் கலந்து கொள்ளவில்லை என்பது குறித்து விளக்கமளித்தார். இது குறித்து அவர் கூறுகையில், "எனக்கு கண் தொடர்பான சில பிரச்சினைகள் இருந்தது. அதோடு, நெறிமுறைகளின்படி நான் என்னுடைய வீட்டில் மூவர்ண கொடி ஏற்றவேண்டும். அதன் பின்னர் காங்கிரஸ் தலைமை அலுவலகத்துக்கு வந்து அங்கும் தேசிய கொடி ஏற்றவேண்டும். எனவே என்னால் செங்கோட்டைக்கு செல்ல முடியவில்லை" பிரதமர் மோடி தனது உரையின்போது, "அடுத்த ஆண்டும் செங்கோட்டையில் தேசிய கொடியை ஏற்றி நாட்டின் சாதனைகளை பட்டியலிடுவேன்" என கூறிய, "உங்களது வெற்றியோ தோல்வியோ அது மக்களின் கையில், வாக்காளர்களின் கையில் உள்ளது. 2024ல் மீண்டும் ஒரு முறை செங்கோட்டையில் கொடியேற்றுவேன் என்று இப்போதே கூறுவது ஆணவம். அடுத்த ஆண்டு அவர் (பிரதமர் மோடி) மீண்டும் ஒருமுறை தேசிய கொடியை ஏற்றுவார். அதை அவர் அவரது வீட்டில் செய்வார்" என காட்டமாக கார்கே கூறினார்.*



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட ஆவடி பருத்திபட்டு பூங்காவில் 46வார்டு சார்பில் 77வது சுதந்திர தினத்தையொட்டி கிராம சபை கூட்டம் 'என்னுடைய தாய் மண்' 'என்னுடைய தேசம்' என்ற தலைப்பில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளரும் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இதில் ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு நடவடிக்கைகளின் 2கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்ட பணிகளுக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மேலும் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஆவடி மாநகர ஆணையர் தர்ப்பகராஜ், செயலாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், பொன் விஜயன், மாமன்ற உறுப்பினர்கள் பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பாக நிலை முகவர்கள் கூட்டம்!

## படப்பை ஆ.மனோகரன் தலைமை!

*சென்னை, ஆக.17-*

*குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA 2) கூட்டம் இன்று (17.8.2023 - வியாழக்கிழமை) மாலை 04.30 மணியளவில் கரசங்கால் ஜே.சி மகாலில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் படப்பை ஆ.மனோகரன் (எனது) தலைமையில் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றிய கழக நிர்வாகிகள் மு.சுப்பிரமணி, வ.நந்தகோபால், ஏ.மணி, வாசுகிமகேஷ், சி.பார்த்தசாரதி, வி.அரி, மு.இராஜேந்திரன், பா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது .*

*எனவே இக்கூட்டத்திற்கு மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள் (BLA 2), சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்: 1) நாடாளுமன்ற தேர்தல் பணி. 2)கழக வளர்ச்சி.*

*இவ்வாறு படப்பை ஆ.மனோகரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## தி.மு.க. மீனவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (இரண்டாவது பட்டியல்)

## தி.மு.க. மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மீனவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### மதுரை வடக்கு மாவட்டம்

தலைவர் - கி.முனியாண்டி சங்கங்கோட்டை கிணற்றுத் தெரு, சோழவந்தான், மதுரை.

துணைதலைவர் - வி.அருண்குமார் 2972வது வார்டு, கள்வேலிபட்டி(அஞ்சல்), வாடிப்பட்டி, மதுரை

அமைப்பாளர் - **ந.கார்த்திக்ராஜா** 2/2, சின்னப்பட்டி, காஞ்சரம்பேட்டை அஞ்சல், மதுரை.

துணை அமைப்பாளர்கள் - வி. தமிழ்செல்வம் 222குலமங்கலம் மெயின் ரோடு, கீழப்பனங்காடி, மதுரை ம.பால்ராஜ் 2139 வெள்ளியங்குன்றம், அப்பன்திருப்பதி அஞ்சல், மதுரை மு. அர்ச்சுணன் 1171 குன்னத்தூர், களிமங்கலம் அஞ்சல், மதுரை கண்ணன் திருப்பாலை பா.ஜெகநாதன் 9/2எ, லெட்சுமிபுரம், அழகர்கோவில் வழி, மதுரை. பா.ஜெயக்குமார் 1/144 வடக்குதெரு, புதுத்தாமரைப்பட்டி அஞ்சல், மதுரை. போ.ராமமூர்த்தி 1143, வடக்கு தெரு, புதுத்தாமரைப்பட்டி அஞ்சல், மதுரை ஆ.கிருஷ்ணன் 2228கீழநெடுங்குளம், வயலூர், மதுரை வே.சரவணக்குமார். 294 பள்ளிக்கூடம் தெரு, பொதும்பு (அஞ்சல்), மதுரை.

### விருதுநகர் தெற்கு மாவட்டம்

தலைவர் - எஸ்.எம். பாண்டியராஜன் வடக்குப்பட்டி, பாலவனத்தம் 626 004.

துணைதலைவர் - எம்.எ.அன்பரசு 1/7281, மீனம்பட்டி வடக்கு 626 189

அமைப்பாளர் - **இரா.நவமணி** சர்ச் தெரு, மீனாட்சிபுரம் 626111.

துணை அமைப்பாளர்கள் - இரா.அய்யணன் 5/977, குல்லூர் சந்தை 626 001. பி.சொக்கலிங்கம் கலைஞர் காலனி, பாலையம்பட்டி 626112. பா.செல்வக்குமார் தேவர் தெரு, வைத்திலிங்காபுரம் 626154. பொ.ராஜாங்கம் சுரைக்காய்ப்பட்டி 626149. பொ.வீரபாண்டியன் 3/131, தெற்குத்தெரு, சங்கரலிங்கபுரம், நல்லமநாயக்கன்பட்டி626102

### சேலம் மத்திய மாவட்டம்

தலைவர் - எஸ் சையத் இக்பால் 92/ 59 ஜால்லால்கான் தெரு, கோட்டை, சேலம் 1

துணைதலைவர் - வ. சம்பத் 131, வெங்கடாசலம் காலனி சேலம் - 3.

அமைப்பாளர் - **மா. சீனிவாசன்** 29 ஏ.சி கோபால் தெரு, கள்ளக்குறிச்சி, சேலம் 8

துணை அமைப்பாளர்கள் - ப. பாலு காமராஜ் நகர், கரும்பாலை, வெள்ளக்கல்பட்டி, ஓமலூர், சேலம். ப. குமார் தாசநாயக்கன்பட்டி, பூமிநாயக்கன்பட்டி சேலம் பெ. சசிகுமார் 125 A ,பழைய காலனி, பி. நல்லா கவுண்டம்பட்டி ஓமலூர், சேலம் - 4. ம. சேகர் டி 12 பெரியார் நகர், செவ்வாபேட்டை, சேலம் 2 ஏ. ஈஸ்வரன் 290 அண்ணாநகர், 2வது குறுக்கு தெரு, சன்னியாசிகுண்டு, சேலம் - 15.

### சேலம் மாநகரம்

தலைவர் - எஸ். அருணாச்சலம் 17 கருங்கல்பட்டி, எக்ஸ்டென்ஷன் தெரு, குகை ,சேலம் 6.

துணைதலைவர் - ஆர். பாபு 11/5 ,2 கிழக்குத் தெரு, கருங்கல்பட்டி, குகை, சேலம்.

அமைப்பாளர் - **ஏ. நசீர் அகமது** 14/1, பாலாஜி நகர், 4வது கிராஸ், அம்மாபேட்டை, சேலம் 3.

துணை அமைப்பாளர்கள் - எ. ஜஃபர்உசேன் 69, துபால் அஹமத் தெரு, கோட்டை, சேலம் 1. எம். செந்தில்நாதன் 59/1, ராஜாபிள்ளை காடு, கிச்சிப்பாளையம், சேலம் 6 கொலம்பஸ் 101 பந்தல் காளியம்மன் கோவில் தெரு, அன்னதானப்பட்டி, சேலம். பெ. சதாசிவம் சுந்தரர் தெரு, கிச்சிப்பாளையம், சேலம் - 15. எஸ். புனிதா 7சி பிளாக், டிஎன்எஸ்சி போர்டு எம் ஆர் சி II, ஆண்டிப்பட்டி ஏரி குகை,சேலம் - 6.

### திண்டுக்கல் மாநகரம்

தலைவர் - இரா. ரவீந்திரன் எண். 42, கோவிந்தபிள்ளை சந்து, தெற்கு ரத வீதி, திண்டுக்கல்.

துணைத் தலைவர் - ஆ.மரியராஜ் குருசாமிஆசாரி சந்து, நாகல்நகர், திண்டுக்கல்.

அமைப்பாளர் - **நா. சிவக்குமார்** 36/885, கிழக்கு மெயின்ரோடு, குடைப்பாறைப்பட்டி, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் - சீ .நித்யானந்தம் 1/.ஏ, கிழக்கு இராமநாதபுரம், திண்டுக்கல். சி. பழனிவேல் மேட்டுப்பட்டி 10வது தெரு, திண்டுக்கல். சு. சாரதி 78/38, சௌராஸ்ட்ரா காலனி, நாகல்நகர், திண்டுக்கல். எஸ்.அந்தோணிராஜ் 67/43. சவேரியார்பாளையம், ஜீவாநகர், பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல். டி அந்தோணிதாஸ் 120பி, கிழக்கு ஆரோக்கிய மாதா தெரு, சுக்கான் மேடு, திண்டுக்கல்.

### கோவை தெற்கு மாவட்டம்

தலைவர் - தே. தனபாலகிருஷ்ணன் 2/175, சி. கோபாலபுரம், சிக்கராயபுரம், ஆர். பொன்னாபுரம்.

துணைத் தலைவர் - ஞான சேகரன் 5/9, இம்பிடிபாளையம், சொலவம்பாளையம், கிணத்துக்கடவு.

அமைப்பாளர் - **கு. செந்தில்குமார்.** 40, பூங்கா நகர், இருகூர், கோயம்புத்தூர்.

துணை அமைப்பாளர்கள் - செ. முருகேசன் 4/11 P.V. ராஜ வீதி, பீடம்பள்ளி (அஞ்சல்), கோயம்புத்தூர் 641016 நா. செந்தில்குமார் C7 சாரதாம்பாள் நகர், கண்ணம்பாளையம், சூலூர் 641402 நா. இராமசாமி 5/ 73,அவிநாசி ரோடு, கணியூர், சூலூர் 641659. ஆ. முத்துக்குமார் 2/ 84, பட்டியக்கவுண்டனூர், இராமபட்டிணம் (அஞ்சல்} பொள்ளாச்சி 642005 கா. சந்திர மோகன் 1/16A, பூராண்டாம்பாளையம், சுல்தான்பேட்டை, சூலூர் 641669

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

தலைவர் - சுப. செல்வம் கள்ளக்குறிச்சி மற்றும் அஞ்சல், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை.

துணைத்தலைவர் - ஜி .சண்முகசுந்தரம் கண்ணனூர் மற்றும் அஞ்சல், திருமயம் தாலுகா,புதுக்கோட்டை.

அமைப்பாளர் - **இ .ஏ .பெரியகருப்பன்** பகவானேந்தல், அழிஞ்சியேந்தல் அஞ்சல், மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை

துணை அமைப்பாளர்கள் - கா. நாகராஜன் 98, காடை இடையாத்தூர், இடையாத்தூர் அஞ்சல், மணமேல்குடி ஒன்றியம், புதுக்கோட்டை அ. பழனிவேல் புதுக்குறிஞ்சி வயல், குளமங்கலம் அஞ்சல், திருமயம் தாலுகா,புதுக்கோட்டை. பெ.ரமேஷ் ஆலத்தூர் ,மீமிசல் அஞ்சல், ஆவுடையார்கோவில் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் சு.மதியழகன் கறம்பக்காடு இனரம், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை. தமிழ்ச்செல்வன் அரசர்குளம் கீழ்பாதி, அறந்தாங்கி, புதுக்கோட்டை, துரைராஜ் அத்தாணி & அஞ்சல், அறந்தாங்கி தாலுகா, புதுக்கோட்டை. தனபாலன் ஊத்தம்பட்டி,சூரன் விடுதி அஞ்சல், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை.

### கோவை மாநகர் மாவட்டம்

தலைவர் - எம்.ஷாஜகான் 20எ, வின்சென்ட் ரோடு, மாலை முரசு எதிரில், கோட்டை, கோவை01.

துணைத்தலைவர் - அ.சந்திரன் 29/2. இந்திரா நகர், ஜெய்சாந்தி பின்புறம், சிங்காநல்லூர் கோவை5.

அமைப்பாளர் - **எஸ். கண்ணன்** போஸ்ட் ஆபிஸ் மேற்கு வீதி2, வரதராஜபுரம், கோவை15

துணை அமைப்பாளர்கள் - ஜி. ராஜேந்திரன் எல்149, டி.என்.எச். பி. காலனி, நேதாஜிபுரம், கோவை. முனுசாமி 47/28 காமாட்சி அம்மன் கோவில் வீதி, கள்ளிமடை, சிங்காநல்லூர், கோவை - 5. நல்லதம்பி 49, கிழக்கு தேவேந்திர விதி. நஞ்சுண்டாபுரம், கோவை பெ. ஆதிமூலம் 664. தியாகராய புது வீதி எண்2 கோவை - 1 சோமசுந்தரம் 10. சாமிநாதன் வீதி ரத்தினபுரி, கோவை 27.

### கோவை வடக்கு மாவட்டம்

தலைவர் - அ.ஷாஜகான் 111, திருவள்ளுவர் நகர் குனியமுத்தூர், கோவை

துணைத்தலைவர் - ராஜேந்திரன் 115முத்துசாமி கவுண்டர் வீதி ஆலந்துறை, கோவை

அமைப்பாளர் - **ராமுகுட்டி (எ) ராமமூர்த்தி** 114காமராஜர் சாலை காரமடை, கோவை.

துணை அமைப்பாளர்கள் - ஜெ.ராஜசேகர் 33எ. ஆறுமுக உடையார் வீதி, தெலுங்குபாளையம், கோவை காசி விஸ்வநாதன் (எ) பாபு எப்/1, எஸ்.ஐ.வி. காலனி, ஆலங்கொம்பு, மேட்டுப்பாளையம் கோவை. செந்தில்குமார் பஜனை கோவில் வீதி மோளபாளையம், கோவை. அ.மாரிமுத்து 12, மேட்டுப்பாளையம் ரோடு நரசிம்மநாயக்கன்பாளையம், கோவை. க. ரவிக்குமார் எல். எஸ். புரம் வீதி 4 மேட்டுப்பாளையம்-641301 .

### தென்காசி வடக்கு மாவட்டம்

துணைத்தலைவர் - மு. ஹபி புல்லா 1எ, புதுமனை, 2வது தெரு, புளியங்குடி.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - பி .சுப்பிரமணி எண். 101, பஜனை கோயில் தெரு, திருமலைநகர், பழவேற்காடு, பொன்னேரி 601205.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - எ. ஆறுமுகம் 77, பொன் விசாலாட்சி கார்டன், திருவெண்ணெய்நல்லூர்

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - து. வெங்கடேசன் 59/01, மேட்டுத்தெரு, பொன்குமார் சென்னை 600127

### தர்மபுரி மேற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - மா. குமரன் 17/212 பாமாண்டி தெரு பாலக்கோடு

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - புதூர் பாபு (எ) பெ. மெல்கின் பாபு வீ.எண் : 15.13 புதூர், மண்டைக்காடு அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம். 629 252

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

தலைவர் - ஜ. நிக்கோலஸ் 12எ, பரதர் தெரு, பாளையங்கோட்டை.

துணைத்தலைவர் - எ,செல்வின் 6,பரதர் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

அமைப்பாளர் - **வ.அருள் இளங்கோ, பி.காம்.,** 1எ, நெல்லை நாயனார் தெரு, பாளையங்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் - டை.பிரதீப் 85/1,பிருந்தாவன் நகர் 2வது தெரு கே.டி.சி. நகர், பாளையங்கோட்டை. மு. ராஜ்குமார் 14சி/381, திருச்செந்தூர் ரோடு, பாளையங்கோட்டை. இ. மெல்கியூர் லெவின் 5/388, சத்யா தெரு, பாளையங்கோட்டை இன்பெண்ட் 4எ, கே.ச்சி நாயனார் தெரு, மிலிட்டரி லைன், பாளையங்கோட்டை, ல.நவின் 17,முனையாடுவார் நாயனார் தெரு, பாளையங்கோட்டை

### நாகை மாவட்டம்

தலைவர் - மா. அஞ்சாபிள்ளை, எம்.ஜி.ஆர்.நகர், கோடியக்கரை வேதாரண்யம்.

துணைத்தலைவர் - வி.அ. சுந்தரவேலு 4/160, திடீர்குப்பம் அக்கரைப்பேட்டை கீழ்வேளூர் தாலுக்கா நாகை மாவட்டம்.

அமைப்பாளர் - **எஸ்.கே.ஜி.ஆ.சேகர்** இ13, டாடாநகர் நாகப்பட்டினம்.

துணை அமைப்பாளர் - ஜி.ராஜேந்திரன் 192.கீழப்பட்டினச்சேரி வடக்கு தெரு நாகூர், நாகப்பட்டினம். உசுரேஷ்குமார் மீனவர் காலனி விழுந்தமாவடி, கீழ்வேளூர் தாலுக்கா எம்.பி.மூர்த்தி 225, மீனவர் காலனி, வாணவன்மகாதேவி வேதாரண்யம் சு. இராஜேந்திரன் பனங்காட்டுத்தெரு, ஆறுக்காட்டுத்துறை, வேதாரண்யம் பெ. சுந்தராஜ் 54,அமிர்தா குடியிருப்பு சாமந்தாண்பேட்டை, நாகப்பட்டினம் எஸ்.குமார் மெயின்ரோடு, கீச்சாங்குப்பம், நாகப்பட்டினம் எஸ்.செல்வம் 66. புதிய நம்பியார் நகர், காடம்பாடி, நாகப்பட்டினம். பி.தேவராஜ் நடுத்தெரு செருதூர் மற்றும் அஞ்சல், கீழ்வேளூர் தாலுக்கா. த.சுப்பிரமணியன் 503, மீனவர் காலனி, திருப்பூண்டி காமேஸ்வரம், கீழ்வேளூர் ஆ.ராஜா 2/139. மீனவர் தெரு, புஸ்பவனம், வேதாரண்யம் தாலுக்கா ப. ஞானமணி ஒய்10. டாடா நகர் நாகப்பட்டினம் அ.தனபால் அண்ணாப்பேட்டை தெற்கு வேதாரண்யம் ஆர்.விஜயன் 30,வீரமுத்து படையாச்சி தெரு, நாகப்பட்டினம் பெரு. மதியழகன் சிவன் மேல வீதி நாகப்பட்டினம் சி.சுசிபாலன் 3/306, தெற்கு தெரு, அக்கரைப்பேட்டை.

### சென்னை மேற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - வி.ரஞ்சித் எண்.25/568, அயோத்தியா நகர், திருவல்லிக்கேணி, சென்னை600 005. கே. தேசப்பன் எண்.33, 5வது தெரு, நடுக்குப்பம். திருவல்லிக்கேணி, சென்னை600 005. பி.ராஜ்குமார் எண்.29/2, பைண்டியம்மன் கோயில், 2வது தெரு, மாட்டாங்குப்பம், சென்னை கு.குகவேலன் எண்.9/5, 2வது தெரு, நடுக்குப்பம், திருவல்லிக்கேணி. சென்னை 600 005

### திருச்சி வடக்கு மாவட்டம்

தலைவர் - ஜி. சிவசங்கரன் 1/271, வடக்குத் தெரு, திருப்பைஞ்சீலி, மணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

துணைத் தலைவர் - கே.எ. மணிகண்டன் 14/2, ஆண்டாபுரம் மெயின் ரோடு, காட்டுப்புத்தூர் அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம்.

அமைப்பாளர் - **வி. சரவணன்** 1/1181, சஞ்சீவிபுரம், மின்னத்தம்பட்டி அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - வி. குபேந்திரன் 1/34, நடுத் தெரு, பிள்ளாபாளையம் அஞ்சல், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம். வி. முனுசாமி (எ) கண்ணன் 20பி, சொக்கலிங்கபுரம் காலனி, சமயபுரம் அஞ்சல், மணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம். கே. சரவணன் மலையப்ப நகர் காலனி, ஊர்க்கரை அஞ்சல், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம். கே. சங்கர் கணேஷ் 36, கணபதி பாளையம், காட்டுப்புத்தூர் அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம். எம். நிக்சன் 8/41, கிளயநல்லூர் அஞ்சல், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம். எம். முகேஷ்குமார் 2/142, கூத்தூர் காலனி மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

### புதுச்சேரி மாநிலம்

தலைவர் - பா.தில்லையப்பன் (எ) ரமேஷ், 20ஏ, நாகூரார் தோட்டம், வீராம்பட்டினம், புதுச்சேரி605 009.

துணைத் தலைவர் - ம. குமணன், 32, நடுத் தெரு, புதுக்குப்பம், புதுச்சேரி605 007.

அமைப்பாளர் - **ந. கோதண்டபாணி,** 96, சிங்காரவேலர் வீதி, பெரியகாலாப்பட்டு, புதுச்சேரி - 605 014.

துணை அமைப்பாளர்கள் - த.சுப்புராயன், 9, காந்தி வீதி, முதல் தெரு, வீராம்பட்டினம், புதுச்சேரி7. இரா. பன்னீர்செல்வம், 101, அரவிந்தன் வீதி, பெரிய காலாப்பட்டு, புதுச்சேரி605 014. நா. மதிவாணன், 5, மேட்டுத் தெரு (வடக்கு), வீராம்பட்டினம், அரியாங்குப்பம், புதுச்சேரி7. பெ.விநாயகமூர்த்தி 12, முத்துமாரியம்மன் கோவில் தெரு, வம்பாகீரப்பாளையம், புதுச்சேரி1. வ.தங்கராசு, 30, செங்கேனியம்மன் கோவில் தெரு, சோலை நகர் தெற்கு, முத்தியால்பேட்டை, புதுச்சேரி. ம. வீரபத்திரன், 4, தில்லையம்மன் கோவில் வீதி, நல்லவாடு, புதுச்சேரி7. கா. மாரிமுத்து, ஓம்சக்தி கோவில் தெரு, பனித்திட்டு, ஏம்பலம், புதுச்சேரி607 402. ஏ.விஜயபாலு, 201, சுனாமி நகர், எம். புதுக்குப்பம், புதுச்சேரி607 402. தே. நிலவழகன், 65, அங்காளம்மன் கோவில் தெரு, வம்பாகீரப்பாளையம், புதுச்சேரி1. சு. ஜெயமூர்த்தி, 1, சிங்காரவேலர் மூன்றாம் வீதி, முத்தியால்பேட்டை, புதுச்சேரி-3.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 16-08-2023

**டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. மீனவர் அணி



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டி தேவாங்கர் மேல்நிலைப்பள்ளியில் 14.08.2023 அன்று மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, வேடசந்துார் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் எஸ்.ராஜப்பா, சின்னாளப்பட்டி பேரூராட்சித் தலைவர் திருமதி இரா.பிரதீபா, துணைத்தலைவர் திருமதி பா.ஆனந்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அ.நசுருதீன், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் கமலக்கண்ணன் உட்பட பலர் உள்ளனர்.

## மாணவ - மாணவிகளின் கல்வித் தரத்தை உயர்த்த

# பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## சின்னாளப்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், ஆக. 17 - தமிழக பள்ளி மாணவ - மாணவிகளின் கல்வி தரத்தை உயர்த்த தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து அதை தீவிரமாக செயல்படுத்தி வருகிறார். அதனால் தமிழகத்தில் மாணவ - மாணவிகள் கல்வி தரம் உயர்ந்தவர் என்று அமைச்சர் பெரியசாமி தெரிவித்தார்.

திண்டுக்கல் புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சின்னாளப்பட்டி தேவாங்கர் மேல்நிலைப்பள்ளிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் இ. பெரியசாமி 3,168 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மாணவ, மாணவிகளின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

எந்தவொரு துறையாக இருந்தாலும், அதில் சாதனை படைக்க வேண்டுமெனில் கல்வி அவசியம். எனவே, கல்வித்தரத்தை மேம்படுத்தவும், மாணவ, மாணவிகள் கல்வி கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தவும், பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகள், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிகழ்ச்சியில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 3,168 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கல்வித்துறைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் நிறைவேற்ற அதிக நிதி ஒதுக்கீடு செய்து, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார், என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் எஸ். ராஜப்பா, மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் நசுருதீன், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் கமலக்கண்ணன், திண்டுக்கல் மாநகராட்சி மண்டல தலைவர்கள் பிலால் உசேன், ஆனந்தி, கார்த்திக், மாமன்ற உறுப்பினர்கள் அருள்வாணி, நித்யா, பௌமிகாபர்வீன், மனோரஞ்சிதம், ஆரோக்கிய செல்வி , சின்னாளப்பட்டி பேரூர் கழக செயலாளர் மோகன்ராஜ், சின்னாளப் பட்டி சிறப்பு நிலை பேரூராட்சி தலைவர் பிரதீபா கனகராஜ், மற்றும் சின்னாளப்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சி துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா,ஆத்தூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜ கணேஷ், ஆத்தூர் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்த், சின்னாளப்பட்டி தி.மு.க. பேரூர் அவைத் தலைவர் பாலகிருஷ்ணன், சின்னாளப்பட்டி பேரூர் வார்டு செயலாளர்கள் ஆறுமுகம், மணி, தங்கவேல், முருகன், திமுக ஒன்றிய பிரதிநிதி தங்கப்பாண்டி, ராஜா, தம்பிதுரை. சின்னாளப்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சி கவுன்சிலர்கள் ரவிக்குமார்,தாமரைச்செல்வி வேல்விழி சுகுமார்,சாந்தி கணேசன்,ஹேமா. செல்வகுமாரி. சின்னாளப்பட்டி பேரூர் இளைஞரணி நிர்வாகிகள் ரவிக்குமார் மணிமாறன், , கோபிநாத். சின்னாளப்பட்டி பேரூர் கழக மாணவர் அணி நிர்வாகிகள். கார்த்திகேயன், வினோத் மற்றும் கழக மூத்த நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## விபத்துகளைத் தவிர்க்க - தொப்பூர் மலைப்பகுதி சாலையை

# சீரமைக்கும் பணியை விரைந்து மேற்கொள்வீர்!

## டாக்டர் செந்தில்குமார் எம்.பி. கோரிக்கை!

புதுடெல்லி, ஆக.17- தர்மபுரி உறுப்பினர் மருத்துவர் டி.என்.வி.எஸ் செந்தில்குமார் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது

தர்மபுரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட தருமபுரி சேலம் தேசிய நெடுஞ்சாலையான தொப்பூர் மலைப் பகுதியில் வாகனங்களில் செல்லும்பொது மக்களுக்கு அடிக்கடி விபத்துகள் ஏற்படுகிறது. மேலும் இந்த விபத்துக்களால் அடிக்கடி உயிரிழப்புகளும் ஏற்படுகிறது. NH 44 இன் KM 158/500 முதல் KM 164/900 வரையிலான தொடர்புடைய இந்த சாலை மிகவும் ஆபத்தான சாலையாக கருதப்படுகிறது.

இந்தப் பகுதியில் ஏற்படும் சாலை விபத்துகளை தடுக்க இந்த தொப்பூர் மலை பகுதியை சீரமைப்பு செய்து மேம்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ளது. மேலும் விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்று வரை சாலையை மேம்படுத்த



தேவையான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இந்த பகுதியில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் மனித உயிரிழப்பைத் தடுக்க இந்தப் பகுதியில் உள்ள ஆபத்தான வளைவுகளை அகற்றி மாற்று சீரமைப்பு செய்வது மிகவும் அவசியமானதாகும்.

விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் தருமபுரியில் இருந்து சேலம் வரையிலான தேசிய நெடுஞ்சாலை 44 வரையிலான தொப்பூர் மலை பகுதியை சீரமைக்கும் பணியை விரைவுபடுத்த சம்பந்தப்பட்ட துறைக்கு உத்தரவிட வேள்ணடும்.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

# ஒன்றிய அரசின் மெகா மோசடி அறிவிப்புகள்!

## தினகரன் நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக.17- ஒன்றிய அரசின் அறிவிப்புகள் மெகா மோசடிகளாக உள்ளதாக தினகரன் நாளேடு 16.08.2023 அன்று தலையங்கம் தீட்டியுள்ளது.

அதுவருமாறு :

நாட்டில் நிலவும் அனைத்து பிரச்சனைகளுக்கும் ஊழலே காரணம். கரையான்களைப் போல, ஊழல் நாட்டின் அமைப்புகளையும், அதன் திறன்களையும் முற்றிலும் வெறுமையாக்கியுள்ளது. ஒவ்வொரு துறையிலும் ஊழலுக்கு எதிராகப் போராடுவது முக்கியம். இந்தப் போராட்டத்தைத் தொடர்வதே எனது வாழ்நாள் அர்ப்பணிப்பு. ஊழலுக்கு எதிரான வெறுப்பு சூழலை உருவாக்க வேண்டும். அழுக்காறு நம் மனதில் வெறுப்பை ஏற்படுத்துவது போல், பொது வாழ்வில் ஊழலை விட பெரிய அழுக்கு எதுவும் இருக்க முடியாது. அதனால்தான் நமது தூய்மை பிரச்சாரத்திற்கு ஒரு புதிய திருப்பத்தை கொடுக்க வேண்டும். நாம் ஊழலை ஒழிக்கவேண்டும்' என்று தொடர்ந்து 10வது முறையாக டெல்லி செங்கோட்டையில் தேசிய கொடி ஏற்றி உரையாற்றி இருக்கிறார் பிரதமர் மோடி.



தினகரன்
மெகா மோசடிகள்

அடுத்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், உதான் திட்டம் தோல்வி, பாரத் மாலா திட்டத்தில் பல ஆயிரம் கோடி முறைகேடு, எச்சிஎல் இன்ஜின் தயாரிப்பில் ரூ159 கோடி இழப்பு, பரனூர் உள்பட 5 சுங்கச்சாவடியில் கூடுதலாக ரூ154 கோடி பொதுமக்களிடம் இருந்து வசூல், பிரதமரின் சுகாதாரக்காப்பீடு திட்டத்தில் 7.5 லட்சம் பேர் ஒரே எண்ணில் இணைக்கப்பட்டு மெகா மோசடி நடந்தது கண்டுபிடிப்பு என்று இன்னும் வரிசை கட்டி வந்து கொண்டு இருக்கிறது பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சியில் நடந்த முறைகேடுகள். மத்திய தணிக்கை வாரியம் வெளியிட்ட அறிவிப்பில் இத்தனை மோசடிகள், முறைகேடுகள் வெளி வந்து கொண்டுஇருக்கின்றன.

உதான் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 93 சதவீத வழித்தடத்தில் விமான சேவை இதுவரை தொடங்கப்படவில்லை. ரூ1089 கோடி செலவிட்டும் பல வழித்தடங்களில் விமானமே இயக்கவில்லை. இந்த திட்டத்தில் தமிழ்நாட்டில் தஞ்சை, வேலூர், ராமநாதபுரம், சேலம் ஆகிய நகரங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் சேலத்தில் மட்டுமே விமான சேவை இயக்கப்பட்டது.

பாரத் மாலா திட்டத்தில் டெல்லி மற்றும் அரியானாவை இணைக்கும் 29 கிமீ தூரம் உள்ள துவாரகா எக்ஸ்பிரஸ் சாலை திட்டத்தில் ரூ6700 கோடி முறைகேடு நடந்துள்ளதாக ஒன்றிய தணிக்கை வாரியம் தெரிவித்துள்ளது. இன்னும் பாரத்மாலா திட்டத்தில் நாடு முழுவதும் 75 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அப்படியானால் இந்த ஒரு திட்டத்தில் மட்டும் ரூ7.50 லட்சம் கோடி ஊழல் செய்து இருக்கிறது மோடி அரசு என்கிறது ஆம்ஆத்மி.

தோண்டத்தோண்ட முறைகேடுகள் வெளியே வந்து கொண்டு இருக்கிறது. பாரத் மாலா திட்டத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களால் பெரும் பயன் அடைவது அதானி என்ற குற்றச்சாட்டும் வெளிவந்து இருக்கிறது. நாடு முழுவதும் கடந்த 10 மாதத்தில் மட்டும் கிட்டத்தட்ட 4 லட்சம் பேருக்கு ஒன்றிய அரசு நிறுவனங்களில் வேலை கொடுத்ததாக கணக்கு காட்டியிருக்கிறது ஒன்றிய அரசு. எந்த தேர்வு, எப்போது அறிவிப்பு வந்தது, எப்போது நடந்தது, எந்த விவரமும் இல்லை. வேலைக்கு தேர்வான 4 லட்சம் பேரும் யார், அவர்களுடன் தேர்வு எழுதியவர்கள் யார் என்ற பட்டியலையும் எடுத்தால் இன்னும் ஒரு மெகா மோசடி வெளிச்சத்திற்கு வரும். நிலைமை இப்படி இருக்கும் போது அடுத்த ஆண்டு தேசிய கொடி ஏற்றும்போது சாதனை பட்டியல் வெளியிடுவேன் என்கிறார் பிரதமர் மோடி. ஆனால், 'அடுத்த ஆண்டு மோடி கொடி ஏற்றுவார். அது அவரது வீட்டில்' என்று பதில் கொடுத்து இருக்கிறார் காங்கிரஸ் தலைவர் கார்கே.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.




**தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள்**

புதுடெல்லி


நாள் : 17.08.2023 வியாழக்கிழமை
இடம் : முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் திடல், பேராவூர்.
தென்மண்டல BLA -2
பயிற்சி பாசறை கூட்டத்தை
துவக்கி வைக்க வருகை தரும்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களே வருக. வருக..
ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை (ம) கதர்கிராம தொழில் வாரிய அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம்
மாவட்டக் கழகச் செயலாளர் – இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர்
இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.
ARASU ARTS



சென்னை லீலா பேலஸில் நடைபெற்ற "சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் போட்டிக்கான அறிமுகக் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் போட்டிக்கான விளம்பர போஸ்டர்களை நேற்று (16.08.2023) வெளியிட்டார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய மோட்டார் ஸ்போர்ட்ஸ் கிளப்களின் கூட்டமைப்பு தலைவர் அக்பர் இப்ராஹிம் மற்றும் RPPL தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான அகிலேஷ் ரெட்டி ஆகியோர் உடனுள்ளனர்.



கனடா நாட்டின் வின்னிபெக் நகரில் அண்மையில் நடைபெற்ற World Police Fire Games போட்டியில் தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த 15 காவலர்களும், தீயணைப்புத்துறையைச் சேர்ந்த 4 காவலர்களும் கலந்துகொண்டு பல்வேறு பிரிவுகளில் 21 தங்கம் 18 வெள்ளி 15 வெண்கல பதக்கங்களை வென்றுள்ளனர். மொத்தம் 54 பதக்கங்களை குவித்து தமிழ்நாட்டுக்கு பெருமை தேடித்தந்த காவல்துறை தீயணைப்புத்துறை வீரர் – வீராங்கனையர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### சுதந்திர தினவிழாவை நேரில் காண கடிதம் எழுதிய

# சிறுவனின் ஆசையை நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## 'லவ் யூ தாத்தா' என நன்றி தெரிவித்தான்!

சென்னை,ஆக.17–

நாட்டின் 77வது சுதந்திர தினத்தை முன்னிட்டு புனித ஜார்ஜ் கோட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடி ஏற்றுவதை நேரில் காண வேண்டும் என கடந்த 3ம் தேதி ராமநாதபுரம் கமுதி தாலுகா பாப்பனம் கிராமத்தை சேர்ந்த 3ம் வகுப்பு படிக்கும் மாணவன் விதர்சன் (8), தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கடிதம் ஒன்றை எழுதி இருந்தார். இதனையடுத்து இக்கடிதம் முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, சுதந்திர தினவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. அதன்படி, கடந்த 14ம் தேதி இரவு தனது தாயார் ஆனந்த வள்ளியுடன் சிறுவன் விதர்சன் அரசு விருந்தினர்



மாளிகையில் தங்க வைக்கப்பட்டார். பின்னர், நேற்றைய தினம் சுதந்திர தின விழா நடைபெற்ற இடத்திற்கு அழைத்து வரப்பட்டு விழாவினை விதர்சன் கண்டு களித்தார். 77 வருட சுதந்திர தின விழாவில் முதல் முறையாக கடிதம் மூலமாக முதல்வரிடம் கோரிக்கை வைக்கப்பட்டு அதனை உடனடியாக பரிசீலிக்கப்பட்டு சிறுவனின் ஆசையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றியுள்ளார். இந்நிகழ்ச்சியை தொடர்ந்து முதல்வர் தனது டிவிட்டர் பக்கத்தில் சிறுவன் விதர்சன் குறித்து வீடியோ ஒன்றினை பதிவிட்டுள்ளார். அந்த வீடியோவில் சிறுவன் விதர்சன் பேசுகையில்: முதல்வரின் அழைப்பில் பேரில் நேரில் கலந்து கொண்டு தேசிய கொடி ஏற்றுவதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. ''என் ஆசையை நிறைவேற்றிய முதல்வர் ஐயாவுக்கு நன்றி. லவ் யூ தாத்தா'' என அதில் தெரிவித்துள்ளான்.

### 2024-லும் தேசியக்கொடி ஏற்றுவேன் என்று

# பிரதமர் மோடி சொன்னது அகங்காரத்தைக் காட்டுகிறது!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேட்டி!

புதுடெல்லி, ஆக.17-

பிரதமர் மோடி அடுத்த ஆண்டு தேசிய கொடி ஏற்றுவார். அது செங்கோட்டையில் அல்ல. அவரது வீட்டில் தான் தேசிய கொடி ஏற்றுவார் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார். செங்கோட்டையில் தேசிய கொடி ஏற்றிய பிரதமர் மோடி பேசுகையில்,' அடுத்த ஆண்டு செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுவேன்' என்று தெரிவித்தார்.



இதுபற்றி காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறியதாவது: பிரதமர் மோடி சொல்வது ஆணவத்தைப் பற்றிய பேச்சு. இப்போது 2023, மீண்டும் 2024ல் செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுவேன் என்று சொல்வது திமிர் மற்றும் அகங்காரம். அவரும் எதிர்க்கட்சிகளை விமர்சித்துக் கொண்டே இருக்கிறார். சுதந்திர தினத்தன்று கூட அவ்வாறு செய்தால், அவர் எப்படிப்பட்ட இந்தியாவை உருவாக்குவார். அடுத்த ஆண்டு அவர் மீண்டும் கொடியை ஏற்றுவார். ஆனால் அவரது சொந்த வீட்டில் அது நடக்கும்'.

இவ்வாறு அவர் கூறினார்.

காங்கிரஸ் தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில், 'அடுத்த ஆண்டு செங்கோட்டையில் யார் உரை நிகழ்த்துவது என்பதை முடிவு செய்வது மக்களின் சக்தி. அதை அவர்களிடமே விட்டுவிட வேண்டும்' என்றார். ஆம் ஆத்மி எம்பி சுஷில் குமார் குப்தா கூறுகையில், 'ஒன்பது ஆண்டுகள் ஆட்சியில் இருந்தும் அவர் தனது ஆட்சியில் என்ன செய்தோம் என அறிக்கை அட்டையை கொடுக்க முடியாமல் இருப்பது எனக்கு விசித்திரமாக இருக்கிறது. அடுத்த வருஷம் ரிப்போர்ட் கார்டை தருவேன்னு சொன்னா, அது எப்படி சாத்தியம். அடுத்த ஆண்டு யார் ஏற்றுவார் என்பதை முடிவு செய்வது பொதுமக்களின் விருப்பம்' என்றார்.

செங்கோட்டை விழாவை தவிர்த்த கார்கே டெல்லி செங்கோட்டையில் நடந்த சுதந்திர தின விழாவில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், காங்கிரஸ் எம்பி ராகுல்காந்தி மற்றும் இதர தலைவர்கள் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். மாநிலங்களவை எதிர்கட்சி தலைவரான கார்கேவுக்கு தனி இருக்கை ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் மல்லிகார்ஜுன கார்கே விழாவில் கலந்து கொள்ளவில்லை. அவர் தனது வீட்டில் தேசியக்கொடி ஏற்றிய பின்னர் காங்கிரஸ் அலுவலகத்தில் கட்சி கொடி ஏற்றுவதற்கு சென்றுவிட்டார். செங்கோட்டையில் இருந்து காங்கிரஸ் அலுவலகம் வருவதற்கு தாமதம் ஆகும் என்பதால் விழாவில் கலந்து கொள்ளவில்லை என்று கார்கே தெரிவித்துள்ளார்.

## 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!




### முதல்வர், கழகத் தலைவர் தலைமையில், "தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா குறித்து

# நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர்கள் - அனைத்து அணிச் செயலாளர்கள் - அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம்!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

"நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர்" அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலன் திட்டங்களையும் ஓராண்டு முழுவதும் எடுத்துரைத்தாலும் முழுமையடையாது என்றாலும், தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் அவரை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் தமிழ்நாடு முழுவதும் நடத்துவது குறித்து,

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், 19.8.2023, சனிக்கிழமை, காலை 10.30 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர்கள் – அனைத்து அணிச் செயலாளர்கள் - அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 16.8.2023

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### சென்னையில்

# 'ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்' டிசம்பரில் நடைபெறுகிறது!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

சென்னை,ஆக.17-

இந்திய மோட்டார் ஸ்போர்ட்ஸின் வரலாற்றில் சிறப்பு நிகழ்வாக பெருநகர சென்னை மாநகராட்சி (GCC), சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT), ரேஸிங் புரோமோஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவை இணைந்து இந்தியாவின் மோட்டார் ஸ்போர்ட்ஸ் தலை நகரான சென்னையில் "சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்" நடத்தப்பட உள்ளது. இந்த போட்டிக்கான அறிமுகக் கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் , தலைமையில் சென்னை லீலா பேலஸில் நேற்று (16.08.2023) நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் "சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்" போட்டியினை அறிமுகப்படுத்திய அமைச்சர் பேசியதாவது:

சென்னையில் ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் 2023 டிசம்பர் 9 மற்றும் 10 -ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. இந்தியாவில் முதல்முறையாக சாலைகள் வழியாக நடத்தப்படுகின்ற மிகப்பெரிய மோட்டார் ரேஸ் இதுவாகும்.

சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் F4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேஸிங் லீக் ஆகியவை சென்னை தீவுத்திடல் மைதானத்தைச் சுற்றி 3.5 கி.மீ சுற்றளவில் இரவு போட்டியாக (Street Circuit) நடத்தப்படுகிறது. இந்த சிறப்புமிக்க இரண்டு சாம்பியன்ஷிப் போட்டிகளிலும் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து பாலின சமத்துவத்தின் அடிப்படையில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஓட்டுநர்கள் பங்கேற்க உள்ளனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் இந்த போட்டிகளை மிகச் சிறப்பாக நடத்துவதற்காக. ரூபாய் 42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகரமாக மாற்றுகின்ற வகையில், அனைத்து முன்னெடுப்பு திட்டங்களையும் தமிழ்நாடு அரசு மற்றும் விளையாட்டுத் துறை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தீவிர நடவடிக்கையினால் உலகமே வியக்கும் வண்ணம் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மாணவ மாணவிகள், இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்கள், அனைவரும் பங்கேற்கின்ற வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2023 சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. மேலும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி, ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை2023 போட்டிகள் நடத்தப்பட்டுள்ள நிலையில் சர்வதேச அலைச்சறுக்கு போட்டி மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. அடுத்ததாக அக்டோபர் மாதத்தில் சைக்ளோத்தான் போட்டி நடத்தப்பட உள்ளது. மேலும் தமிழ்நாட்டில் அனைத்து விதமான சர்வதேச போட்டிகளும் தொடர்ச்சியாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனக் கூறினார்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

இந்த அறிமுக கூட்டத்தில் அமைச்சர் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் பார்முலா ரேஸ் (RPPL) அமைப்பினருக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, , இந்திய மோட்டார் ஸ்போர்ட்ஸ் கிளப்களின் கூட்டமைப்பு தலைவர் அக்பர் இப்ராஹிம் RPPL தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான அகிலேஷ் ரெட்டி , RPPL இயக்குநர்களான அர்மான் இப்ராஹிம் மற்றும் அபிநந்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

### தமிழ்நாட்டில்

# விவசாய நிலங்கள், மலைகளை அழிக்கும் ஒன்றிய அரசு!

## நியூட்ரினோ போன்று அடுத்த ஆபத்து!

கம்பம்,ஆக.17-

தமிழகத்தில் நியூட்ரினோ போன்று அடுத்த திட்டத்துக்காக மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரப்பகுதியில் ஒன்றிய அரசின் புவியியல் ஆய்வு மையம் நடத்தி வரும் உலோகங்கள் கண்டுபிடிக்கும் ஆய்வால் விவசாயிகள் கலக்கம் அடைந்து உள்ளனர். ஒன்றிய அரசின் புவியியல் ஆய்வு மையம் சார்பில் தேனி மாவட்டம், கம்பம் மேற்குமலை அடிவாரப்பகுதியில் அதிர்வில்லாத ஆழ்துளை இயந்திரம் மூலம் தோண்டப்பட்டு மண், கற்கள், பாறை (கோர்) சாம்பிள் எடுக்கப்பட்டு வருகிறது. இதில் ஆழ்துளை கிணறு 20 அடி முதல் 30, 40, 50 அடி என 200 அடி வரை தோண்டி கோர் சாம்பிள் சேகரிக்கப்பட்டு, தனித்தனி பெட்டிகளில் அடைக்கப்பட்டு, அதை ஆய்வு செய்ய ஐதராபாத்திலுள்ள ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த கோர் சாம்பிள் எடுக்கும் ஆய்வுப்பணிகளில், கொல்கத்தா, ஒடிசா, கேரளம், தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் பணி செய்கின்றனர்.

ஒன்றிய அரசின் புவியியல் ஆய்வு மையம் தொடங்கி உள்ள இந்த ஆய்வு தேனி மாவட்டத்திற்கு நியூட்ரினோ போல் மற்றுமொரு ஆபத்து என்றும், பசுமை மிகுந்த கம்பம் பள்ளத்தாக்கை சீர்குலைக்கும் முயற்சியாகும் என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். இதுகுறித்து பெரியாறு வைகை பாசன விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் அன்வர் பாலசிங்கம் கூறுகையில், "கம்பம் பள்ளத்தாக்கை ஒட்டிய பரப்பை ஏற்கனவே சீர்குலைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதுதான் பொட்டிபுரம் நியூட்ரினோ ஆய்வகம். அதனுடைய தொடர்ச்சியாக இந்திய புவியியல் ஆய்வு மையம் அடுத்த வேலையில் இறங்கி இருக்கிறது. கார்பனேட் மற்றும் அதனுடன் தொடர்புடைய அரிய உலோகங்களை கண்டுபிடிப்பதற்கான ஆய்வுப் பணியை, ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரை காலக்கெடு விதித்து செய்து கொண்டிருக்கிறது.

இந்திய புவியியல் ஆய்வு மைய மண்ணியல் ஆய்வாளர்கள் 2.2 சதுர கிலோமீட்டர் பரப்பை அளவீடாகக் கொண்டு, 15 செங்குத்து ஆழ்துளை கிணறுகள் மூலம் 900 மீட்டர் ஆழத்தில் துளையிடும் பணியில் இறங்கியதோடு, நான்கு ஆழ்துளை கிணறுகளை அமைத்தும் முடித்து விட்டனர். பேட்டரி கார்களுக்கு தேவையான லித்தியம் என்கிற விலை உயர்ந்த கனிமத்தை தேடி இந்த பயணம் இருக்கிறதா என்பதை இந்திய புவியியல் ஆய்வு மையம் விளக்க வேண்டும். வன வளமும், நில வளமும் மிகுந்த கம்பம்மெட்டை இந்திய புவியியல் ஆய்வு மையம் குறி வைக்க காரணம் என்ன என்பதை மக்களுக்கு அச்சம் ஏற்படுத்தாதவாறு தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும்," என்றார். ஆய்வுபணி குறித்து ஒன்றிய அரசின் புவியியல் ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறுகையில், "மலை அடிவாரத்தை ஒட்டியுள்ள வனப்பகுதியில் ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது.

தற்போது கம்பம்மெட்டு அடிவாரப்பகுதியில் உள்ள தனியார் நிலத்தில் கனிமவளங்கள் உள்ளதா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பூமிக்கடியில் எஃகு, நிலக்கரி, உலோகம் போன்றவை குறித்த தகவல்களை கண்டுபிடிக்க இந்த டிரில்லிங் முறை பயன்படுத்தப்படுகிறது. கோர் சாம்பிள் எடுத்து அனுப்புவது எங்கள் குழுவின் பணி. தமிழகத்தில் ஏற்கனவே சேலம், கிருஷ்ணகிரி பகுதியில் இதுபோல் கோர் சாம்பிள் எடுக்கப்பட்டு, ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கம்பத்தில் தற்போது 200 அடி வரை மட்டுமே (சுமார் 60 மீட்டர்) தோண்டப்பட்டு சாம்பிள் எடுக்கப்பட்டு ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டு வருகிறது. ஆய்வு முடிவுகளில் மட்டுமே இப்பகுதியில் பெருங்கனிமங்கள் அல்லது சிறு கனிமங்கள் உள்ளது தெரியவரும்" என்றார்.

உலகத்துக்கே சோறு போடும் டெல்டா பகுதியை அழித்து ஹைட்ரோ கார்பன், மீத்தேன் போன்ற திட்டங்களை எண்ணெய் நிறுவனங்களுக்காக ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. இதுதவிர, கடலுக்கு அடியிலும் எண்ணெய் திட்டங்களை செயல்படுத்த உள்ளது. ஒன்றிய அரசின் என்எல்சி நிறுவனத்தின் விரிவாக்கத்துக்காக விவசாய நிலங்கள் அழிக்கப்படுவதற்கு கடும் எதிர்ப்புகள் எழுந்து வருகிறது. இந்த சூழலில், தற்போது மேற்கு தொடர்ச்சி மலையை அழிக்கும் நோக்கில் நியூட்ரினோ போன்று அடுத்த திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருவது விவசாயிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

**நன்றி**
**தினகரன்**

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மோடி அரசை அகற்றாவிட்டால்

# நாட்டில் ஜனநாயகம் அகற்றப்பட்டு சர்வாதிகாரம் ஓங்கி நிற்கும்!

## விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் அறிக்கை!

திருவள்ளூர், ஆக.17-

அடுத்தாண்டு, 2024இல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இன்றைக்கு ஒன்றியப் பொறுப்பில் உள்ள மோடி அரசை அகற்றிவிட்டு புதிய அரசை கொண்டு வந்தால் தான் இனி இப்படி நம்மால் கொடி ஏற்ற முடியும். கூட்டங்கள் நடத்த முடியும்.

உரிமைகளுக்கு குரல் கொடுக்க முடியும். இதை இங்கு உள்ள தொழிலாளர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த மக்களும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சித் தலைவரும், கட்டுமானம் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவருமான பொன்குமார் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மற்றும் ஐயப்பாக்கம் பகுதிகளில் மாவட்டத் தலைவர் ஜி.தனலட்சுமி தலைமையில் நடைபெற்ற சுதந்திரத் தின நிகழ்ச்சிகளில் பொன்குமார் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அவர் கூட்டத்தில் பேசியாவது;

இந்த நாடு ஆங்கிலேயயிரிடத்தில் அடிமைப்பட்டு கிடந்த பொழுது, நாட்டை விடுவிப்பதற்காக ஆயிரக்கணக்கானவர்கள் சிறை சென்றனர். துப்பாக்கி தோட்டாக்களுக்கு தன்னுடைய இன்னுயிரை கொடுத்தனர். இப்படி நீண்ட நெடிய போராட்டத்திற்கு பின்பு பெற்ற சுதந்திரம் இந்த நாட்டிற்கு ஜனநாயகத்தை கொடுத்தது. அந்த ஜனநாயகம் தனிமனித உரிமையை வழங்கியது. அதன் மூலம் தான் ஒவ்வொரு இந்தியனும் சுயமரியாதையுடன் வாழ அது வழி வகுத்தது. ஜனநாயகம் நாளுக்கு நாள் வளர வேண்டுமே ஒழிய அது சுருங்கக் கூடாது. ஆனால் இன்று மத்தியில் பொறுப்பில் உள்ள மோடி அரசு ஜனநாயகத்தின் குரல்வளையை கொஞ்சம் கொஞ்சமாக நெருக்கி வருகிறது. மாநில அரசுகளின் உரிமைகள் பறிக்கப்படுகிறது. மக்களின் தனி மனித உரிமைகள் நசுக்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக சர்வாதிகாரப் பாதையை நோக்கி மோடி அரசு சென்று கொண்டிருக்கிறது.

பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இல்லாத மாநிலங்களில் அந்த ஆட்சியை பல்வேறு வழிகளில் அகற்றி விட்டு குறுக்கு வழியாக அந்த மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை பாரதிய ஜனதா கட்சி பெற்று வருகிறது. அதற்கு அரசு துறைகளான வருமானவரித்துறை, அமுலாக்கத்துறை, சி.பி.ஐ. போன்றவற்றை அப்பட்டமாக கட்சியின் ஒரு அங்கமாகவே பயன்படுத்தி வருவதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. மோடி அரசால் நியமனம் செய்யப்படும் ஆளுநர்கள் அந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவது, மாநில அரசு இயற்றும் சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் புறம் தள்ளுவது இப்படி ஜனநாயகத்திற்கு எதிரான செயல்பாடுகளை ஆளுநர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருவதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

தமிழ்நாட்டில் ஆளுநராக உள்ள ரவி அவர்கள் தொடர்ந்து தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் எதிராக செயல்பட்டு வருவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களின் மருத்துவக் கல்வி கனவை சிதைக்கின்ற நீட்



தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்கிற ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வை பிரதிபலிக்கின்ற வகையில் தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டத்திற்கு இதுவரை ஆளுநரோ, ஒன்றிய அரசோ ஒப்புதல் அளிக்காதது வேதனையான ஒன்றாகும். இந்த நிலையில் நான் எந்த காலத்திலும் நீட் தேர்வு ரத்து செய்வதற்கான ஒப்புதலை அளிக்க மாட்டேன் என்று ஆளுநர் மாளிகையில் ஆணவத்தோடு ஆளுநர் கூறியிருப்பது வெந்தப் புண்ணில் வேலை பாய்ச்சுவதற்கு சமமாகும்.

ஆளுநரின் இந்த அடாவடித்தனத்தால் தான் அரியலூர் மாணவி எஸ்.அனிதா தொடங்கி, குரோம்பேட்டை மாணவர் எஸ். ஜெகதீஸ்வரன் வரை தொடர்ந்து தங்களுடைய இன்னுயிரை மாய்த்துக் கொள்கிற சம்பவம் நடைபெற்று வருகின்றது. குரோம்பேட்டையைச் சேர்ந்த மாணவர் எஸ்.ஜெகதீஸ்வரன் இரண்டு முறை நீட் தேர்வு எழுதியும் அதிக மதிப்பெண்கள் பெற்று அவரால் மருத்துவக் கல்லூரி இடத்தை பெற முடியவில்லை என்பதால் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்ட சோக சம்பவம் மறைவதற்குள் அவரது தந்தை பி.செல்வசேகர் அவர்களும் தூக்கிலிட்டு இறந்துள்ளார்.

இந்த இரட்டை கொலைக்கு காரணம் தமிழ்நாடு ஆளுநர் ரவியின் ஆணவமேயாகும். தமிழ்நாட்டில் உள்ள ஒட்டுமொத்த மக்களும் அனைத்துக் கட்சிகளும் ஆளுநரின் இந்த அடாவடித்தனமான செயலை கண்டித்தும் ஒன்றிய அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அவரை உடனடியாக திரும்பப் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் மாநில அரசுகளுக்கு இடைஞ்சல் செய்ய வேண்டும் என்பதற்காகவே ஆளுநர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதால் அவரை மாற்றவோ, கண்டிக்கவோ மோடி அரசு தயங்குகிறது. இவை எல்லாம் சர்வாதிகாரத்தின் உச்சமாகும்.

எனவே இப்படிப்பட்ட சர்வாதிகாரம் அகற்றப்பட்டால் தான் ஒன்றுபட்ட இந்திய நாடு தொடர்ந்து வளர்ச்சி பாதையில் பயணிக்க முடியும். எனவே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களும் குறிப்பாக உழைக்கும் தொழிலாளர்கள் அனைவரும் அடுத்தாண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஒன்றிய ஆட்சியில் உள்ள பா.ஜ.க.வையும் அதோடு கூட்டணியில் உள்ள கட்சிகளையும் வேரோடு அகற்றுவதற்கான உறுதியினை இந்த சுதந்திர நாளில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தலைவர் பொன்குமார் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் என்.சுந்தராஜ், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் அருள் அன்பரசு உட்பட மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா

# மாநிலம் முழுவதும் இரத்த தான மருத்துவ முகாம்கள்!

## கனிமொழி என்.வி.என்.சோமு - எழிலன் நாகநாதன் முன்னிலையில் நடந்த கழக மருத்துவ அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக.17-

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் காணொலி காட்சி வழியாக 15-08-2023 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மருத்துவ அணித் தலைவர் மருத்துவர் கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி. தலைமையேற்றார்.

மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ முன்னிலை வகித்தார்.

துணைத் தலைவர்கள் மரு.எம்.செந்தில்நாதன், மரு.எ.வ.வே.கம்பன், இணைச் செயலாளர்கள் மரு.இரா.இலட்சுமணன், மரு.ஆர்.கோகுல் கிருபாசங்கர், துணைச் செயலாளர்கள் மரு.செ.வல்லபன், மரு.ஆர்.இராஜேஸ்வரி மோகன் காந்தி, மரு.அஞ்சுகம் பூபதி, மரு.ஜெ.அருண், மரு.ஆர்.டி.அரசு, மரு.ஆர்.அண்ணாமலை, மரு.கலை கதிரவன், எஸ்.ஏ.இரமேஷ், திருமதி ஆர்.திலகவதி ஜெயராஜ், இராஜேஷ் பாபு, மன்சூர் அலிகான், செண்பக விநாயகம் உள்ளிட்ட நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, மருத்துவ அணிக்கான உறுப்பினர் சேர்க்கை, மருத்துவ அணியின் மாவட்ட தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் உள்ளிட்ட பல்வேறு கருத்துகள் ஆலோசிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் கீழ்க்காணும் ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக மருத்துவ அணி நிர்வாகத்தை தொகுதி அளவில் விரிவாக்கம் செய்து, செவிலியர்கள், மருந்தாளுனர்கள், இயன்முறை மருத்துவர்கள், மருத்துவ தொழில் நுட்ப பணியாளர்கள் உள்ளிட்ட மருத்துவ துறை சார்ந்தவர்களை உள்ளடக்கி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பொறுப்புகளை உருவாக்க அனுமதி அளித்து, உரிய பொறுப்பாளர்களை தேர்வு செய்து அறிவிக்க வழிகாட்டிய, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, கழக மருத்துவ அணி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

மாநில உரிமைகளை பறிக்கும் வகையிலும், மருத்துவ கல்வியில் தடைகளை ஏற்படுத்தும் வகையிலும் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட, 'EXIT' தேர்வுக்கு எதிராக தொடர் அழுத்தம் கொடுத்து, தேர்வு ஒத்தி வைக்கப்பட காரணமாக அமைந்த கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு, கழக மருத்துவ அணி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு மண்டலம் மற்றும் பிற மாநிலங்களில் ஆங்கில கருத்தரங்கங்கள் நடத்துவது, மாவட்ட அளவில் இரத்ததான முகாம்கள், ஒன்றியம் மற்றும் பகுதி அளவில் இலவச மருத்துவ முகாம்கள், ஊரக சுகாதார நிலையங்களில் கூடுதல் தேவைகளை அறிந்து அவ்வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய பணிகளை செவ்வனே மேற்கொள்வது என கழக மருத்துவ அணி தீர்மானிக்கிறது.

புதிதாக நியமிக்கப் பட்டுள்ள மருத்துவ அணி நிர்வாகிகளில் மாவட்ட தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் ஆகியோருக்கான அறிமுக கூட்டத்தை சென்னையில் 26/08/2023 அன்று சிறப்போடு நடத்தி, ஆலோசனை மேற்கொள்வது என கழக மருத்துவ அணி தீர்மானிக்கிறது.

தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பை சிதைக்கும் வகையிலும், தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கல்வி கனவுகளை அழிக்கும் வகையிலும், உயிர்பலி வாங்கும் நீட் என்கிற எதேச்சதிகார கொடுங்கோன்மைக்கு எதிராக, தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'நீட் விலக்கு' மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்க வழி செய்யுமாறு ஒன்றிய அரசை, கழக மருத்துவ அணி வலியுறுத்துகிறது.

இந்திய அரசியல் சாசனத்திற்கு எதிராக, தமிழ்நாடு சட்டமன்றத்தையும் அதனை தேர்ந்தெடுத்த மக்களையும் அவமதிக்கும் வகையில், தன் அதிகார வரம்பை மீறி தமிழ்நாட்டின் 'நீட் விலக்க மசோதாவிற்கு' ஒப்புதல் அளிக்க மாட்டேன் என தெரிவித்த ஆளுநர் அவர்களுக்கு, கழக மருத்துவ அணி கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு முழுவதுமிருந்து மருந்தாளுநர்களிடமிருந்து வந்த கோரிக்கையை, நாடாளுமன்றத்தில் எடுத்து வைத்து ஆன்லைன் மருந்து விற்பனைக்கு எதிராக வலுவான குரலை பதிவு செய்த, கழக மருத்துவ அணித் தலைவர் மருத்துவர் கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி அவர்களுக்கு மாநில நிர்வாகிகள் கூட்டம் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் கழக மருத்துவ அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.



திருவள்ளூர் மாவட்டம் முரசொலி மாவட்ட செய்தியாளர் இரா.அண்ணாதுரை உடல்நிலை சரியில்லாத காரணமாக சென்னை முகப்பேர் எம்.எம்.எம். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. நேரில் சென்று நலம் விசாரித்து அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவரிடம் கேட்டு அறிந்தார்.

# மாறன் என்றால் சாமான்யமா? - பேரறிஞர் அண்ணா



உலகத் தமிழர்களின் உயர்விற்காய், சோதனைகள் பல ஏற்று வேதனைகள் பல தாங்கி, ஓயாது உழைத்த உழைப்புச் சூரியனாம் தமிழினத் தலைவர் கலைஞரின் சிந்தையில் நிறைந்து, அவரது தோள்மீதும் மார்மீதும் படர்ந்து அரவணைத்து தலைவர் கலைஞரின் ஊனிலும், உணர்விலும், உயிரிலும் நீக்கமற நிறைந்து, "எனது மடியில் ஆடிய மான்குட்டி! அறிஞர் அண்ணா ஆர்வத்தோடு தட்டிக் கொடுத்த புலிக்குட்டி! அறிவு, ஆற்றல் இவற்றில் எப்போதுமே படுசுட்டி" எனத் தலைவர் கலைஞரால் புகழாரம் சூட்டப்பட்ட தலைவரின் மனசாட்சி மாமேதை முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்தநாள் இன்று (ஆகஸ்ட் 17).

தலைவர் கலைஞர் அவர்களின் தயாரிப்பாக வளர்ந்து, அரசியல், கலை, இலக்கிய, திரை உலகில் வலம் வந்து, கலைஞரை ஆசானாய், அன்னையாய், ஏற்றுப் போற்றிய எழில்நிறை மாறன் அவர்கள் பிறந்தநாள் ஆகஸ்ட் 17.

எவருக்கும் கிட்டாத பெரும் பாக்கியமாம், அண்ணாவின் தென் சென்னை நாடாளுமன்ற பொறுப்பிற்கு அண்ணாவாலேயே அடையாளம் காட்டப்பட்டு, மூதறிஞர் இராஜாஜி, கண்ணியமிக்க காயிதேமில்லத் போன்ற பேரறிவாளர்களால் முன் மொழிந்து, வழிமொழியப்பட்டு தலைநகர் டெல்லிக்கு கழகப் பிரதிநிதியாய் சென்று, கடைசிவரை கலைஞரின் குரலாக, கழகத்தின் கொள்கைகளைப் பறைசாற்றிய மிகச் சிறந்த கழகத்தொண்டர் முரசொலி மாறன் அவர்கள்.


வெளுத்ததெல்லாம் பாலெனவும், வஞ்சகரேயானாலும், அவர் தம் வறிய நிலை கண்டு இரக்கம் கொண்டு, பின் ஏமாறும் தூய முல்லை மலர் உள்ளம் கொண்ட நம் தலைவர் கலைஞர் அவர்களுக்கு,

நல்லவர், நயவஞ்சகர், நரிகுணத்தார் எவரென தரமறிந்து எடுத்துரைக்கும் ராஜதந்திரியாக விளங்கி, விந்தைகள் பல நிகழ்த்தும் டெல்லிப் பட்டணத்து அரசியலில் தலைவர் கலைஞருக்கு குளிருக்கு கதகதப்பாய், கோடையில் குளிர் தருவாய் கடமையாற்றியவர் கண்ணியமிக்க முரசொலி மாறன் அவர்கள்.

நினைவறிந்த நாள்முதலாய், நெஞ்சில் பதிந்து விட்ட தலைவரின் தடம் பற்றி, அறிவை வளர்த்து, அவரைப் போலவே நேர் வகிடெடுத்து நேர்த்தியாய் செயல்கள் புரிந்த தலைவர் கலைஞரின் தலைமாணாக்கர்,

குடிப்பெயரும், குலப்பெருமையும், கோபுர வாசமும், கோமான்களின் நேசமும் கொண்ட குடும்பங்களில் பிறந்த எத்தனையோ இளைஞர்கள் தங்கள் வாலிபத்தில் தடுமாறி, தடம்மாறி, தறிகெட்டு போன நிலையில், நடுத்தர வேளாண் குடும்பத்தில் பிறந்து, மிட்டா மிராசு, பட்டா பவிசு ஏதுமின்றி தன் அன்னை நிகர் அன்பூட்டிய, அறிவூட்டிய தலைவரை அணுவளவும் மறவாமல் பின்பற்றி, எப்படி 22 வயதில் கலைஞர் இராஜகுமாரி திரை உரையாடல் காவியம் படைத்தாரோ, அது போன்று தனது 24 வது வயதில் 'ஏன் வேண்டும் இன்ப திராவிடம்?' எனும்ஆராய்ச்சி விளக்க நூல் படைத்து, பகுத்தறிவுப் பகலவன் பேரறிஞர் அண்ணா அவர்களால், " மாறன் என்றால் சாமான்யமா? என் தம்பியல்லவோ! எனப் பாராட்டப்பட்டவர் இளம்மேதை மாறன் அவர்கள்.


வழக்கறிஞர்
**வெ. அன்புவாணன்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்.

தலைவர் கலைஞர் "அபிமன்யு" திரைப்படத்திற்கு வசனம் எழுதிய போது வயது 24 .

மாறன் அவர்கள் "சாம்ராட் அசோகன்" ஓரங்க நாடகம் எழுதிய போது வயது 24.

அண்ணா அவர்களின் அறிவாயுதமாய், அரசியல் அரங்கில் அறிமுகமாகி, தென்மாநிலங்கள் புறக்கணிக்கப்படுவதை சுட்டிக் காட்டியும், இந்தித் திணிப்பை எதிர்த்தும், இலங்கை தமிழர் இழிநிலைக் குறித்தும், நாடாளுமன்றத்தில் பாசறை முழக்கமிட்டு, பல மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு உதாரண புருஷராய், ஆசானாய் விளங்கி, திராவிட முன்னேற்றக் கழகத்தை முன்வரிசைக்கு கொண்டு சென்றவர் அறிவுலக மேதை முரசொலி மாறன் அவர்கள்.

கழகத்தின் போர்வாளாகவும், கேடயமாகவும் திகழ்ந்து மாற்றார் ஏசல் கண்டு ஆர்ப்பரித்து அவற்றை வெல்லும் அறிவாயுதமாம் முரசொலிக்கு தலைவர் கலைஞருக்கு பின் முழுப்பொறுப்பேற்று, வார ஏடாகவும், நாளிதழாகவும் வெளிவந்த முரசொலியில் முரசொலி மாறன் அவர்கள் படைத்த கட்டுரைகள், தலையங்கங்கள், கேள்வி- பதில் இவை கழகத் தோழர்களின் கருத்துக்கு விருந்தாக அமைந்தது. இது தலைவர் கலைஞர் அவர்களுக்கும் தனது வார்ப்பாய் முரசொலி மாறன் அவர்கள் வளர்ந்து புகழ் பெறுதலால் மனதிற்குள் மகிழ்ச்சியை பலநேரங்களில் தந்தது. சில தருணங்களில் தானே அவற்றை நேரில் பாராட்டி பலரறிய சுட்டிக் காட்டியுள்ளார்.

அறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பின் 1970-ல் திருச்சியில் சிந்தனை சிற்பி சி. பி. சிற்றரசு தலைமையில் அன்பில் தர்மலிங்கம் மாநாட்டிற்கு வரவேற்பு குழுத் தலைவராக பொறுப்பேற்று சிறப்புற நடத்திய மாவட்ட மாநாடு குறித்து தமது "நெஞ்சுக்கு நீதி" இரண்டாம் பாகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டு, ஈன்றபொழுதினிற் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாயாய் உள்ளம் பூரித்து உவகை கொள்கிறார் நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

"ஒரு மாநில மாநாட்டைப் போல் விளங்கிய அந்த மாவட்ட மாநாட்டின் ஊர்வல சிறப்பு குறித்து முரசொலியில் தம்பி மாறன் எழுதிய ஒரு சொல்லோவியத்தை இங்கே நினைவூட்டுகிறேன்.

ஒரு மாநில மாநாட்டை நடத்தி விட்டு, மாவட்ட மாநாடு என்று அன்பிலார் பொய் கூறிவிட்டார். திருச்சி மாநாடு பல விதங்களில் முக்கியத்துவம் பெற்று திகழ்கிறது.

திருச்சி நண்பர்கள் நல்ல வேலை செய்தார்கள். பகலில் ஊர்வலம் நடத்தி, வெயில் கொடுமையில் நமது தோழர்களை வாட்டி, வதைக்காமல் இரவு நேரத்து ஊர்வலமாக திட்டமிட்டு அதற்கேற்ற வகையில் ஒவ்வொரு ரதத்திலும் ஒளிவிளக்குகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஊர்வலக் கலையில் நாம் வல்லவர்களாக இருப்பதால் தான் இந்தியாவிலேயே இதுவரை நடந்ததில்லை எனக் கூறத்தகும் அளவிற்கு உலகத்தமிழ் மாநாட்டு ஊர்வலத்தை நடத்த முடிந்தது.

கல்லக்குடி போராட்ட சிறைவாசம் ஏற்று கலைஞர் எழும்பூர் வந்திறங்கிய நேரம் அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றது தலைநகரத்துவாசிகளிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்தவில்லையா!

விலைவாசி போராட்ட சிறைவாசம் முடித்து நமது அண்ணன் வேலூரிலிருந்து தலைநகரம் வந்த காலை ஊர்வலத்தில் அண்ணன் வந்த பவனியை அன்றைய 'சுதேசமித்திரன்' வார ஏடு எப்படி வர்ணித்திருந்தது தெரியுமா?

உலகெங்கும் வெற்றிகளைக் குவித்து ஜூலியஸ் சீசர் ரோம் நகரம் வந்த போது, அவருக்கு தரப்பட்ட வரவேற்புக்கும், ஐரோப்பிய வெற்றிகளை ஈட்டி பாரீஸ் திரும்பிய போது நெப்போலியனுக்கு தரப்பட்ட வரவேற்புக்கும் அல்லவா அந்த ஏடு ஒப்பிட்டிருந்தது.

முதன்முதலில் மதுரை மாநாட்டு ஊர்வலத்தில் தான் பேருந்துகள் பயன்படுத்தப்பட்டன. அதைக் கண்டு மகிழ்ந்த அண்ணன் அதை அல்ஜீரியா விடுதலை வீரர்களின் அணிவகுப்பிற்கல்லவா ஒப்பிட்டார்."

எனக் குறிப்பிட்டு பெருமை கொண்டார் நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

1965-ல் தலைவர் கலைஞர் பாளைத்தனிமை சிறையில் அன்றைய ஆட்சியாளரால் அல்லலுற்ற நிலையில், ஆதிக்க மனம் படைத்தோரின் அடாவடிச் செயல்களை ஆணித்தரமாய் தனது எழுத்தில் காட்டி, மொழிப்புரட்சியின் முக்கியத்து வத்தை அன்றைய இளைஞர் சமுதாயம் உணர்ந்து விழித்தெழுந்த அந்த நாட்களில் முரசொலியில் புதுப்புது செய்திகள், கனல் பறக்கும் கட்டுரைகளை தீட்டிய காரணத்தால் பத்திரிகை நிர்வாகியான முரசொலி மாறன் அவர்கள் இந்திய பாதுகாப்புச் சட்டம் பிரிவு 41 (5) ன் படி கைது செய்யப்பட்டார்.

1975-ல் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப் பட்ட போது, நேரில் மட்டுமின்றி திரைமறைவாகவும் அதை எதிர்க்க பலர் அஞ்சிய அந்நாளில் துணிந்து 27.6.1975-ல் இந்திரா சர்வாதிகாரியாகிறார் எனத் தலைப்பிட்டு கேலிச் சித்திரம் தீட்டி, அதை வெளிநாட்டு பத்திரிகையான " நியூஸ் வீக்" வெளியிட்டு, வன்முறை வெறியாட்டங்கள், ஜனநாயக வரம்பு மீறல்களை உலகறியச் செய்த அஞ்சா நெஞ்சினர் நமது முரசொலி மாறன் அவர்கள்.

இதன் விளைவாகவே மிசாவில் கைது செய்யப்பட்டு ஏதச்சதிகாரத்திற்கு ஏவல் புரிந்த காவல் துறையினரால் குறிவைத்து தாக்கப்பட்டு சொல்லொன்னா துயரங்களை தாங்கிக் கொண்ட தியாக தீபம்தான் அறிவுலகமேதை மாறன் அவர்கள்.

மிசாக்கால கொடுமை மிகுந்த நாட்களில் அடைந்த தாக்குதல்கள் அவரின் கடைசி காலம் வரை, தொடர்ந்து தொல்லை தந்தே வந்தது. இத்தனையும் தான் பொறுத்து இதயம் நிறைந்த தலைவரின் புகழ் பாடி, கொள்கை சொல்லி, கொற்றம் காத்திட காலநேரம் பாராது, கண்துஞ்சாது கடமையாற்றிய கண்ணியவான்-கலைஞரின் கண்மணி மாறன் அவர்கள்.

எம்.பி.யாகி டெல்லி சென்றால் இயன்றவரை உல்லாசம் அனுபவித்து, மாலைநேரத்து கேளிக்கை அரங்குகளிலும், மனமகிழ் மன்றங்களிலும் மகிழ்ந்திருந்து, எப்பொழுதேனும் சபைக்கு வந்து, தவறாமல் வருகைப் பதிவேட்டில் கையொப்பம் இட்டு, அதற்கு படியும் கிடைப்பதால் பரவாயில்லையென திருப்தி கொண்டு உள்ளே நுழையாமல் ஒதுங்கியே நாட்களைக் கடத்திய சில நாடாளுமன்றவாதிகளின் நடுவில், பாராளுமன்ற கட்டிடத்தை பள்ளியாய், கல்லூரியாய் பாவித்து தவறாமல் வரும் நல்லாசிரியர் போல், அறிவுப் பசி நிறைந்த மாணவர் போல் சபையில் இடம்பெற்று, சபை நடவடிக்கைகளில் தனது வாதப் பிரதிவாதங்களால், மாற்றார் சொல் கண்டு மலைக்காமல், தனது சொல்வன்மை மூலம் ஆதாரமற்ற புகார்களை கூர் மழுங்கச்செய்து, வடநாட்டு தலைவர்களின் " சபாஷ்" பெற்று, தென்னிந்தியாவின் நாடறிந்த நடமாடும் நாடாளுமன்றமாய் திகழ்ந்தவர் தலைவர் கலைஞரின் வீர அபிமன்யு முரசொலி மாறன் அவர்கள்.

இப்படி தலைவர் கலைஞர் அவர்களால் திறம்பட வளர்க்கப்பட்டு, எழுத்தாளராக, பேச்சாளராக, திரைப்படவசனகர்த்தாவாக, நாடக ஆசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, வரலாற்று ஆசிரியராக, பெரும் படிப்பாளியாக, படைப்பாளியாக, சிறந்த நாடாளுமன்ற வாதியாக, கழகத்தின் முதல் ஒன்றிய அமைச்சராக, கழகத்தின் முக்கிய மூளையாய், கலைஞரின் மனசாட்சியாய் விளங்கிய தலைவர் கலைஞர் வளர்த்த தங்கம், அறிவுப் பெட்டகம், அறிவுலக மேதை முரசொலி மாறன் அவர்களின் 90 வது பிறந்த நாள்தான் இன்று.

அவரது தியாகம், தலைவர் கலைஞர் அவர் மீது கொண்டிருந்த பற்று, பாசம், பக்தி கழகத்தின் பால் கொண்ட விசுவாசம், இவற்றை இந்நாளில் இயக்கம் வளர்த்து, எதிர்கால தமிழினத்தின் விடியலுக்காய் நாளும் உழைக்கும் நம்மரும் முதல்வர் தமிழினத்தளபதி அவர்கட்கு நாமும் நல்கி, அவரது எதிர்கால தமிழ்கனவு, ஆளுமை, விந்தியம் கடந்து, இந்திய தலைநகரில் எதிரொலிக்க, வென்றெடுக்க துணை நிற்போம் என சூளுரைப்போம்!!

இதைத்தான் மறைந்தும் மறையாமல் வாழும் முரசொலி மாறனின் மனமும் விரும்பும்.

ஓங்கட்டும் தலைவர் கலைஞரின் மனசாட்சி அறிவுலக மேதை முரசொலி மாறன் அவர்களின் பெரும்புகழ்!

### காலத்தால் அழியாத பாடல்கள் பல பாடிய

# டி.எம்.எஸ். தமிழ் மக்களால் என்றென்றும் நினைவுகூரப்படுவார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஆக. 17 -

"காலத்தால் அழியாத பாடல்கள் பல பாடிய டி.எம்.எஸ். தமிழ் மக்களால் என்றென்றும் நினைவு கூரப்படுவார்" என்று டி.எம்.சௌந்தரராஜனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் பதிவிட்டு புகழாரம் சூட்டியுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது :-

தமிழ் சினிமாவை தனது காந்த குரலால் கட்டிப் போட்டு நாற்பது ஆண்டுகள் கோலோச்சிய டி.எம். சௌந்தரராஜன் அவர்களது சிலையை மதுரையில் திறந்து வைத்தேன்.

24 வயதில் பாடத் துவங்கி, 11 மொழிகளில் 10 ஆயிரத்துக்கும் மேல் திரைப்பாடல்கள், 2500 பக்திப் பாடல்களைப் பாடிய அவர், பட்டினத்தார், அருணகிரிநாதர் போன்ற படங்களிலும் நடித்திருக்கிறார். டி.எம்.எஸ் அவர்கள் பாடிய பக்திப் பாடல்கள் இன்றுவரை தமிழ்நாட்டின் அனைத்துக் கோயில்களிலும் திருவிழாக்களிலும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

அவரது நூற்றாண்டு விழாவை யொட்டி, சென்னையில் அவர் வாழ்ந்த வீடு அமைந்திருக்கும் மந்தைவெளி வெளிவட்டச் சாலைப் பகுதிக்கு 'டி.எம்.சௌந்தரராஜன் சாலை' எனப் பெயர் சூட்டினோம்.

"திரை இசை, மக்கள் இசை யாரும் அடையாத உயரத்தைப் பெற்றவர் டி.எம்.எஸ். 1950ஆம் ஆண்டு மந்திரிகுமாரி காலத்தில் இருந்து எனக்கு நண்பர். நடிகர்களுக்கு ஏற்ப குரலை மாற்றிப் பாடும் வித்தைக்காரர்" என முத்தமிழறிஞர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

கலைஞரின் வரிகளில், ஏ.ஆர். ரகுமான் இசையில் உருவான 'செம்மொழியான தமிழ்மொழியாம்' என்ற பாடலில், மற்ற இளம் பாடகர்களுடன் இணைந்து டி.எம்.எஸ் பாடியிருந்தார்.

காலத்தால் அழியாத பாடல்கள் பல பாடிய அவர் என்றென்றும் தமிழ் மக்களால் நினைவுகூரப்படுவார்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (16.08.2023) ஆணையர் அலுவலகத்தில் திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயில் மற்றும் சிறுவாபுரி, பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணிகள் மற்றும் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர்.க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள்.அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, தலைமைப் பொறியாளர்.சி.இசைஅரசன், இணை ஆணையர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இந்தியாவின் பாதுகாப்பு உள்கட்டமைப்பு சோதனை திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டில் முதல் ஆளில்லா விமான (ட்ரோன்) பொது சோதனை மையம்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!



சென்னை, ஆக.17-

தமிழ்நாட்டில் வான் வெளி மற்றும் பாதுகாப்பு துறையின் மேம்பாட்டிற்கான முகவாண்மை நிறுவனமாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) செயல்பட்டு வருகிறது, இத்துறையின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது, அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் வான் வெளி மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு பொது சோதனை மையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஒன்று ஆளில்லா விமான பொது சோதனை மையமாகும் (Unmanned Aerial Systems Common Testing Centre). தற்போது, இத்தகைய சோதனை மையம் கர்நாடக மாநிலம், சித்திரதுர்காவில் DRDO தனது பயன்பாட்டிற்காக உருவாக்கியுள்ளது. தமிழ்நாட்டில் ஆளில்லா விமானம் தயாரிக்கும் தொழில் நிறுவனங்கள், மோட்டார்கள், பேட்டரி உட்பட பல்வேறு பாகங்களை தனித்தனி மையங்களில் சோதனை செய்து வருகின்றன. இது செலவினத்தை அதிகரிப்பதோடு, சோதனைகளை மேற்கொள்ள காலதாமதமும் ஆகின்றது.

இந்த இடர்பாடுகளைகளையும் நோக்கத்துடன் ஒன்றிய அரசின் பாதுகாப்பு உள்கட்டமைப்பு சோதனை திட்டத்தின் கீழ் (DTIS), இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த ஆளில்லா விமான (ட்ரோன்) சோதனை மையத்தை அமைக்க டிட்கோ நிறுவனம் திட்டமிட்டது. ஒன்றிய அரசின் மானியத்துடன் செயல்படும் இத்திட்டத்தை செயல்படுத்த டிட்கோ ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளியை கோரியது. அதன் அடிப்படையில், கெல்டிரான் (Keltron), சென்ஸ் இமேஜ் (Sense image) ஸ்டாண்டர்டு டெஸ்டிங் & காம்ப்ளையன்ஸ் (Standard Testing & Compliances) மற்றும் அவிக்ஷா ரீடெய்லர்ஸ் (Aviksha Retailers) முதலான நான்கு நிறுவனங்கள் டிட்கோவுட ன் இணைந்து ரூ. 45 கோடி மதிப்பீட்டில் ஆளில்லா விமான சோதனை மையத்தை அமைக்க உள்ளன. இந்த சோதனை மையம், ஆளில்லா விமானத்தின் ஆராய்ச்சி, வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் சோதனைகளுக்குத் தேவையான பல்வேறு வசதிகளை ஒரே இடத்திலேயே சர்வதேச தரத்தில் வழங்கும்.

இந்த சோதனை மையம், ஸ்ரீபெரும்புதூர் அருகே வல்லம் வடகாலில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார் 2.3 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. ஆளில்லா விமான உற்பத்தியில் தமிழ்நாடு சர்வதேச மையமாக திகழவும் பாதுகாப்புத் துறையில் இந்தியாவின் தற்சார்புத் தேவையை பூர்த்தி செய்யவும் இச்சோதனை மையம் வழிவகுக்கும்.

"இந்தியாவின் முதல் பொது ஆளில்லா விமான சோதனை மையம் தமிழ்நாட்டில் அமைய இருப்பது, வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திச் சூழலில் உயரிய இடத்தை தமிழ்நாடு அடைய வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் அர்ப்பணிப்பிற்கு எடுத்துக்காட்டு. இத்துறையின் தேவைகளை புதுமையான முறையில் பூர்த்தி செய்து முதலீட்டாளர்களை ஈர்த்து வருகிறோம். வான்வெளி மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை துவங்குவதற்கு விருப்பமான இடமாக தமிழ்நாட்டை மாற்ற இந்த சோதனை மையம் உதவும்.

வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்தித்துறையின் பிரதிநிதிகளுடன் சமீபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேலும் பல ஆலோசனைகள் பெறப்பட்டன. இத்துறை மேலும் வளர தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில் நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். இம்முயற்சிகளுக்கான பலன்கள் விரைவில் கிடைக்கும்" என்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

### திருப்பெரும்புதூர்

# பாக்ஸ்கான் ஆலையில் ஐபோன் உற்பத்தி தொடங்குகிறது!

சென்னை, ஆக.17 -

சென்னையை அடுத்துள்ள திருப்பெரும்புதூரில் உற்பத்திக் கூடத்தை அமைத்துள்ள பாக்ஸ்கான் ஆலையுடன் ஆப்பிள் நிறுவனம் ஒப்பந்தம் செய்து ஐபோன் உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் ஐபோன்கள் இந்தியா மட்டுமல்லாது, உலகின் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. அதேசமயம் ஆப்பிள் நிறுவனத்தின் முக்கிய உற்பத்தி நிலையமாக உள்ள சீனாவில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக அதிக அளவிலான உற்பத்தி தடைப் பட்டிருக்கிறது. மேலும், இதில் பல்வேறு சிக்கல்களும் நிலவி வருகிறது. இவற்றை சரி செய்யும் விதமாக சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் அமைந்துள்ள பாக்ஸ்கான் ஆலையில் ஐபோன் உற்பத்தியை அதிகரிக்க ஆப்பிள் நிறுவனம் முடிவு செய்து இருக்கிறது. இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இந்தப் புதிய ஒப்பந்தத்தின் மூலம் சீனாவில் தயாரிக்கப்பட்டு, சில வாரங்கள் கழித்து பாக்ஸ்கான் ஆலையில் உருவாக்கப்படும் புதிய மாடல் ஐபோன்கள் அறிமுகப்படுத்தப்பட்ட உடனேயே பாக்ஸ்கான் ஆலையிலும் இனி உற்பத்தியை தொடங்க உள்ளது. இதன் மூலம் புதிய வகை ஐபோன்கள் உடனேயே இந்தியா பயனாளிகளின் பயன்பாட்டுக்கும் கொண்டு வரப்படும்.

மேலும், இதன் மூலம் தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக, தமிழ்நாடு அரசு பாக்ஸ்கான் மற்றும் ஆப்பிள் நிறுவனங்களு டன் கடந்த மாதம் ஆலோசனை நடத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

# நிலவின் உள்வட்டப் பாதை சுற்று தூரத்தைக் குறைக்கும் சந்திரயான் 3

பெங்களூரு, ஆக. 17 -

சந்திரயான் 3 விண்கலம், நிலவின் உள்வட்டப் பாதையில் மேலும் தனது சுற்று தூரத்தைக் குறைக்க உள்ளது. இந்திய நேரப்படி நேற்று காலை 8.30 மணியளவில் சந்திரயான் 3 விண்கலத்தை நிலவின் அருகே இஸ்ரோ விஞ்ஞானிகள் கொண்டு சென்றனர்.

ஏற்கனவே 14ம் தேதி வெற்றிகரமாக சந்திரயான் 3 தூரத்தைக் குறை த்திருப்பதாகவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை 14ம் தேதி இஸ்ரோ சந்திரயான் 3 விண்கலத்தை நிலவை நோக்கி செலுத்தியது. இன்று 4வது முறையாக நிலவின் உள் வட்டப்பாதையின் தூரம் குறைக்கப்படுகிறது. இதையடுத்து ஆகஸ்ட் 23ம் தேதி விண்கலத்தில் இருந்து விக்ரம் என்ற லேண்டர் தனியாகப் பிரிந்து நிலவின் மேற்பரப்பில் இறங்கி ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளது.

# இமாச்சல பிரதேச கனமழையால் ரூ.10 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு

சிம்லா, ஆக. 17 -

சமீபத்தில் கொட்டித் தீர்த்த கனமழையால் இமாச்சலப் பிரதேசத்தில் 10 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் சுக்விந்தர்சிங் சுகு தெரிவித்துள்ளார். கங்க்ராவில் மழை வெள்ள பாதிப்பை பார்வையிட சென்ற அவர், மாநிலத்தில் சேதமடைந்துள்ள உள்கட்டமைப்புகளை சரி செய்ய ஓராண்டு காலம் ஆகலாம் என கூறினார்.

சிம்லாவின் சம்மர் ஹில், கிருஷ்ணா நகர், ஃபாக்லி ஆகிய இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி மண்ணில் புதைந்த 20க்கும் மேற்பட்டோரில், 13 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மீதமுள்ளோரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

இமாச்சலில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் சிக்கியுள்ளவர்கள், இந்திய விமானப்படை ஹெலிகாப்டர்கள் மூலம் மீட்கப்பட்டு வருகின்றனர்.

இமாச்சலப்பிரதேசத்தில் கனமழை மற்றும் நிலச்சரிவால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 60ஐ கடந்துள்ளதாகசெய்திகள் வெளியாகியுள்ளன.

# தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு.!

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகிற 26 - 8- 2023 சனிக்கிழமை மாலை 4.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பொருள்:** தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை" தமிழகம் முழுவதும் நடத்துவது குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
. நாள்: 16 -8 - 2023

**அன்னியூர் சிவா**
செயலாளர், தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி



77 வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் சமபந்தி உணவு விழாவில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்து பொதுமக்களுடன் கலந்து கொண்டு உணவு அருந்தினர். அருகில் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., இந்து அறநிலையத்துறை அதிகாரிகள் அறங்காவல குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் உள்ளனர்

### ஆலந்தூர்

# மண்டல அலுவலகம் இடம் மாற்றம்!

சென்னை, ஆக. 17 -

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், எண்.1, புதுத் தெரு ஆலந்தூரில் இயங்கி வந்த மண்டல அலுவலகமானது மெட்ரோ இரயில் திட்ட (CMRL) விரிவாக்கப் பணிகளுக்கு ஒப்படைக்கப் பட உள்ளதால் ஆலந்தூர் மண்டல அலுவலகம் GARMENTS COMPLEX. BlockII. Tansidco, Near Electronic Complex, Arulyampet, Guindy, Chennai600 035 என்ற முகவரியில் நேற்று (16.08.2023) முதல் செயல்படுகிறது.

எனவே, ஆலந்தூர் மண்டலத்தை சார்ந்த பொதுமக்களின் நலன் கருதியும், சிரமத்திற்கு ஆளாகாமல் பொது மக்களின் புகார் மனுக்கள், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் பெறுதல், சொத்து வரி வசூல் மற்றும் கட்டிட வரைபட அனுமதி போன்ற மாநகராட்சி சார்ந்த அனைத்து விண்ணப்பங்கள் பெற்றிட ஆலந்தூர் மண்டல அலுவலகம் அருகில் உள்ள Super Bazar Complex தரைதளத்தில் அலுவலகம் செயல்படும் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# சூரியனுக்கு செயற்கைக்கோள் அனுப்புகிறது இஸ்ரோ!

பெங்களூரு, ஆக. 17 -

சமீபத்தில் நிலவை ஆய்வு செய்ய சந்திரயான்3 விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பி உலக நாடுகளின் கவனத்தை இஸ்ரோ ஈர்த்துள்ளது. தற்போது சூரியனை ஆய்வு செய்ய ஆதித்யா L1 எனும் விண்கலத்தை விண்வெளிக்கு விரைவில் அனுப்ப இருக்கிறது.

நிலவில் உள்ள நீரிலிருந்து ஹைட்ரஜனை தனியாக எடுத்து எரிவாயுவாக பயன்படுத்தி அங்கிருந்து வேறு கிரகங்களுக்கு செல்லலாம். எனவே நிலவை ஆக்கிரமிக்க உலக நாடுகள் மீண்டும் போட்டிபோட தொடங்கியுள்ள நிலையில் தான் இந்தியா சந்திரயான்3 விண்கலத்தை ஏவியது. அதேபோல சூரியனை ஆய்வு செய்ய இஸ்ரோ விரைவில் ஆதித்யா L1 எனும் புதிய விண்கலத்தை அனுப்ப இருக்கிறது.

சூரியனிலிருந்து வெளிவரும் காந்த புயல் பூமியில் இருக்கும் அனைத்து மின்னணு சாதனங்களையும் செயலிழக்க வைத்துவிடும். இன்றைய தேதியில் நூற்றுக்கணக்கான அணு உலைகளை பாதுகாக்க மின்னணு சாதனங்கள்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அப்படி இருக்கையில் காந்த புயல் காரணமாக இது பாதிக்கப்பட்டால் பேரழிவு ஏற்படும். எனவே காந்த புயல்களை முன்கூட்டியே கணிக்கவும், சூரியனின் பல்வேறு அடுக்குகளை ஆய்வு செய்யவும் இந்த ஆதித்யா L1 எனும் புதிய விண்கலம் அனுப்பப்பட இருக்கிறது.

இந்தியா சார்பில் முதன் முதலில் சூரியனை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் அனுப்பப்படும் முதல் விண்கலம் இதுதான். எனவே உலக நாடுகள் இதை உன்னிப்பாக கவனித்து வருகின்றன. இது இந்த மாதம் இறுதியில் அல்லது அடுத்த மாதம் தொடக்கத்தில் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ கூறியுள்ளது.

### கழக இலக்கிய அணிப் புரவலர் தஞ்சை கூத்தரசன் தொடங்கி வைக்க

# மாம்பலம் ஆ.சந்திரசேகர் "கலைஞர் நூறு" எனும் தலைப்பில் சிறப்புரை!

## இன்று சென்னை பெரியார் திடலில் நிகழ்ச்சி நடைபெறுகிறது!

சென்னை, ஆக. 17-

இதுகுறித்து பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் வழக்கறிஞர் திருமதி.ஆ.வீரமர்த்தினி தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

உலகளாவிய வகையில் தலைசிறந்த பகுத்தறிவு ஞானி தஞ்சை பெரியாரின் அறிவுப் பாசறை திராவிடர் கழகத்தின் சேய் அமைப்பான பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் இன்று (17.8.2023 - வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில், சென்னை, தந்தை பெரியார் திடலிலுள்ள அன்னை திருமதி. ஈ.வெ.ரா. மணியம்மையார் அரங்கில் என் (ஆ.வீரமர்த்தினி) தலைமையில் நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது.

தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் புரவலர். தஞ்சை கூத்தரசன் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்துப் பேசுகிறார். தென்மேற்கு மாவட்டத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் "கலைஞர் நூறு" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றுகிறார். பெரியார் நூலக வாசகர் வட்ட நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன், தென் மாறன், வழக்கறிஞர் மணியம்மை ஜெனார்த்தனம் மற்றும் ஆவடி பாஸ்கர், பேராசிரியர் தனராசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இந்நிகழ்வுக்கு அனைவரும் அணி திரண்டு வரவேண்டுமென அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.

# பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணவர்களின் கவனத்துக்கு!

சென்னை,ஆக.17-

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணவர்களுக்கான முக்கிய அறிவிப்பை அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

அதன்படி, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணவர்கள் வரும் ஆக.18 ஆம் தேதி முதல் அந்தந்த பள்ளிகளிலேயே அசல் மதிப்பெண் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம் என அரசுத் தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு கடந்த ஏப். 6 முதல் 20ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்தத் தேர்வை தமிழகம், புதுவையில் 9.2 லட்சம் மாணவ, மாணவிகள் எழுதினர்.




வேலூர் மண்டலம் 3 தி.மு.க இளைஞரணி மாவட்ட மாநில மாநகர நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் ஏ. பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. பேசினார். உடன் மண்டலம்3 பொறுப்பாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட அவை தலைவர் தி.அ. முகமது சகி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி. என். அண்ணாதுரை, ராணிப்பேட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, வேலூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே ராஜ மார்த்தாண்டன், துணை அமைப்பாளர் அர்ச்சனாநவீன்சங்கர், திருப்பத்தூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ.வடிவேல், வேலூர் ஒன்றிய செயலாளர் சி.எல்.ஞானசேகரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ரவிக்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (16.08.2023) பொதுத்துறை நிறுவனங்களில் விளையாட்டு வீரர்களது சாதனைகளின் அடிப்படையில் 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் வேலைவாய்ப்பு வழங்குதல் தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யமிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவேற்காடு மற்றும் சிறுவாபுரி

# திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பக்தர்களுக்கான கூடுதல் வசதிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஆக.17-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (16.08.2023) ஆணையர் அலுவலகத்தில் திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயில் மற்றும் சிறுவாபுரி, பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணிகள் மற்றும் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் மேற்கு கோபுரம், பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம், பொங்கல் மண்டபம், முடிக்காணிக்கை மண்டபம், நிர்வாக அலுவலகம், பக்தர்களுக்கான ஓய்வறைகள், வணிக வளாகம், பல்நோக்குகூடம் கட்டுதல், அன்னதானக்கூடம் விரிவாக்கம், சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வது குறித்தும், சிறுவாபுரி, அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் அன்னதானக்கூடம், பக்தர்களுக்கான ஓய்வறைகள், வரிசை மண்டபம் கட்டுதல், கூடுதல் வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல், திருக்கோயிலுக்கு மாற்றுப்பாதை உருவாக்குதல் குறித்தும் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந. திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, தலைமைப் பொறியாளர் சி.இசைஅரசன், இணை ஆணையர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வடகிழக்குப் பருவமழை: சென்னையில்

# முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம்!

## சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக.17-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பேரிடர் மேலாண்மை குறித்து மாநகராட்சி மற்றும் தொடர்புடைய சேவைத் துறைகளுடனான ஆலோசனைக்கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் தலைமையில் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நேற்று (16.08.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் பேசும்போது தெரிவித்ததாவது :-

தற்போது சென்னை மாநகராட்சிப் பகுதியில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. மேலும், வடகிழக்குப் பருவமழை தொடங்கவுள்ளது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சி மற்றும் தொடர்புடைய சேவைத்துறைகள் ஒருங்கிணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பேரிடர் மேலாண்மை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் மழையினால் ஏற்பட்ட பழைய அனுபவங்களின் அடிப்படையில் அவற்றை எதிர்கொள்கின்ற வகையில் முன்கூட்டியே நன்கு திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை முடித்திட வேண்டும். குறிப்பாக மழைநீர் வடிகால்வாய் இணைப்புப் பணிகளையும் முடித்திட வேண்டும். தற்பொழுது பெய்து வரும் மழையினால் மழைநீர் தேங்கும் இடங்களில் மீண்டும் தண்ணீர் தேங்காத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். சாலைகளில் உள்ள பள்ளம் மேடுகளை சரிசெய்திட வேண்டும். மழைநீர் வடிகால்வாய் மற்றும் சென்னை மெட்ரோ இரயில், நெடுஞ்சாலைத் துறை, மின்துறை உள்ளிட்ட துறைகளின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் நடைபெறும் பகுதிகளில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திட வேண்டும். மக்களுக்கு எந்தவித இடர்பாடும், விபத்தும் ஏற்படாத வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளிலும் ஆகாயத் தாமரைகள் அகற்றும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். ஆறுகள் மற்றும் நீர்நிலைகளில் கொட்டப்பட்டுள்ள குப்பைகள் கட்டிடக்கழிவுகள் முதலானவற்றை உரிய துறைகளோடு ஒருங்கிணைந்து அகற்றிட வேண்டும். மழைக்காலங்களில் மழைநீரானது ஆறுகளில் தங்கு தடையின்றி செல்வதை உறுதி செய்திட வேண்டும். மழைக்காலத்தில் ஆறுகள் கடலினை அடைந்திடும் முகத்துவாரத்தில் ஏற்படும் மண்மேடுகளை விழிப்புடன் பணியாற்றி அகற்றிட வேண்டும்.

மழைக்காலங்களில் மக்களை தங்க வைப்பதற்கான நிவாரண முகாம்களைக் கண்டறிந்து அவற்றினை தயார் நிலையில் வைத்திட வேண்டும். அனைத்து சுரங்கப் பாதைகள், மழைநீர் தேங்கு மிடங்களில் நீரினை வெளியேற்றும் மின் மோட்டார்கள் மற்றும் ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். மழைக்கால மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் இயந்திரங்கள் தயார் நிலையில் இருந்திட வேண்டும். மழைநீர் வடிகால் மற்றும் வண்டல் தொட்டிகளில் உள்ள வண்டல்களை தொடர்ந்து தூர்வாரிட வேண்டும்.

பள்ளிக் கட்டிடங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட முக்கிய கட்டிடங்களில் உறுதித் தன்மையை ஆய்வு செய்து அதன்பேரில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தொடர்புடைய சேவை துறைகளின் தொலைபேசி எண்கள் கொண்ட கையேட்டினை தயார் செய்திட வேண்டும். கட்டுப்பாட்டு மையங்களில் எப்பொழுதும் பணிபுரிகின்ற வகையில் சுழற்சி முறையில் பணியாளர்களை நியமித்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து சுகதாரத் துறை மூலம் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைப்பதற்கான வசதிகளை தயார் நிலையில் வைத்திடவும், மருந்துகள் இருப்பை உறுதி செய்திடவும் வேண்டும். மழைக்காலத்தில் காய்ச்சல் உள்ளிட்ட நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிட்டுப் பணியாற்றிட வேண்டும். தீயணைப்பு துறை மூலம் தாழ்வான பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகள் மற்றும் இதர மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருந்திட வேண்டும். அனைத்து அலுவலர்களும் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் முன்கூட்டியே திட்டமிட்டு விழிப்புணர்வுடன் பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆணையாளர்கள் சங்கர்லால் குமாவத், (சுகாதாரம்), திருமதி ஆர். லலிதா, (வருவாய் (ம) நிதி), இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், வட்டார துணை ஆணையாளர்கள் எம்.பி.அமித், (தெற்கு), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்), எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு), போக்குவரத்து காவல் துணை ஆணையாளர் (கிழக்கு) சமே சிங் மீனா மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாற்றுத்திறனாளி - முதியோர் ஓய்வூதியம் பெறும் குடும்ப பெண்களும்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பித்திட சிறப்பு முகாம்!

## அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை!

சென்னை, ஆக. 17-

மாற்றுத்திறனாளி ஓய்வூதியம் - முதியோர் ஓய்வூதியம் பெறும் குடும்பத்தில் உள்ள தகுதி வாய்ந்த பெண்களும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பித்திட ஆகஸ்ட் 18, 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெறுகிறது என தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-



முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம்கள் இரண்டு கட்டங்களாக நடைபெற்று வருகின்றன. முதற்கட்ட முகாம் ஜூலை 24ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 4ம் தேதி வரை நடைபெற்றது. இரண்டாம் கட்ட முகாம்கள் ஆகஸ்ட் 5ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை நடைபெற்றது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பிப்பதற்கு தகுதிகள் மற்றும் தகுதியின்மைகளை வரையறை செய்து ஏற்கெனவே அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. இதில் கடுமையாக உடல் பாதிக்கப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால், பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது,

தற்போது முதலமைச்சர் அவர்கள், வருவாய்த் துறையில் சமூகப்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் பெறும் மாற்றுத்திறனாளிகள் தவிர, அக்குடும்பத்தில் உள்ள தகுதிவாய்ந்த பெண்களும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் பயன்பெறும் வகையில் விதிவிலக்கு அளித்து ஆணையிட்டுள்ளார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!**

அதே போல இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியம் ஆகிய திட்டங்களில் முதியோர் ஓய்வூதியம் பெறும் குடும்பங்களில் உள்ள ஓய்வூதியதாரர் தவிர அக்குடும்பத்தில் உள்ள தகுதி வாய்ந்த பெண்களும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பிக்கலாம் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

**மூன்று நாட்கள் நடைபெறுகிறது!**

தற்பொழுது விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள், முதியோர் ஓய்வூதியத் திட்டங்களில் ஓய்வூதியம் பெறுபவர்களின் குடும்பங்களில் உள்ள தகுதி வாய்ந்த குடும்பத் தலைவிகள் விண்ணப்பங்கள் பதிவு செய்திட ஆகஸ்ட் 18, 19, 20 ஆகிய மூன்று நாட்கள் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

மேற்கண்ட வகை குடும்பங்களில் உள்ள பெண்கள் ஏற்கனவே விண்ணப்பித்திருந்தால், மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. இதுவரை விண்ணப்பிக்காத தகுதியான பயனாளிகள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க.

# இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!



நீலகிரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம், இன்று (17.8.2023 வியாழக்கிழமை) மாலை 4 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**பொருள்:** தி.மு.க., இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி மாநில செயலாளர்களின் கூட்டறிக்கையின்படி எதிர்வரும் 20.8.2023 ஞாயிற்றுக்கிழமை நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு - தமிழக ஆளுநரை கண்டித்து உண்ணாவிரத அறப்போர் நடத்துவது குறித்து.

**பா.மு.முபாரக்**
செயலாளர் - நீலகிரி மாவட்ட தி.மு.க.


**பெருநகர சென்னை மாநகராட்சி மின் துறை**

மி.து.ந.க.எண்.சி.பி.மே2/பி10/4140/2023

**மின் ஒப்ப அறிவிப்பு**

**Supply of 5000 Mtrs of 3 1/2 x 25 sq. mm PVC Aluminium UG cable, 5000 Mtrs of 2 x 25 sq. mm PVC Aluminium UG cable and 1800 Mtrs of 4 x 16 sq. mm PVC Aluminium UG cable required for maintenance of street lights for all Zones**

இப்பணிகளுக்கான தோராய மதிப்பு ரூ.25,63,300/- ஆகும்.

ஒப்பந்தாரர்கள் http://tntenders.gov.in இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் 31.08.2023 பிற்பகல் 03.00 மணிக்குள் பங்கேற்கலாம். 01.09.2023 பிற்பகல் 03.15 மணிக்கு ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 4585 / ஒப்பந்தப்புள்ளி / 2023

கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு(இணையதள வழியில் மட்டும்)**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 04/2023-24 / முவஅ / நாள்: 11.08.2023.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர் அவர்களால் தஞ்சாவூர் (நெ) திட்டங்கள் கோட்டத்திற்கான கீழ்கண்ட பணிக்கு இணையதள வழியில் மட்டுமே இனவாரி ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறைகள் முறை) 21.09.2023, 15.00 மணி வரை (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

சி.ஆர்.ஐ.டி.பி. 2023-24 "பாப்பாநாடு- மதுக்கூர்-பெருகவாழ்ந்தான் சாலை (மா.மு.சா.778) கி.மீ 22/2 ல் கண்ணனார் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் திரும்பகட்டுதல் பணி"

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை http://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 21.08.2023 முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./4495/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**திட்டங்கள் வட்டம்,தஞ்சாவூர்.**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அழைப்பு**
**ஒ.அ.எண்: 22 / 2023-24 / தவஅ / நாள்: 09.08.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் சி.ஆர்.ஐ.டி.பி 2023-24 திட்டத்தின்கீழ், **திருவாரூர்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **4 பணிகளுக்கு** இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **11.09.2023 அன்று 14.00 மணி வரை** (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விபரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்கள் https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் **21.08.2023** முதல் தெரிந்துக்கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையத்தளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./4520/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி -20.**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்".



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை, சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 29 / 2023 - 2024 / தவஅ / நாள் 12.08.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம் அவர்களால், காஞ்சிபுரம் (நெ) க(ம)ப கோட்டத்தைச் சார்ந்த திட்டம் சாரா பணிகள் 2023 - 2024 (1 பணி) சி.ஆர்.ஐ.டி.பி. 2023 - 2024 (1 பணி) இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 04.09.2023 பிற்பகல் 12.30 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதரவிபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 18.08.2023 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது..

செ.ம.தொ.இ / 4506/ ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப சென்னை வட்டம்**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"




பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், பேரிடர் மேலாண்மை குறித்து மாநகராட்சி மற்றும் தொடர்புடைய சேவைத் துறைகளுடனான ஆலோசனைக்கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், தலைமையில் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நேற்று (16.08.2023) நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கூடுதல் ஆணையாளர்கள் சங்கர்லால் குமாவத், (சுகாதாரம்), திருமதி ஆர். லலிதா, (வருவாய் (ம) நிதி), இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், வட்டார துணை ஆணையாளர்கள் எம்.பி.அமித், (தெற்கு), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்), எம்.சிவ குரு பிரபாகரன், (வடக்கு), போக்குவரத்து காவல் துணை ஆணையாளர் (கிழக்கு) சமே சிங் மீனா மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (ஐ.எப்.பி) - (இரண்டு உறை) - இனம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்.

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண் : | 01/ கோ. IoT நீர்அளவுமானி/ உ.பொ-6/ஒ.நி./2023, நாள் : 14.08.2023. |
| ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர் | இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.), த.கு.வ.வா, சென்னை-5. |
| ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம் | 17.08.2023 முதல் 31.08.2023 – 15.00 மணி வரை. |
| ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை | Online முறையில் https://tntenders.gov.in/ என்ற இணையதளம் மூலமாக. |
| ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக் கூட்டம் | 24.08.2023 அன்று முற்பகல் – 11.00 மணிக்கு - இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.), த.கு.வ.வா, சென்னை, தமிழ்நாடு அவர்களின் அலுவலகத்தில். |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 31.08.2023 அன்று 15.00 மணிக்குள் மின்னணு ஒப்பந்தம் முறையில் மின்னணு முறையில் ஒப்பமிடப்பட்டு https://tntenders.gov.in/ என்ற இணையதளம் மூலமாக |
| ஒப்பந்தப்புள்ளி திறப்பு | 01.09.2023 அன்று 15.30 மணிக்கு இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.), த.கு.வ.வா, சென்னை, தமிழ்நாடு அவர்களின் அலுவலகத்தில் மின்னணு முறையில் திறக்கப்படும் |

| ஓ.கே. எண். | திட்டத்தின் பெயர் | முன்வைப்பு தொகை. |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் ஸ்மார்ட் குடிநீர் அளவுமானிகளை தலைமைப் பணியிடங்கள், நீருந்து நிலையங்கள், தரைமட்ட நீர் தேக்கத்தொட்டிகள், பஞ்சாயத்து நீர்தேக்கத்தொட்டிகள் / நீருந்து அல்லது புவிஈர்ப்பு குழாய்களின் மூலம் பயன்பெறும் பயனாளர்களுக்கு கிராம மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிகளுக்கு வழங்கி, விநியோகம் செய்து, பொறுத்தவும், அத்தகைய அளவுமானிகளில் இருந்து வேண்டிய தரவுகள் பெறப்பட்டு அதன் மூலம் வழங்கிய குடிநீரின் அளவை பெற்று, தானியங்கி முறையில் பில் செய்ய ஒரு ஒருங்கிணைந்த கண்காணிப்பு அமைப்பை உருவாக்க, விரிவான திட்ட சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல் மற்றும் ஏல ஆவணங்கள் தயாரித்தல் உள்ளிட்டவைக்கான ஆலோசனை சேவையை ஈடுபடுத்துதல். (இரண்டு மாதங்கள்) | ரூ. 50,000/- |

செ.ம.தொ.இ/ 4581 /ஒப்பந்தப்புள்ளி/2023

தேவை இத்தருணம் - குடிநீர் சிக்கனம்

**இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.),**
**த.கு.வ.வா, சென்னை-05.**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


# மராட்டியத்தில் நிலநடுக்கம்!

மும்பை, ஆக. 17 -

மராட்டியத்தின் கோலாப் பூர் பகுதியில் நேற்று காலை 6.45 மணிக்கு மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

கோலாப்பூர் மாவட்ட நிலப் பரப்பில் இருந்து 5 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 3.4 ஆக பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித் துள்ளது.

நிலநடுக்கத்தால் உயிர் சேதம் அல்லது பொருள் சேதம் குறித்த தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.



தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த ஜூன்30ஆம் நாள் அரிய வகை முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று குணமான சிறுமி தானியாவுக்கு ஆவடி அடுத்த பாக்கம் கிராமத்தில் ரூ1.48 இலட்சம் மதிப்புள்ள நிலத்திற்கான வீட்டுமனை பட்டா மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ரூ2.10 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டிக் கொள்வதற்கான அனுமதி ஆணையையும் வழங்கியுள்ளதைத் தொடர்ந்து பாக்கம் கிராமத்தில் அச்சிறுமி தானியாவுக்கு சுமார் 600 சதுர அடியில் தனியார் பங்களிப்புடன் ரூ10 இலட்சம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மானியம் ரூ2.10 இலட்சம் உட்பட) மதிப்பீட்டில் கான்கிரீட் வீடு கட்டுவதற்கு முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ முன்னிலையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்ஆர்.காந்தி கட்டிடப் பணிகளை துவக்கி வைத்து அனுமதி ஆணைகளை வழங்கினார் உடன் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, வாரிய செயற்பொறியாளர் பாலமுரளி, ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, காயத்திரிஸ்ரீதர், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ் குமார், ஜெ.மகாதேவன், பூவை ப.ச.கமலேஷ், உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஏ. மதியழகன்

**ஆகஸ்ட் 17 (1983)**



தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் வழிநடந்த தன்மான தளகர்த்தர். தலைவர் கலைஞர் அவர்களது உடன்பிறப்பு, நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக திராவிடர் நலம்நாடி உழைத்த பெருமகனார்.

இயக்கப் பணியிலும், அறப்போராட்டத்திலும் முன்னின்று செயலாற்றி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர்.

தமிழக அமைச்சராகவும், சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

"தமிழ் இனம் காக்க – மொழி காக்க தடந்தோள் உயர்த்திய தளபதி" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

நெல்லை மாவட்டத்தில் கடலில் மூழ்கி

## உயிரிழந்த சிறுவர்கள் குடும்பத்திற்கு நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக. 17-

திருநெல்வேலி மாவட்டத்தில் கடலில் மூழ்கி உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வட்டம், கரைச்சுத்துப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த ஆகாஷ், த/பெ.செல்வராஜ் (வயது 14), ராகுல்கண்ணன், த/பெ.இசக்கியப்பன் (வயது 14) மற்றும் முகேஷ், த/பெ.மகாலிங்கம் (வயது 13) ஆகிய மூன்று பள்ளி மாணவர்களும் 15.8.2023 அன்று கடற்கரைக்கு குளிக்கச் சென்ற போது எதிர்பாராதவிதமாக கடல் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.


உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கமலநாதன்

**ஆகஸ்ட் 17 (1997)**



தருமபுரி மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற இரு அவைகளிலும் உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

நெருக்கடி நிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

"ஓர் இனிய நண்பனை மட்டுமல்ல; இலட்சிய வீரனையும் இழந்தேன்" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# அவாளுக்கு இவாள் பதில்!...

**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக்குழுத் தலைவர்



தமிழ்நாடு சட்டமன்ற நிகழ்வைப் பொய்யாகத் திரித்து நாடாளுமன்றத்தில் ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசி இருந்தார் .இதனை கண்டித்துத் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பதில் கூறியிருந்தார்.

கடந்த ஜூலை மாதம் 19ஆம் தேதி நாடாளுமன்றம் தொடங்கி, இம்மாதம் 11 ஆம் தேதியுடன் முடிந்து இருக்கிறது. மணிப்பூர் பிரச்சினை குறித்து எதிர்க்கட்சிகள் பிரதமர் வந்து பதில் சொல்ல வேண்டும் என்று முழக்கம் எழுப்பியும், பிரதமர் மோடி இரண்டு அவைக்கும் வரவே இல்லை. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்ததன் பேரில் ,கடைசி நாளில் வந்து பதில் அளித்துப் பேசியவர் மணிப்பூர் விவகாரத்தைப் பற்றி பேசவே இல்லை. காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி எம்.பி. மக்களவையில் இருந்தும், ஆம்ஆத்மி எம்.பி.இராகவ் சதா மாநிலங்களவையில் இருந்தும் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். இந்த மழைக்கால அமர்வில் 17 அமர்வுகளை நடத்தி 20 மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டும் இருக்கின்றன. அதில் இந்திய குற்றச் சட்டங்களுக்கு மாற்றாக மூன்று புதிய மசோதாக்கள் அறிமுகப்படுத்தியும், தேசத்துரோக சட்டத்துக்குப் பதில் மாற்றுச்சட்டம் என நாடாளுமன்றத்தில் அமித்ஷா தாக்கல் செய்ததுடன், 22 வரைவு சட்டங்கள் எதிர்க்கட்சிகள் இல்லாமலேயே குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் ஜனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டு இருக்கிறது .மோடி அரசின் சர்வாதிகார ஆட்டம் நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் நடந்து முடிந்திருக்கிறது.

காங்கிரஸ் தலைவர் இராகுல் காந்தி, கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி, தயாநிதி மாறன், திருச்சி சிவா போன்ற இந்தியா கூட்டணி எதிர்க்கட்சிகள் எடுத்து வைத்த வாதங்களுக்குப் பதில் ஏதும் நாடாளுமன்றத்தில் கிடைக்கவில்லை. மாறாக, பதில் சொல்ல முடியாமல் அமைச்சர் அமித்ஷா கோஷ்டிகள், கேள்விகள் கேட்பவர் மீது பழி சுமத்துவதில் பா.ஜ.க. படுவேகம் காட்டியது ஒழிய, மக்களுக்கான பிரச்சினையில் எந்தவித உரிய பதில் தரவில்லை. கழக நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா மீது மிரட்டல் விடுக்கும் வகையில், ""நீங்கள் கைது செய்யப் படுவீர்கள்." என்று ஒன்றிய அமைச்சர் ஸ்மிருதி ராணி பேசினார். அதற்கு, ஆ. இராஜா மிகக் கடுமையாகவே, "இந்த மிரட்டலுக்கு அடிபணிய மாட்டோம்; நீதித் துறையைப் பா.ஜ.க. அரசு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறதா.? என்று கேள்வி எழுப்பினார்.மற்றொரு ஒன்றிய அமைச்சர் மீனாட்சி லோகி, "இப்படியெல்லாம் கேள்வி கேட்டால், உங்கள் வீட்டிற்கு அமலாக்கத் துறை வரும்" என்று எதிர்க்கட்சிகளுக்கு மிரட்டல் விடுத்துப்பேசினார்.

இந்த நிலையில் தான், நாடாளுமன்றத்தில் கடைசி நாளில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த நேரத்தில், ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன், 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டசபையில் ஜெயலலிதா அவர்களின் சேலை இழுக்கப்பட்டதாகக் கூறிப் பெண்கள் பாதுகாப்புத் தொடர்பாகத் தி.மு.க.வை நேரடியாகத் தாக்கிப் பேசியுள்ளார். உண்மைக்கு மாறாக, நடைபெற்ற சம்பவத்தை அறிந்து கொள்ளாமல், அமைச்சர் பேசி இருப்பது கடுமையான கண்டனத்துக்குரியது. மதுரையில் எடப்பாடி பழனிசாமி தானும் 1989ம் ஆண்டு நடந்த சட்டமன்ற நிகழ்சியைப் பார்த்ததாகவும் சாட்சியம் கூறிய செய்தி ஏடுகளில் வந்துள்ளது. அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் திருநாவுக்கரசர் தந்திருக்கும் செய்தியும் இடம் பெற்றிருக்கிறது.

"நிர்மலா போட்ட போடில் ஓடிய தி.மு.க. எம்.பி.க்கள்" .....என்று அவாள் ஏடான தினமலம் ஏட்டில் அவாள் நிர்மலா சீதாராமன்களுக்குப் பெருமை ஏற்படுத்தி எழுதியிருக்கிறது....." தமிழக சட்டசபையில் ஜெயலலிதாவின் சேலையை உருவி அவமானப்படுத்திய கட்சியான தி.மு.க. வா, மணிப்பூரில் பெண்களை அவமானப் படுத்தப்பட்டனர்; திரவுபதி குறித்தெல்லாம் பேசிக் கவலைப்படுகிறது" என ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கேள்வி எழுப்பியதால் லோக்சபாவில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.."

இப்படி அந்த ஏடு தலைப்பிட்டுச் செய்தியை வரிந்து கட்டிக் கொண்டு எழுதி இருக்கிறது. தானாடாவிட்டாலும் தன் சதை ஆடும் அல்லவா? அதனால்தான், அவாளுக்கு அரிதாரம் பூசும் பொய்யான அரசியல் செய்திகளை எழுதி எழுதிக் குளிர் காய்கிறது அந்த ஏடு.

இந்தியாவில் வெங்காயம் விலை ஏறிவிட்டது. பொதுமக்களுக்குக் கிடைக்க வில்லை. பெரும் முதலாளிகள் பதுக்கி விட்டார்கள். இதற்கான ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன? என்று பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பிப் பேசிய போது, "நான் வெங்காயம் சாப்பிட மாட்டேன்... அதற்காக நான் கவலை படப் போவதில்லை" என்று கூறியவர் தான் அந்த நிதி மந்திரி .

கடந்த காலத்தில், காவிரி நீர் பிரச்சினையின் போதுதமிழ்நாட்டுக்காக உரிமை கேட்டு போராடிய போது, அன்றைய ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் உமா பாரதி வீட்டில் ரகசியமாக கூட்டம் போட்டு சந்தித்ததுடன், சதானந்தா கவுடா போன்றவருடன் கர்நாடகத்துக்காக வாதாடியவர் தான் அவாளான அம்மணி. தமிழ்நாட்டில் பிறந்து, வாழ்ந்து, தமிழர்களுக்குத் துரோகம் செய்து கொண்டிருக்கும் ஒன்றிய அமைச்சர்களுள் இவரும் ஒருவர். தமிழ்நாட்டிற்குச் சேர வேண்டிய ஜி.எஸ்.டி வரியை இன்னும் வழங்காமலும், உரிய நிதியைத் தராமலும் நிலுவைத் தொகையை வைத்திருக்கிற ஒரு இந்திய கருவூல அமைச்சர் இவர்.

25.03.89 அன்று சட்டசபையில் நிதிநிலை அறிக்கையை முதல்வர் கலைஞர் அவர்கள் வாசிக்க தொடங்கும் போது அவர் கையில் இருந்து அதனைப் பிடுங்க, ஜெயலலிதா குறிப்பிட்டு, 'முதலமைச்சர் கிரிமினல் குற்றவாளி அவர் நிதிநிலை அறிக்கை படிக்கக்கூடாது, அவரும், அவரின் அமைச்சரவையும் பதவி விலக வேண்டும், என்றார் . அன்று ஜானகி அணியின் சார்பில் நின்று வெற்றி பெற்ற பி.எச்.பாண்டியன் உடனே எழுந்து உரத்த குரலில் "இங்கே உள்ள 234 உறுப்பினர்களும் சமமானவர்கள் தான். ஆனால் ,ஜெயலலிதா எந்த வகையிலும், மேலானவர் அல்ல"... என்று சொன்னது தான் தாமதம் .அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டு பல்வேறு வசைப்பாடும் சொற்களால் ஆபாச வார்த்தைகளால் அர்ச்சித்தனர் என்பன எல்லாம் தெரியுமா இன்றைய அவாள்களின்அரசியல் மதுரை மாமேதை நிர்மலா சீதா ராமன்களுக்கு?

அந்தச் செயல்கள் யாவும் சட்டமன்ற நிகழ்வுக் குறிப்பேட்டில் பதிவாகி இருக்கின்றன. இந்த வன்முறை நடைபெறுவதற்கு முன்னரே ஜெயலலிதா தனது வீட்டில் தீட்டிய சதித் திட்டங்களைத் திருநாவுக்கரசு அன்றைக்கு ஜெயலலிதா அணியில் சட்டமன்ற துணைத் தலைவராக இருந்தவர் அம்பலப் படுத்தியுள்ளார்; அவர் பின்பு பி.ஜே.பி.யில் சேர்ந்து ஒன்றிய அமைச்சரானவர்; இன்று காங்கிரஸ் கட்சியில் எம் .பி .ஆகி இருக்கிறார் அவரே சட்ட சபையில் நடைபெற இருந்த ஜெயலலிதா நடத்தயிருந்த சதித்திட்ட ஆலோசனைகளை அம்பலப்படுத்திச் சட்டமன்றத்தில் பதிவு செய்திருக்கிறார் அதைப்போல, பி.எச். பாண்டியன், ஜானகி அணியிலிருந்து வெளியேறி ஜெயலலிதாவின் கட்சியில் சேர்ந்து எம்.பி .யாகி மறைந்து போன அவரும், அந்நாளில்

ஜெயலலிதாவின் அணியினர் நடத்திய அன்றைய வன்முறை யாட்டங்களைச் சட்டமன்றத்தில் பேசிப் பதிவு செய்திருக்கிறார். அந்தச் சட்டமன்றக் குறிப்பேட்டை வாங்கி படித்துப் பார்க்கலாம்.மோடியிடம் வாழ்த்து பெறுவதற்காக, வாய்க்கு வந்ததை எல்லாம் பேசுகிறார்கள் அவாள்கள்.

சட்டமன்றத்தில் நடந்தது என்ன என்பதைக் குறித்து,நேர்மை வழுவாத உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள், பத்திரிக்கையாளர்களிடம் கூறியது வருமாறு:

"சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பலரும் தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். சில பத்திரிகைகளும் தவறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன. காலை 11 மணிக்குச் சபை கூடியது. சபாநாயகர் திருக்குறளைப் படித்தார். முதல்வர் கலைஞரைப் பட்ஜெட் தாக்கல் செய்ய அழைத்தார்.

முதல்வர் கலைஞர் பட்ஜெட் உரையைப் படிக்கத் தொடங்கினார். அப்போது ஜெயலலிதாவின் கை கலைஞரிடமிருந்த பட்ஜெட் உரையை புத்தகத்தைப் பறித்தது. "இந்தக் கிரிமினல் இராஜினாமா செய்ய வேண்டும்" .... என்று ஜெயலலிதா ஆவேசமாகக் குரல் கொடுத்தார். "அடிங்கடா இவனை '. என்று சொல்லி ஜெயலலிதா கலைஞரைப் பார்த்துக் கத்தினார்.

அ.தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினரான கே.எஸ். செங்கோட்டையன் கலைஞர் முகத்தில் ஓங்கிக் குத்தினார். /கலைஞரின் கண்ணாடி சிதறி விழுந்தது; அதன் பிறகு, ஒரே கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது. என்ன நடந்தது என்றே தெரியவில்லை..." இது ஒரு பெண் உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சேர்ந்த திருமதி பாப்பா உமாநாத் கூறிய தகவல் இதை ஒரு சார்பாக பேசியது என்று எவராலும் கூறிவிட முடியாது.

கலைஞரும் தெளிவான விளக்கம் அளித்தார். சட்டமன்றக் கூட்டம் கலவரத்தில் முடிந்தது. கழகத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சில பத்திரிகைகள், ஜெயலலிதா சொன்னபடியும், அவர் விரும்பிய படியும், செய்திகளை வெளியிட்டுக் கழக ஆட்சிக்குக் களங்கத்தை உண்டாக்க முயற்சித்தனர். வானொலியும், தொலைக்காட்சியும், கூட பொய்ச் செய்திகளையே வெளியிட்டன...."

இப்படியான வாக்குமூலத்தை (25.03.1989) அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. வினர் நடத்திய வன்முறை நிகழ்வுகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திருமதி. பாப்பா உமாநாத் அவர்கள், கூறியதைத் "தி.மு.க.வின் தோற்றமும், வளர்ச்சியும்." என்று தலைப்பிட்டு நூலை எழுதிய ஆசிரியர் சிவலை இளமதி அவர்கள் எழுதி, மணிமேகலை பிரசுரம் வெளியிட்ட நூலில், உண்மைக் கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறார். ஆனால், உண்மைக்கு மாறாக, அவாளானவர்கள் இந்தி, சமஸ்கிருதம் படிக்காமலேயே தமிழ் படித்துவிட்டு தமிழ்நாட்டிலிருந்து சென்று, நிதி அமைச்சராகி தமது பொறுப்புகளை மறந்து சரியாக மக்கள் பணிகளில் கவனம் செலுத்தாமல், தில்லி செங்கோட்டையில் வசந்த காலத்தை அனுபவித்து வரும் மமதையில் பாராளுமன்றத்தில் தி.மு.க.வைப் பற்றிக் குற்றச்சாட்டுச் சுமத்திப் பேசியிருக்கிறார்.

இதுமட்டுமல்ல; பாரி நிலையம் வெளியிட்டுள்ள "திராவிட இயக்க வரலாறு" எனும் நூலை கே.ஜி. இராதாமணாளன் என்பவர் எழுதியுள்ளார்.அந்நூலின் 432, 433 ஆகிய பக்கங்களில் என்ன எழுதி உள்ளார் என்பதைப் பார்ப்போம்.

"...1989-90 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யும் கூட்டம் 1989 மார்ச் 25ஆம் தேதி காலை 11 மணிக்கு துவங்கியது.

ஜெயலலிதா எழுந்தார் தம்முடைய இராஜினாமா கடிதங்களை போலீசார் கைப்பற்றியது பற்றி ஆத்திரப்பட்டார். அது தமது உரிமை பறிப்பதாகும் என்று ஓர் உரிமை பிரச்சினை எழுப்பி ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். பட்ஜெட் சமர்ப்பிக்கும் நாளில் வேறு பிரச்சினைகள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பது மரபு என்று சபாநாயகர் கூறி அத்தீர்தமானத்தை அனுமதிக்க மறுத்தார்.

கலைஞர் பட்ஜெட் உரையை படிக்கத் தொடங்கினார். ஜெயலலிதா துள்ளி வந்து, கலைஞர் கையில் இருந்த புத்தகத்தை 'வெடு'க்கெனப் பிடித்து இழுத்துத் தூர எறிந்தார். "இந்த கிரிமினல் இராஜினாமா செய்ய வேண்டும் ".... என்று ஆவேசமாகக் கத்தினார்.

கலைஞரைச் சுட்டிக்காட்டி, அடிங்கடா இவனை" "என்றார் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ. செங்கோட்டையன் துள்ளி வந்து கலைஞரின் முகத்தில் குத்தினார் .கலைஞரின் மூக்குக் கண்ணாடி உடைந்து சிதறியது. அதன் பிறகு ,கலவரம் வெடித்தது. யார் யாரை அடிக்கிறார்கள் என்பது தெரியவில்லை; ஒரே குழப்பம்; தலைவிரி கோலமாக ஜெயலலிதா சபைக்கு வெளியே ஓடி வந்தார். "இந்தச் சபைக்குள் இனி முதலமைச்சராகத் தான் நுழைவேன்"... என்று சபதம் செய்துவிட்டு ஒரு தனியார் மருத்துவமனையில் போய்ப் படுத்துக் கொண்டார்.

இப்படிச் சட்டமன்றத்தில் அன்றைய நாளில் அமர்க்களப்படுத்தி அராஜகம் ஏற்படுத்திய அதிமுக தலைவி ஜெயலலிதாவின் சர்வாதிகாரப் போக்கினை அம்பலப் படுத்தியுள்ளார்எழுத்தாளர் இராதாமணாளன்.. அது பற்றி அறியாத நிர்மலா சீதாராமன்கள், அவாள்கள் என்பதால், நாடாளுமன்றத்தில் நீட்டி முழக்கி இருக்கிறார்கள்.

இவ்வளவு தரவுகள் வெளிப்படையாக ஏடுகளிலும், சட்டமன்றப் பதிவுகளிலும் உள்ளன என்பதை மறந்து, உண்மைக்கு மாறான செய்திகளை நிர்மலா சீதாராமன்கள் பாராளுமன்றத்தில் பேசியது சரியா,?

அப்படிப் பேசிய செய்திகளை உற்சாகங் கொண்டு தினமலம் போன்ற ஏடுகள் எழுதுவது எந்த விதத்தில் நியாயம்?

சரி; அந்தச்செய்தி மட்டுமா? அது போன்ற பல சம்பவங்கள் அ.தி.மு.க. ஆட்சியில், நடைபெற்ற, தவறான கோலங்களைச் சர்வாதிகாரப் போக்குகளை எடுத்துக்காட்ட நிர்மலா சீதாராமன்களும், தினமலம் போன்ற ஏடுகளும் முன் நிற்கத் தயாரா?

முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் 1987 டிசம்பர் 24 மறைவுக்குப் பிறகு, தமிழகத்தின் முதல்வராக அவரின் துணைவியார் வி.என். ஜானகி முதல்வர் பொறுப்பு ஏற்றிருந்தார். கட்சியைக் கைப்பற்ற பதவிப்போட்டிக்காக சென்னை லாயிட்ஸ் சாலையிலுள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தை கைப்பற்ற வன்முறைகள் நிகழ்த்தி ஜெயலலிதா மற்றும் ஜானகி அணியினர் பலரின் உயிருக்கு பாதுகாப்பற்ற நிலையில் ரணக்களப்படுத்தியிருந்தனர். இந்நிலையில்,

அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மொத்தம் 131பேரில் பிளவுப்படுத்தி, அவர்களில் 34சட்டமன்ற உறுப்பினர்களைத் தன்னுடன் இழுத்துக் கொண்டு சட்டமன்றத்தில் இவர்களை செய்ய ஏற்பாடு செய்திருந்தார் ஜெயலலிதா. பெரும்பான்மை நிரூபிக்க வி.என். ஜானகிக்கு ஆளுநர் குரானா உத்தரவிட்ட நேரத்தில், அவருக்கு 97 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார். 1988 ஜனவரி 28 அன்று ஜெயலலிதா தீட்டிய சதித் திட்டத்தால், வெளியில் இருந்து குண்டர் படைகளை கொண்டு வந்து, சட்டசபையே இரணகளம் ஆனது. இரத்தம் சொட்ட சொட்ட பல சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியேறினார்கள். அவைத் தலைவராக இருந்த பி.எச். பாண்டியனைத் தன்னுடைய நாற்காலியில் இருந்து கீழே இழுத்துப் போட்டு அவரது வேட்டியை உருவிய வன்முறையை இந்த நிர்மலாக்கள் நாடாளுமன்றத்தில் சொல்லத் தயாரா? வி.என். ஜானகியின் 21நாள் அமைச்சரவை கலைக்கப்பட்டதற்குக் காரணம் ஆனவர்கள் யார்?

எம்.ஜி.ஆர் உருவாக்கிய அ.தி.மு.க. ஆட்சியில் அவருடைய மனைவி முதல்வராக இருந்தும், பெண் என்றும் பாராமல், அவருடைய ஆட்சியைக் கலைப்பதற்கு ஏற்படுத்திய வன்முறை வெறியாட்டங்களையெல்லாம், அவர்கள் என்ன சொல்வார்கள்? அவற்றை அறையில் சொல்வார்களா? அல்லது அம்பலத்தில் ஏறிச் சொல்ல தயாரா?

1991 ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் தேதி "இல்லஸ்ட்ரேட் வீக்லி ஆப் இந்தியா" எனும் ஆங்கில வார ஏடு, ஜெயலலிதா ஆட்சியில் நடந்த சட்டமன்ற விவாதங்கள் பற்றி எழுதிய கட்டுரை ஒன்றில், பாலிடிக்ஸ் எனும் பகுதியில் , (Tamil Nadu Assembly fast gain notoriety) தலைப்பில் எழுதி இருந்தது .அக்கட்டுரையின் ஒரு பகுதியில் "இங்கே அறிவார்ந்த வாதங்கள் நடக்கின்ற மன்றமாக இருப்பதற்குப் பதிலாக இது ஒரு மல்யுத்தக் களமாகத் தமிழ்நாடு சட்டப்பேரவை மாறி வருகிறது (.Legislature violence is fast becoming routine Clearly, the Assembly has degeerated from bring an Intellectual forum into a combat arena ) என்று சுனில் என்பவர்எழுதி இருந்தார்.

அதனையொட்டி வீக்லி , முரசொலி, மாலை முரசு ஏடுகள் மீது உரிமை மீறல் குற்றச்சாட்டு எழுப்பி (25.9.1991) நாளில், அன்றைய காங்கிரசு கட்சி உறுப்பினரும், இன்றைய அ.தி.மு.க.வில் ஐக்கியமாகி விட்ட எஸ். ஆர்.பாலசுப்பிரமணியம் கொண்டு வந்தார். அதன் அடிப்படையில் ஜெயலலிதா கடைக்கண் பார்வையில் சட்டமன்றக் கூண்டில் அண்ணன் முரசொலி செல்வம் நிறுத்தப்பட்ட வரலாறு இன்றும் பேசுகிறது..இப்படியாக ஜெயலலிதா ஆட்சியின்சட்டமன்றத்தைப் பற்றி இல்லஸ்ட்ரேட்வீக்லி என்ற வாரப் பத்திரிகை தமிழக சட்டமன்றம் மல்யுத்தக் களமாக மாறிவிட்டது என்று எழுதிச் சான்று தந்திருந்ததை இன்றைய புதிய அரசியல்வாதி நிர்மலா சீதாராமன்கள் அறிந்திருக்க நியாயம் இல்லைதானே'

நிர்மலா சீதாராமன்களுக்கு இந்தப் பழைய கால பா.ஜ.க. அரசியல் தெரியுமா? 1998இல் தேசிய அளவில் பா.ஜ.க. 179 இடங்களைப் பெற்று மற்ற கூட்டணி கட்சிகளோடு சேர்ந்து அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையில் ஒன்றிய அரசு அமையுவுள்ள நேரத்தில், அவர் குடியரசு தலைவர் கே.ஆர். நாராயணன் சந்தித்து தனக்கு இருக்கும் பெரும்பான்மையை நிரூபிக்க கடிதம் கொடுப்பதற்கு ஜெயலலிதாவிடம் நீண்ட காலம் காத்துக் கிடக்க வேண்டி இருந்தது. பின் ஆட்சி அமைந்து 13மாதமே ஆன நிலையில், ஜெயலலிதா தனக்குள்ள சொந்த விருப்பு வெறுப்பின் காரணமாக நெருக்கடி தர ஆரம்பித்தார். தன் மீதான வழக்குகள் தனது அரசியல் எதிரிகளை வீழ்த்துவதற்கான விவரங்கள் சொல்லியும், வாஜ்பாய் இடத்தில் பலிக்காத காரணத்தால் ,அந்த அரசை வீழ்த்துவதற்கு எடுத்துக் கொண்ட சுப்பிரமணியசாமி, ஜெயலலிதாவின் எண்ணத்தை செயல்படுத்தும் நோக்கத்துடன் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி சிறப்புத் தேநீர் விருந்து வைத்து ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்து வாஜ்பாய் அரசை வீழ்த்திய வரலாற்றை மறந்து விட்டாரா? அவாளான நிர்மலாக்கள் அப்பொழுது கட்சியில் இல்லை.ஏன் இந்திய அரசியலிலே இல்லை என்பதுதானே உண்மை.


தொடர்ச்சி நாளை



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.08.2023) முகாம் அலுவலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், நாளை தனது பிறந்தநாளையொட்டி முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.



பின்னணிப் பாடகர் "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, நேற்று (16.8.2023) மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.



## முரசொலிமாறன் 90வது பிறந்தநாள் இன்று!

# 'முரசொலி' வளாக முகப்பிலுள்ள முரசொலிமாறன் திருவுருவச் சிலைக்கு பொதுச் செயலாளர் துரைமுருகன் - அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவிக்கின்றனர்!

### மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சியாக விளங்கியவரும் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாக செயல்பட்டவரும் - மத்திய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாக பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்த நாளினை முன்னிட்டு இன்று (17.8.2023 - வியாழக்கிழமை) காலை 8.00 மணியளவில் கோடம்பாக்கம், 'முரசொலி' அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்கு கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மலர்மாலை அணிவிக்கின்றனர்.

அதுபோது முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழகப் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், சார்பு மன்றம், படிப்பகங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நாள்- 16.8.2023 **சென்னை மாவட்ட தி.மு.க.**



## தி.மு.க. இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி

**கழக இளைஞர் அணி – மாணவர் அணி – மருத்துவ அணி**
**மாவட்ட – மாநில – மாநகர அமைப்பாளர் ஆலோசனைக் கூட்டம்**
**அணிகளின் செயலாளர்கள் அறிவிப்பு**

தி.மு.க இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி ஆகிய கழக அணிகளின் மாவட்ட – மாநில – மாநகர அமைப்பாளர் ஆலோசனைக் கூட்டம் அணிகளின் மாநில தலைவர்கள், துணைத் தலைவர்கள், இணை, துணைச் செயலாளர்கள் முன்னிலையில் 17–08–2023, வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து - அவர்களின் உயிரைப் பறிக்கின்ற நீட் தேர்வைத் திணிக்கும் ஒன்றிய அரசையும், அத்தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கான தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் ஆளுநரையும் கண்டித்து ஆகஸ்ட் 20 ஞாயிற்றுக்கிழமை அன்று மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற உள்ள மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் தொடர்பாக.

| | | |
|---|---|---|
| **சி.வி.எம்.பி.எழிலரசன்** | **எழிலன் நாகநாதன்** | **உதயநிதி ஸ்டாலின்** |
| செயலாளர் | செயலாளர் | செயலாளர் |
| திமுக மாணவர் அணி | திமுக மருத்துவ அணி | திமுக இளைஞர் அணி |


சென்னை – 18. நாள் : 16–08–2023.

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் நெல்லை திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலம்.**



# 31 இடம் பொருள் கலைஞர்





# நெல்லை திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலம்

## ஆசிய அளவில் உயர்ந்த தமிழர் சாதனை

**செ**ன்னையின் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்த அண்ணா மேம்பாலம், தனது 50 ஆண்டுகளை நிறைவு செய்த கொண்டாட்டம் சமீபத்தில் தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்தது.

அதே காலகட்டத்தில் கட்டப்பட்ட மற்றொரு பாலம் தனது 50-வது ஆண்டு கொண்டாட்டத்துக்குத் தயாராகி வருகிறது. ஐம்பது ஆண்டுகளைத் தொட உள்ள ஒரு பாலத்தின் கதை இது. கட்டியவர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர்.

### யாருக்கும் இல்லாத அக்கறை

“உனக்கு ஏன் இவ்வளவு அக்கறை? உலகத்தில் யாருக்கும் இல்லாத அக்கறை?”எனப் ‘பராசக்தி’யில் வசனம் எழுதினார் கலைஞர். அந்தக் கேள்வி அவருக்கு அவரே கேட்டுக்கொண்ட கேள்வி என்றுதான் கலைஞரின் வரலாற்றை எழுதுபவர்கள் கண்டுபிடித்தது.

தமிழ்நாட்டின் கட்டமைப்புகளில் அவர் காட்டிய அக்கறையில் ஒன்றுதான் திருநெல்வேலியில் எழுந்து நிற்கும் **திருவள்ளுவர் இரட்டை அடுக்கு மேம்பாலம்** என்கிற அடையாளம்.

முத்தமிழறிஞர் கலைஞரின் கையில் ஆட்சியை ஒப்படைத்து விட்டுச் சென்றார் பேரறிஞர் அண்ணா. அதைத் திறம்பட நடத்திக் காட்டுவதே அவரிடம் கற்ற அரசியல் பாடத்தின் ஆரம்பப் பாடம் என நிரூபித்தார் கலைஞர்.

அந்தப் பாடம்தான் தமிழ்நாட்டின் சரித்திரத்தை மாற்றி எழுதியது. அவர் உருவாக்கியவை எல்லாமே எதிர்காலத் தேவைகளை முன்னரே கணித்து, நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்பவையாக உள்ளன.

**1973-ஆம் ஆண்டு, கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பாலத்தை அந்த ஆண்டு நவம்பர் 13-ஆம் தேதி பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார் கலைஞர்.**

### நெல்லையின் நெருக்கடி

சென்னையின் போக்குவரத்து நெரிசலுக்காக அண்ணா மேம்பாலத்தை உருவாக்கி, மாநகர மக்களின் வயிற்றில் பால் வார்த்தவர் கலைஞர். ஆச்சரியம் என்னவெனில், அதே காலகட்டத்தில் திருநெல்வேலி மக்களின் தேவைகளையும் அறிந்ததுதான். தமிழ்நாட்டின் தேவைகளைக் குறுக்கு வெட்டாக அவர் அறிந்து வைத்திருந்ததன் 50 ஆண்டுகளுக்கு முன்னரான சாட்சி, அந்த அடுக்கு மேம்பாலம்.

நெல்லைச் சந்திப்பு ரயில் நிலையத்துக்கும், நெல்லைப் பேருந்து நிலையத்துக்கும் இடையே அமைந்துள்ளது இந்தத் திருவள்ளுவர் இரட்டை அடுக்கு மேம்பாலம்.

நெல்லைச் சந்திப்பு என்பதால், ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படும் நிலை. முக்கியமாக, நெல்லை ரயில் நிலையத்தில் இருந்து, தென்புறமாகச் செல்ல வேண்டிய வாகனங்கள், சரக்குகளை ஏற்றி வரும் வாகனங்கள் எல்லாம் இந்தச் சாலை சந்திப்பைத் தொட்டாக வேண்டும். ரயில்வே கேட் மூடப்படும் நேரத்தில் இந்தச் சந்திப்பில் அணிவகுத்து நிற்கும் வாகனங்களால் அந்தக் காலத்திலேயே நெல்லை பெரிய அவஸ்தையைக் கண்டிருக்கிறது. இதுதொடர்பான கோரிக்கை கலைஞரிடம் வைக்கப்பட்டதுமே, நெல்லையர்களின் குரலுக்குக் கவனம் கொடுக்கிறார் கலைஞர்.

ஒருவேளை அந்தச் சந்திப்பில், அரசியல் கைதியாக கலைஞர் கைது செய்யப்பட்டு ஏற்றப்பட்ட வாகனம், பாளையங்கோட்டைச் சிறைக்குச் செல்வதற்காக நெடுநேரம் நின்று இருக்கலாம். அதனால், மக்களின் சிக்கல் சொல்லாமலேயே அவருக்குப் புரிந்திருக்கும்.

### ஆசியாவிலேயே முதல் ஈரடுக்குப் பாலம்

மக்களுக்கான தேவையும், அந்தத் தேவை குறித்து அரசாங்கத்துக்குத் தெளிவான புரிதலும், ஆட்சியில் இருப்பவர்களின் ஆர்வமும்தான் ஒரு திட்டத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன.

திருநெல்வேலி மக்களுக்கு நெல்லையப்பர் கோயிலும், சுவை மிகுந்த இனிப்புகளும் நெருக்கமாக இருக்கலாம். அதே நேரத்தில் இன்னும் பத்திருபது ஆண்டுகள் கழித்துக் கேட்டாலும், தங்களின் பெருமையாக இந்த அடுக்குப் பாலத்தைச் சொல்வார்கள்.

ஆமாம், ஆசியாவிலேயே ரயில் பாதையின் குறுக்காகக் கட்டப்பட்ட முதல் இரட்டை அடுக்கு மேம்பாலம் என்கிற புகழைப் பெற்றது அந்தப் பாலம். இந்தியாவிலேயே முதல் இரு அடுக்கு மேம்பாலமும் அதுதான்.

### தலைமுறை தாண்டிய பாலம்

1969-ஆம் ஆண்டில் அந்தப் பாலத்துக்கு அடிக்கல் நாட்டினார் கலைஞர். 706 மீட்டர் நீளமும், 8 மீட்டர் அகலமும் கொண்ட இந்தப் பாலத்தை 26 தூண்கள் தாங்குவது போல வடிவமைக்கப்பட்டது.

இவற்றில் 13 தூண்கள், வில் வளைவாக அமைக்கப்பட்டன. முக்கியமாக, இந்தியாவிலேயே அதுவரை இல்லாத வகையில் இரண்டு அடுக்கு மேம்பாலமாக உருவாக்கப்பட்டது. பாலத்தின் கீழ்த் தளத்தில், இரு சக்கர வாகனங்கள், ஆட்டோ என இலகுரக வாகனங்கள் செல்வது போலவும், பாலத்தின் மேலே பேருந்து, லாரி என கனரக வாகனங்கள் செல்வது போலவும் அமைக்கப்பட்டது. அப்போது அந்தத் திட்டத்தின் மதிப்பீடு 47 லட்சம்.

அந்தப் பாலத்தின் பராமரிப்புப் பணிகள் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் 2000 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அப்போது அதற்குச் செலவான தொகை, பாலத்தைக் கட்டியதை விட மூன்று மடங்கு. அதைச் செயல்படுத்தியதும் கலைஞர்தான்.

1973-ஆம் ஆண்டு, கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பாலத்தை அந்த ஆண்டு நவம்பர் 13-ஆம் தேதி பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார் கலைஞர். அரசு வாகனங்கள் முன்செல்ல அதன் பின்னர் மக்களின் வாகனங்கள் அணிவகுத்துப் பாலத்தில் ஏறி இறங்கின.

நெல்லை மக்களுக்கு அதுநாள்வரை இருந்த போக்குவரத்து நெருக்கடியை ஒரே நாளில் மாற்றிக் காட்டினார் கலைஞர். அப்போதைய தலைமுறைக்கு மட்டுமல்ல, இந்தத் தலைமுறைக்கும் அந்தப் பாலம் பயன்பாட்டில் இருக்கிறது எனில், மக்கள் நலனில் அவர் கொண்ட அக்கறைதான் முதல் காரணம்.

### ஈரடிக் குறள் போல பாலம்

பாலத்தின் திறப்பு விழாவின் போது, திருக்குறளைப் போல இரண்டு அடிகளைக் கொண்டுள்ளதால், இந்தப் பாலத்துக்கு ‘திருவள்ளுவர் இரட்டை அடுக்குப் பாலம்’ எனப் பெயர் சூட்டப்படுகிறது என்றார் கலைஞர். நாளடைவில், அது இரட்டைப் பாலம் என மக்களின் புழக்கத்துக்கு வந்தது.

இன்றைக்குக் கட்டுமானத் துறையில் பல தொழில்நுட்பங்கள் வந்துவிட்டன. பாலங்கள் கட்டும் போது, ரயில் போக்குவரத்துக்கும் சாலை போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாமல், பாலத்தை உயர்த்தி விட முடியும். ஆனால், தொழில்நுட்பம் அவ்வளவு வளராத காலத்திலேயே ரயில் போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாமல், இரட்டை அடுக்குப் பாலமாகக் கட்டுவது அசாத்திய திட்டமிடல். வெறும் பாலம்தானே கட்டிவிடலாம் என நினைக்கவில்லை. அது எத்தனை ஆண்டுகள் ஆனாலும் பயன் தர வேண்டும், பெயர் சொல்ல வேண்டும், அதற்குரிய பெருமை சேர வேண்டும் என உருவாக்கப்பட்ட பாலம் அது . அசாத்தியங்களைச் சாத்தியங்கள் ஆக்கும் கலைஞரின் ஆளுமைக்கு, நெல்லையின் நிலைத்து நிற்கும் சான்று இந்த இரட்டை அடுக்கு மேம்பாலம்.

### பகுதி சார்ந்த தேவைகள்

தமிழ்நாடு முழுமைக்கும் அனைத்து மக்களுக்குமான சட்டங்கள், திட்டங்கள் மட்டுமல்ல. ஒவ்வொரு ஊருக்கும் என்ன தேவை என்பது அறிந்து அந்தத் தேவைகளுக்கும் கவனம் கொடுத்தது கலைஞர் ஆட்சி. இந்த 50 ஆண்டுகளில் திருவள்ளுவர் இரட்டை அடுக்கு மேம்பாலம் நெல்லை மக்களின் வாழ்க்கையோடு இரண்டற கலந்துள்ளது.

தமிழ்நாட்டு வாழ்வியலில் இரண்டறக் கலந்த கலைஞரின் பெருமைகளைப் பேசும் ஓராயிரம் திட்டங்களில், ஓராயிரம் கட்டுமானங்களில் நெல்லை மக்களின் நெஞ்சத்தில் கலந்த ‘ரெட்ட பாலமும்’ நீடித்து நிற்கும். ...வலம் வருவோம்

## தூபம் போடும் அரசியல்!

**க**டந்த மூன்று மாதங்களாகப் பற்றி எரிந்து வரும் மணிப்பூர் விவகாரத்தில், அம்மாநில முதலமைச்சர் பைரன் சிங், சுதந்திர தின விழாவில் முதன்முறையாக வாய் திறந்து உள்ளார். ஆனால், நீடித்து வரும் பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காணும் முயற்சி, அவரது உரையில் இல்லை. பாதிக்கப்படும் மக்களையே குற்றவாளியாகச் சித்தரிக்கிறது அவரது உரை.

வெளிநாட்டு உதவியுடன் கலவரத்தை நடத்துகின்றனர் எனப் பேசுவது பிரச்சினையின் தீவிரத்தைத் திசை திருப்பும்விதமாகவே இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவு, வன்முறையாளர்கள் மீது உறுதியான நடவடிக்கை ஆகியவை குறித்த எதுவும் அவரது உரையில் இல்லை. வெளியில் இருந்து வரும் சக்திகள்தான் வன்முறைக்குக் காரணம் எனத் தூபம் போட்டுக் கொண்டே, ‘மறப்போம் மன்னிப்போம்’ என மக்களிடம் கோரிக்கை விடுக்கிறார். மறப்பதும் மன்னிப்பதும் மக்களின் இயல்பான குணம்.

ஆனால், பா.ஜ.க.வின் போலியான அக்கறை மக்களை மறக்க விடாது தூபம் போட்டுக் கொண்டே இருக்கிறது. இந்தப் போலிகளைத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டிப் பேசுவதன் மூலம் மக்களின் அமைதிக்கு வழி பிறக்கும். மணிப்பூர் மக்களுக்கு இந்தியா துணை நிற்கும் என்பது வெறும் சொற்களல்ல, செயல் என்பதை காலம் நிரூபிக்கும்.

## :ப்ளாஷ்பேக்





அன்பழகன்

### இனிப்பான இணையேற்பு!

**1981** ஜனவரி 18 அன்று, அன்றைய மணப்பாறை நகரத் தி.மு.கழகச் செயலாளர், மறைந்த ம.கோபாலகிருஷ்னண் அவர்களது மகனான எனக்கும் -பள்ளப்பட்டி அ.கல்யாணி அவர்களுக்கும் இணையேற்பு விழா, தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. தமிழர் திருநாளான பொங்கல் சமயத்தில் திருமணம் நடைபெற்றதால், கலைஞரின் உரை அதை ஒட்டி அமைந்தது. கரும்பின் சுவையை உவமை காட்டி மணமக்களான எங்களை வாழ்த்தினார். அன்றைய நிகழ்வு, என்றும் என் மனதில் பசுமையாக நினைவில் நிற்கிறது. கொள்கை மாறாமல் இன்றும் என் கழகப் பணி தொடர்கிறது.

**-கோ.அன்பழகன், நகரத் தி.மு.க. முன்னாள் அவை தலைவர், மணப்பாறை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம்!

**1996-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இடஒதுக்கீட்டை அமல்படுத்தி முன்னோடியாக விளங்கினார் கலைஞர். அவரது அரசாங்கம் பெண் ஆளுமைகளுக்குப் பயிற்சி மற்றும் உதவிகளையும் வழங்கியது. இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கை மற்ற மாநிலங்களுக்கு உத்வேகம் அளித்து, பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய சாதனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 212




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131


கலைஞர் 100
1924 - 2023
நாள் : 17.08.2023 வியாழக்கிழமை
இடம் : இராமநாதபுரம்.
தென் மண்டல BLA - 2
வாக்குச் சாவடி முகவர்
பயிற்சிப் பாசறைக்
கூட்டத்திற்கு வருகை தரும்
நாடும் நமதே!
நாற்பதும் நமதே!!
என்று வெற்றி முழக்கத்துடன்
களம் காணும் அரசியல் சாணக்கியர்
திராவிட மாடல் வெற்றி முதல்வர்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்
தலைவர்
அவர்களே வருக! வருக!!
என அன்புடன் வரவேற்கும்
அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
மீன்வளம், மீனவர் நலன் மற்றும்
கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர்
ARASU ARTS


ஆகஸ்ட் 17, 18
இராமநாதபுரம் மாவட்டத்தில்
பாகமுகவர்கள் கூட்டம் மற்றும்
மீனவர் நல மாநாட்டிற்கு
வருகை தரும்
கழகத் தலைவர்.
திராவிட மாடல் முதல்வரே...!
வருக! வருக!!
மாண்புமிகு.
R.S.ராஜகண்ணப்பன்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர்கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர்.
உயர்திரு.
காதர்பாட்சா முத்துராமலிங்கம்
இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர்
இன்பா A.N.ரகு B.B.A.,LLB.,
கழக இளைஞரணி துணைச் செயலாளர்


ஆகஸ்ட் 17, 18
இராமநாதபுரம் மாவட்டத்தில்
பாகமுகவர்கள் கூட்டம் மற்றும்
மீனவர் நல மாநாட்டிற்கு
வருகை தரும்
சாமானியர்களின்
முதல்வரே...!
வருக! வருக!!
செ.முருகேசன் MLA.,
பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர்
அழகப்பா பல்கலைகழக ஆட்சிமன்ற குழு உறுப்பினர்
மாவட்ட கழகப் பொருளாளர்
பரமக்குடி சட்டமன்ற தொகுதி, இராமநாதபுரம் மாவட்டம்.


நாள் : 17.08.2023
இடம் : பேராவூர்
தென்மண்டல வாக்குச் சாவடி (BLA-2) பொறுப்பாளர்களின்
பயிற்சிப் பாசறை கூட்டத்திற்கு
வருகைதரும்
இந்தியாவின் திராவிட நாயகர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்...
கே.ஆர்.பெரியகருப்பன்
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
சிவகங்கை மாவட்டச் செயலாளர்
ஆ.தமிழரசி ரவிக்குமார் B.Com.,
முன்னாள் அமைச்சர், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர்
மாநில மகளிர் தொண்டரணி இணை செயலாளர்


WE FIGHT FOR OUR RIGHTS
நாள் : 17.08.2023
வியாழக்கிழமை
இடம் : முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர் திடல்,
பேராவூர்.
இந்தியாவின்
இன்னொரு சுதந்திரப்
போராட்ட களம் அமைக்க
தென் மண்டல வாக்குச் சாவடி
பாக முகவர்கள் (BLA-2)
பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில்
உரையாற்ற வருகை தரும்
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே
வருக. வருக..
வரவேற்று மகிழும்
கேஆர்.பெரியகருப்பன்
கூட்டுறவுத் துறை அமைச்சர்
மாவட்டச் செயலாளர்
சிவகங்கை
மாவட்ட தி.மு.க.
ARASU ARTS

பல்லாவரம் மாநகராட்சி பள்ளியில் 10- 12 ஆம் வகுப்பில் முதல் 3 இடம் பிடித்த

# மாணவ மாணவிகளுக்கு நிதி உதவி -அரசின் மிதிவண்டிகள்!

## இ. கருணாநிதி எம்.எல்.ஏ. மாணவர்களுக்கு வழங்கினார்!

பல்லவபுரம், ஆக. 17 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பழைய பல்லாவரம் பொன்னியம்மன் கோவில் தெருவில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

மேலும் பத்தாம் வகுப்பு பன்னிரண்டாம் வகுப்புகளில் பள்ளியிலேயே முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 10,000 ரூபாய், 7000 ரூபாய், 5000. என சொந்த நிதியிலிருந்து மாணவ மாணவி களுக்கு சால்வை அணிவித்து நிதி வழங்கி ஊக்குவித்தார். இந்நிகழ்ச்சியில் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமை ஆசிரியர் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பி. வெங்கடேசன் கோ. ஜானகிராமன் டி. எச். பிரான்செஸ் பால் பெற்றோர்கள் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில்

# மயிலை மேற்குப் பகுதி கழக ஆலோசனைக் கூட்டம்!

## நந்தனம் கி.மதி எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஆக.17- சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி ஆலோசனை கூட்டம் இன்று (17-08-2023) மாலை 6:00 மணியளவில் அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில் பகுதி கழக துணை செயலாளர்கள் ஆர். எல்.வி.அசோக், ப.பாக்கிய தாஸ், அகல்யா விஸ்வநாதன் மற்றும் பகுதி பொருளாளர் ஜி.முருகையன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள்: 20-08-2023 அன்று நடைபெற உள்ள உண்ணாவிரதம் மற்றும் கழக ஆக்க பணிகள்

இடம்: மயிலாப்பூர் சட்ட மன்ற அலுவலக வளாகம்

இவ்வாறு மயிலை மேற்குப் பகுதிச் செயலாளர் நந்தனம் மதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# திருபெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக். 17 காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருபெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (17.8.2023 வியாழக் கிழமை) காலை 10 மணி அளவில், சுங்குவார்சத்திரம், திருபெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழக அலுவலகத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் திருபெரும்புதூர் வடக்கு ஒன்றிய கழகத்தில் உள்ள மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

1.நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் வருகை,

2.வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கூட்டம்,

3.தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் குறித்து.

இவ்வாறு திருபெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு அரசு இந்து அறநிலையத்துறை செல்வ விநாயகர் & கோதண்டராமர் திருக்கோயில் மேற்கு தாம்பரத்தில், 76 வது ஆண்டு சுதந்திர தின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடைபெற்றது. இந்நிகழ்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், தாம்பரம் மாநகர கழக செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா. கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி பொதுமக்களுடன் சமபந்தி விருந்தில் உணவு அருந்தினார்கள். உடன் 4வது மண்டல குழுத்தலைவர்.டி.காமராஜ் 5வது மண்டல குழு தலைவர்.எஸ். இந்திரன்.மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், திருக்கோயில் நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் 77வது சுதந்திர தினவிழா!

# 10,12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ - மாணவியருக்கு ஊக்கத்தொகை!

## கழக மாநில மீனவர் அணித் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை,ஆக.17- திருவொற்றியூர் ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் இந்திய திருநாட்டின் 77வது ஆண்டு சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் கோ.பாலாஜி , மாமன்ற உறுப்பினரும் வட்டக் கழக செயலாளருமான கே.பி.சொக்கலிங்கம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

மாநில மீனவர் அணி துணைத் தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.சங்கர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு மாணவ - மாணவியருக்கு இனிப்பு வழங்கி சிறப்புரையாற்றினார்.

நடைபெற்று முடிந்த பத்தாம் வகுப்பு, 12ஆம் வகுப்பு பொது தேர்வில் முதல் மூன்று இடங்கள் பிடித்த சரண், விஷ்வா, அக்ஷய், சுஸ்மிதா ஸ்ரீ, மோனிகா ஸ்ரீ, சஹானா, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்தில் 100 மதிப்பெண் பெற்ற மாணவர் தினேஷ் ஆகியோருக்கு ஊக்கத் தொகை வழங்கினார்.

மேலும் மலேசியாவில் நடைபெற்ற சிலம்ப விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டு தங்கம் வென்ற ஒன்பதாம் வகுப்பு மாணவி டி. சாதனாவுக்கும் ஊக்கத் தொகை வழங்கினர்.

நடைபெற்று முடிந்த 10 ஆம் வகுப்பு 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாணவ மாணவிகளை 100% தேர்ச்சி பெற செய்த ஆசிரியர்கள் அனந்த பிரியா, பரிமளா பாத்திமா, ஆதிமந்தி, சாந்தி ஆக்னேஷ், கவிதா ஆகியோருக்கு சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் பாராட்டி சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முன்னதாக மாணவியரின் தேசபக்தி கொண்ட கலை நிகழ்ச்சிகளையும் சிலம்பம் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் வி.இராமநாதன் , ஆசிரியர்கள் எஸ்.செந்தில்குமார், ஏ.ரோஸ்லின் மேரி, ஏ. ஆரோக்கிய ஜெயசீலீ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி இரா.வெற்றிச் செல்வி தலைமை உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் ஆர்.விவேகானந்தன், எஸ். டி.சங்கர், எல்லப்பன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் சுமதி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், முன்னாள் பகுதி துணை செயலாளர் இ.ரமேஷ், மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர், வட்டக் கழக செயலாளர் ஏகா.கார்த்திகேயன், கே. கார்த்திகேயன், பி.எஸ். சைலஸ் குட்டி என்கின்ற எத்திராஜ், சலீம், பண்ணை சந்திர சேகர், புழல் ஜெகதீசன், பால உமாபதி, பிரட் சுரேஷ்,விமல் தாஸ், தயாநிதி, கே.தேசிங்கு திருவொற்றியூர் குப்பம் ரமேஷ், எஸ்.செல்வம்,டைலர் மணி, மணலி குமார், குமரன், கார்கில் நகர் கஜா, எர்ணாவூர் சௌந்தர், இப்ராஹிம் பாய், சின்ன எர்னாவூர் கோவிந்தராஜ், பாட்ஷா, அனிதா, மிக்சர் கார்த்தி, கிறிஸ்டோபர், ராயப்பன், போட்டோ செந்தில், ஐந்தாவது வட்ட நிர்வாகிகள் கே.ரமேஷ், காந்திநகர் செல்வம், ராஜவேல், சுப்பிரமணி, ஜபா லோகநாதன், ரமேஷ், நெய்தல் நகர் ஜோதி, சண்முகசுந்தரம், கோபி, நகர் ரமேஷ், சங்கர், ஸ்ரீகாந்த், அன்புச்செல்வன், கபடி குமார், ஆரிப், தீனதயாளன், பிரவீன், சீதாராமன், ஃபாரூக், வசந்த், சிங்காரம், ரவி, ரமேஷ், மற்றும் கழகத் தோழர்கள், ஆசிரியர்கள் பொதுமக்கள் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

உதவி தலைமை ஆசிரியர் ஆ.சாந்தி ஆகனஸ் நன்றி கூறினார்.



பல்லாவரம் மாநகராட்சி பள்ளியில் பத்து மற்றும் 12 ஆம் வகுப்பில் முதல் 3 இடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு இ. கருணாநிதி எம்.எல்.ஏ. நிதி உதவியும், தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளையும் மாணவர்களுக்கு வழங்கினார் . உடன் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, தலைமை ஆசிரியர், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பி.வெங்கடேசன், கோ. ஜானகிராமன், டி.எச். பிரான்சிஸ் பால் பெற்றோர்கள் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்





திருவொற்றியூர் ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 77வது ஆண்டு சுதந்திர தின விழாவில் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் கலந்துகொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ – மாணவியருக்கு ரூபாய் 50,000 ஊக்கத்தொகை வழங்கினார். இதில் ஆசிரியப் பெருமக்கள், கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.








நாள் : 17.08.2023 வியாழக்கிழமை
இடம் : இராமநாதபுரம்.
தென்மண்டல
BLA -2 பயிற்சி பாசறை
கூட்டத்திற்கு வருகை தரும்
ARASU ARTS
விவசாயிகளின் விடியலே!
எங்களின் திராவிட பேரரசே!
வருக. வருக..
R.S.ராஜகண்ணப்பன்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை (ம) கதர்கிராம தொழில் வாரிய அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
A.K.S.விஜயன்
கழக விவசாய அணிச் செயலாளர்
கழக டெல்லி சிறப்பு பிரதிநிதி
காதர்பாட்சா முத்துராமலிங்கம்
மாவட்டக் கழகச் செயலாளர் / சட்டமன்ற உறுப்பினர்
ந.நல்லசேதுபதி
மாநில விவசாய அணி து.செயலாளர்
கே.முருகவேல்
மாநில விவசாய அணி து.செயலாளர்.
ஆர்.அய்யனார்
மாவட்ட அமைப்பாளர்
சோழந்தூர் பாலகிருஷ்ணன்
தலைவர்
உப்பூர் மு.கிருஷ்ணன்
துணைத் தலைவர்
மாவட்ட துணை அமைப்பாளர்கள்
நா.ராஜேந்திரன்
சே.காளீஸ்வரன்
சி.துரை
ஆ.வெள்ளி
மீ.காளிதாஸ்
திருமூர்த்தி
நா.மலைராஸ்
கி.சேர்வாறன்
இராமநாதபுரம் மாவட்ட விவசாய அணி



" இந்தியா கூட்டணி வெல்லும்! அதை 2024 சொல்லும்..."
கலைஞர் 100
1924 - 2023
முகவை மாவட்டத்திற்கு
பாக முகவர் மற்றும்
மீனவர் மாநாட்டிற்கு
வருகைதரும்
மாண்புமிகு, தமிழகமுதல்வர்
கழகத் தலைவர்
தளபதியார் அவர்களே
வருக! வருக!!
மாண்புமிகு. K.N.நேரு அவர்கள்
கழக முதன்மை செயலாளர், உள்ளாட்சி துறை அமைச்சர்
மாண்புமிகு. ஐ.பெரியசாமி அவர்கள்
கழக துணைச் செயலாளர், ஊரக வளர்ச்சி துறை அமைச்சர்
மாண்புமிகு. R.S.ராஜகண்ணப்பன் அவர்கள்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர்கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர்.
திருமிகு. சுப.தங்கவேலன் அவர்கள்
முன்னாள் அமைச்சர், கழக செயல்திட்ட குழு உறுப்பினர்
திருமிகு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் MLA, அவர்கள்
மாவட்ட கழக செயலாளர், இராமநாதபுரம் மாவட்டம்
K.முருகவேல் Ex. MLA,
மாநில விவசாய அணி துணை செயலாளர்,
முதுகுளத்தூர் - இராமநாதபுரம் மாவட்டம்.
நாடும் நமதே... நாற்பதும் நமதே...